
www.tamilarangam.net

# மனிதம்



MANITHAM

SEPTEMBER + OKTOBER & NOVEMBER + DEZEMBER 1994

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 5 வருட பூர்த்தி !
# மனிதத்தின் அஸ்தமனம் ?

தொடர் நடுப்பக்கத்தில்....

www.tamilarangam.net


**SEPT. + OKT.**
**&**
**NOV. + DEC.**

**1994**

Zwei Monatlich Einmal

***Impressum***
***&***
***Herausgeber :***

Manitham
Postfach-212
3000 Bern -11
SCHWEIZ




# மனிதம்

**30**


***Redaktion :***
V.Logadas
M.Narendran
S.Ragavan
&
Manitham Redaktion komitee

***Abonnament :***
**22 SFr**
(pro Jahr)

***Post Konto :***
Manitham
3000 Bern-11
PC : **30-37152-1**

***Bank Konto :***
Schweizerische Kreditanstalt
3001 Bern
**Manitham**
**220348-70**

***Druck :***
Offset Druckerei AG
Förrlibuck str-66
8005 Zürich


## உள்ளே ....


- சுவிஸ் –அச்சமே மிகுதியாக....
- கருத்தாடல் –'சந்ததிக் கடமை'
- உளவியல் பார்வையில் நாசிசம்

**கவிதைகள் :**

- –ரவிவர்மன்
- –சோலைக்கிளி
- –தமயந்தி
- –இளைய அப்துல்லாஹ்
- –நதீஸ்வரன்
- –சுகன்

**நேர்காணல்**

- அ.மார்க்ஸ் உடன்....

**சிறுகதை :**

- கிறான் மரமும் பனை மரமும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸ்

# அச்சமே மிகுதியாக....

— சி.அமுதன்




வெளிநாட்டவர்மீது கூடிய அழுத்தத்தைப் பிரயோகிக்கக் கோரும் சட்ட அமுலாக்கத்திற்கு ஆதரவாக அளிக்கப்பட்ட வாக்குகளின் வீதமும், கன்ரோன்களும் ⇗

| கன்ரோன் | வாக்குவீதம் |
|---|---|
| ZH, TG, AI, SG | 80 வீதத்துக்கு மேல் |
| BS, BL, SO, SH, AG, LU, BE, ZG, SZ, GL, NW, TI, GR | 70–80 வீதம் |
| NE, VD, FR, VS, OW, UR | 60–70 வீதம் |
| JU | 50–60 வீதம் |

பனிக்கால விடுமுறையில் கொஸ்ராறிக்காவுக்குச் சென்றிருக்கும் சர்மிளா தனது வளர்ப்புப் பெற்றோருக்கு மறக்காமல் பக்ஸ் (fax) போட்டாள். டிசம்பர் 4ம் திகதி நிகழும் ZWANGSMASSNAHMEN IM AUSLÄNDER RECHT மசோதா சார்பான அபிப்பிராய வாக்கெடுப்பில் தனது பெற்றோரை பங்குகொள்ளுமாறு வற்புறுத்தியிருந்தாள். அந்தத் தேர்தலின் முக்கியத்துவத்தை சர்மிளா நன்றாகவே உணர்ந்திருந்தாள்.

பிறப்பால் சர்மிளா ஒரு மலையாளப் பெண். அவளுடைய 3 வயதில் சுவிஸ் தம்பதிகளால் தத்தெடுக்கப்பட்டாள். இதனால் இவள் இன்று ஓர் சுவிஸ் பிரஜை. உயர்நிலை பள்ளிப் படிப்பை முடித்து மருத்துவதாதியாக வேலை செய்கிறாள். ஏற்கனவே இரண்டு நண்பர்களோடு உறவு கொண்டு, முறித்து, இன்று மூன்றாவது நண்பன் (கொஸ்ராறிக்கா இளைஞன்) உடன் நட்பு வளர்க்கிறாள். இவள் நிறம் அசல் கறுப்பு. இதனால் இவள் சந்தித்த கசப்பான அனுபவங்கள் நிறைய. பல இனவாதிகளிடம் இவள் அகப்பட்டிருக்கிறாள். இவள் நிகழ்த்திய வாய்ச் சமரில் அவர்களை அதிர வைத்திருக்கிறாள். ஆயினும் நாட்டில் தொடர்ந்து அதிகரித்துவரும் இனவாத, நிறவாதப் போக்குகளைக் கண்டு சர்மிளா மட்டுமல்ல, இவளது வளர்ப்புப் பெற்றோர், இங்குள்ள திறந்த மனிதாபிமானமுள்ள சக்திகள் அனைவருமே அஞ்சுகின்றனர்; துடித்துப்போகின்றனர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இவர்களின் அச்சம் நியாமானது. இவ் வருடம் செப்ரம்பர் மாதம் இனவாதத்திற்கு எதிரான சட்டம் (ANTI RASSIMUS) ஒன்றை கொண்டுவரும் நோக்கிலான அபிப்பிராய வாக்கெடுப்பில் வெறும் 9.4 வீத அதிக வாக்குகளை மட்டும் பெற்றே இச் சட்டத்தை அரசால் நிறைவேற்ற முடிந்தது. இத்தகயை நிலைமையில் இன்று வெளிநாட்டவரின் உரிமைகளில் நிர்ப்பந்தத்தைப் பிரயோகிக்கக் கூடிய சட்ட அமுலாக்கத்துக்கான (ZWANGSMASSNAHMEN IM AUSLÄNDER RECHT) அரசு நடாத்தும் அபிப்பிராய வாக்கெடுப்பில் அரசுக்கு பெரும் ஆதரவாய் வாக்குக்கள் குவியவே வாய்ப்புக்கள் உண்டு. சர்மிளா உட்பட மனிதாபிமான சக்திகள் எல்லோருமே இதை அறிந்திருந்தனர். தேர்தல் முடிவும் இதையே உறுதி செய்தது.

72.8 வீத மக்கள் இந்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்து அரசுக்கு வெளிநாட்டவரின் உரிமைகளில் அழுத்தத்தைப் பிரயோகிக்க பூரண சுதந்திரம் அளித்துள்ளனர். அகதி அந்தஸ்த்தை துஸ்பிரயோகம் செய்பவர்களுக்கும், போதைப் பொருட்களில் வியாபார ஈடுபாடு உடையவர்களுக்கும் ஏதிராகவே இந்த மசோதாவைக் கொண்டு வருவதாக அரசு அறிவித்திருந்தது.

ZWANGSMASSNAHMEN IM AUSLÄNDER RECHT
வெளிநாட்டவர்களின் உரிமைகளில் கூடிய அழுத்தத்தைப் பிரயோகிக்கும் இம் மசோதாவின் உள்ளடக்கம் :

1. வதிவிட விசா இன்றி நாட்டில் இருப்பவரை பொலிசார் கைதுசெய்து சிறையிட முடியும். இவ்வாறு கைதுசெய்யப்படுபவரை அதிகபட்சம் மூன்று மாதகாலத்திற்கு சிறையில் வைத்திருக்கலாம். இந்தக் கால இடைவெளிக்குள் இவர் பற்றிய அடையாளப்படுத்தல்கள் உறுதிசெய்யப்பட்டு இவருக்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவரது அகதி அந்தஸ்துக்கான விண்ணப்பம் நிராகரிக்கப் பட்டதா, அல்லது நாட்டைவிட்டு வெளியேறக் கோரிய காலக்கெடு முடிவுற்றதா என்பதைப் பொறுத்து தண்டனை வழங்கப்படும்.

2. வெளியேற்றப்பட வேண்டிய நபர் முப்பது நாளிலிருந்து மூன்றுமாத காலம்வரை நாடுகடத்தப்படுவதற்கான தடுப்புக்காவலில் வைக்கப்படுவார். குறிப்பிட்ட நபரின் அடையாள அட்டை, கடவுச்சீட்டு போன்ற ஆதாரப்படுத்தல்கள் தாமதமாகும் காரணங்களைப் பொறுத்து இந்த காலவரையறை ஆறுமாத காலம்வரை நீடிக்க இடமுண்டு.

3. விசாக்காலம் முடிந்த நபர் குறிப்பிட்ட பகுதிகளைவிட்டு வேறுபகுதிக்குச் செல்லும் உரிமை வெளிவிவகார பொலிசாரினால் மறுக்கப்படலாம்; அல்லது குறிப்பிட்ட பகுதியில் இவர் தங்குவதற்கான உரிமை நீக்கப்படலாம்.

4. ஒரு வெளிநாட்டவரை எங்கும் எந்நேரமும், அதேபோல் வெளிநாட்டவரின் வீட்டை எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்நேரமும் சோதனையிடுவதற்கான பூரண உரிமையையும் இச் சட்டம் பொலிசாருக்கு வழங்குகிறது. காலவரை முடிந்த விசாவுடன் வசித்தாலோ அன்றி வதிவிடப் பத்திரத்தை ஆள்மாறாட்டம் செய்து வைத்திருந்தாலோ அந் நபர் கைதுசெய்யப்படுவார். விசாக் காலக்கெடு முடிந்த ஒருவரை (தேவாலய அடைக்கலம் போன்ற இடங்களில்) ஒழித்து வைத்திருப்பதும் சட்டவிரோதமாகக் கருதப்பட்டு, அடைக்கலம் கொடுத்தவரும் கைது செய்யப்படுவர்.

இதுபோன்ற மிகவும் பலமான அழுத்தங்களை வெளிநாட்டவருக்கு எதிராகப் பிரயோகிக்கும் இந்த புதிய மசோதாவை அரசு முன்மொழிந்த நாளிலிருந்து நீதித்துறை, மற்றும் மனித உரிமை அமைப்பைச் சார்ந்த பலர் கடுமையான விமர்சனத்தை முன்வைத்து எதிர்த்து வந்துள்ளனர்.

நடைமுறையில் இந்த மசோதானது வெளிநாட்வர்களின் உரிமைகளை மட்டுப்படுத்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

துவதோடு, விசேடமாக சிறையில் அடைக்கவும் வழிசெய்கிறது. இதுதான் பல்வேறுபட்ட விமர்சனங்களின் மையப் புள்ளியாக இருந்தது. இது சிறுபான்யோர் மீது பிரயோகிக்கப்படும் ஒரு உயர் பலவந்தமாகும். அகதி அந்தஸ்தை துஷ்பிரயோகம் செய்பவர்களுக்கும், போதைப் பொருள் வியாபாரத்தில் ஈடுபாடு உடையவர்களுக்கும் எதிராகவே இம் மசோதா கொண்டுவரப்படுகிறது என்று அரசு நியாயம் கற்பித்தாலும், இது அகதி அந்தஸ்து கோருபவர்களையே கடுமையாகப் பாதிக்கிறது. குறிப்பாக வெளிநாட்டவர்களுக்கு காலக்கெடு முடிந்த விசாவைக் காரணம் காட்டி ஓர் சமனற்ற பலமான அழுத்தத்தைப் பிரயோகிக்க இது வழிசெய்கிறது. ஆகவே இந்த மசோதா ஐரோப்பிய மனித உரிமை நீதிச்சபையின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று நீதித்துறை சார்ந்த பலரால் வற்புறுத்தப் படுகிறது. இதில் குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது பல்வேறுபட்ட மக்கள் கட்சிகளில் அங்கம் வகிக்கும் நீதிபதிகள், உயர் நீதிபதிகள் கூட தாம் சார்ந்த கட்சிகள் இம் மசோதாவை ஆதரித்து நின்றபோதும் இவர்கள் கட்சியின் முடிவை எதிர்த்து உள்ளும் புறமும் சுதந்திரமாய் கருத்துப்போர் நடாத்தினர்.

இனவாதத்திற்கு எதிரான தேர்தல் பிரச்சாரத்தில் தீவிர ஈடுபாடு காட்டிய சுவிஸ்வாழ் யூதசமூகங்களின் ஒன்றியம் இந்த மசோதாவை ஆதரித்து வாய்மூடிக்கொண்டது. இருப்பினும் இவர்களது சமூகத்தில் உள்ள இளைஞர்கள், நீதித்துறை சார்ந்தவர்கள் இதை எதிர்க்கவே செய்தனர்.

அதிகரித்துவரும் அகதிகள் படையெடுப்பையும், சட்டவிரோத நடவடிக்கைகளையும், போதைப்பொருள் வன்முறையையும் கட்டுப்படுத்தி நாட்டை அமைதிப்பூங்காவாக மாற்றவே இந்த மசோதாவைக் கொண்டு வருவதாக அரசு முன்மொழிந்தது. சமூக ஜனநாயக் கட்சி மற்றும் சுதந்திர இடதுசாரி ஜனநாயக அமைப்புக்கள் நீங்கலாக ஏனைய மக்கள் கட்சிகள் எல்லாம் இதை ஆதரித்தன. டிசம்பர் 4ம்திகதி இடம்பெற்ற இத் தேர்தலில் 72.8 வீத அமோக மக்கள் ஆதரவையும் பெற்றுவிட்டன. 1995 பெப்ரவரியில் இச் சட்டங்கள் அமுல்படுத்தப்படலாமென அரசு அறிவித்துள்ளது.

சாதாரண சர்மிளாவோ, பேர்ண் அரசின் உயர்நீதிபதியோ மற்றும் நீதித்துறை சார்ந்த அமைப்புக்களோ இந்த மசோதாவை கடுமையாக எதிர்த்ததிற்கான காரணம் என்ன?

இன்று உள்நாட்டில் அதிகரித்து வரும் அரசியல் நெருக்கடிகளும், அவை ஏற்படுத்தும் ஆழமான பாதிப்புக்களும் இனவாதிகளின் கரங்களை மேலோங்க வைக்கின்றன. இங்கு உருவாகும் எல்லாவிதமான நெருக்கடிகளுக்கும் வெளிநாட்டவர்களும் அகதிகளுமே காரணம் ; அவர்களை நசுக்கியும் விரட்டுவதன் மூலமும் தீர்வுகாணமுடியும் என்று இனவாதிகள் குரல் எழுப்புகின்றனர். இனவாத சக்திகளின் முழக்கங்களுக்கிடையே இத்தகைய சட்டங்கள் வரையப்படுவது அவர்களுக்கு பலம் சேர்ப்பதாகும். இதுவே நீதித்துறை மற்றும் மனித உரிமை அமைப்புக்களின் கருத்தாகும்.

"........... சட்டங்கள் இத்தகைய போக்கைக் கொண்டிருக்குமானால், நாமும் இதற்கு உடன்படுவோமாயின் சட்டங்களின் நம்பகத் தன்மை எவ்வாறு அமையும்?" என்று வினவுகிறார் பேர்ண் கன்ரோன் மக்கள் சட்ட வியலாளர். இந்தப் போக்குத் தொடரமுடியாதது என்று மீண்டும் வலியுறுத்தினார் அவர்.

இனவாதிகள் "வெளிநாட்டவருக்கும் அகதிகளுக்கும் சொர்க்கபூமி -சுவிஸ்" என்று முழங்கும் போதும், "எமது கப்பல் தாங்காது வெளிநாட்டவரே வேளியேறுங்கள்" என்று கோஷிக்கும் போதும் வெளிநாட்டவர் மீதும் அகதிகள் மீதும் தொடர்ந்து வன்முறைத் தாக்குதல்கள் நிகழும் இன்றைய நிலையிலும் அரசு ஒருபடி மேலே போய் இத்தகைய சட்டங்களை நிறைவேற்றுவது இனவாதிகளின் செயற்பாடுகளுக்கு பாதைகளை அகல திறந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டதாகாதா என்று மனித உரிமைவாதிகளும் சுதந்திரஜனநாயக அமைப்புக்களும் அரசுக் கெதிராக பலமான எதிர்ப்புக் குரல்களை எழுப்பு கின்றன. போராட்டங்களையும் நடாத்துகின்றனர்.

சுவிஸ் சனத்தொகையில் கிட்டத்தட்ட ஐந்து வீதமானவர்கள் வெளிநாட்டவர்கள் என்பதும் நாட்டில் வேலையற்றோரின் எண்ணிகை இரண்டு லட்சம் ஆகிவிட்டது என்பதும் இறுதிப் புள்ளிவிபரங்கள்.

இன்னொரு புள்ளிவிபரம்:
இனவாதிகள் சுவிஸில் அதிகரித்து வரும் அரசியல் பொருளாதார நெருக்கடிகளுக்கு வெளிநாட்டவர்களும் அகதிகளுமே காரணம்; அவர்கள் இங்கு வசதியான வாழ்க்கை வாழ்கிறார்கள்; எமது செல்வங்களை இவர்கள் சுரண்டுகிறார்கள் என்று கோஷிக்கும் போது.........

கன்ரோன் பாசல் (Basel) பொருளாதாரத் துறையைச் சேர்ந்த Rene Weber அவர்கள், டாக்டர் பட்டத்துக்காக எழுதிய ஆய்வுக் கட்டுரை ஒன்றில் வெளிநாட்டவரின் உண்மை நிலையை சரியாகப் பதிவு செய்துள்ளார்.

அதாவது சுவிஸ் நாட்டின் மொத்த வருடாந்த பொருளாதாரத்தில் அறுநூறு மில்லியன் பிராங்குகளை லாபமாக ஈட்டித் தருபவர்கள் சுவிஸ்சுக்கு வருகைதரும் வெளிநாட்டவர்களும், அவர்களுக்காக நிகழும் பல்வேறுவிதமான கொடுப்பனவுகளும் என்று குறிப்பிடுகிறார். இவர் 1990 ம் ஆண்டு எழுதிய இன்னோர் ஆய்வொன்றில்.....
"சுவிஸில் வாழும் ஒரு வெளிநாட்டுக் குடும்பம் ஒரு சுவிஸ் குடும்பத்தைவிட 2200 பிராங் அதிகமாக செலவு செய்கிறது, அல்லது ஒரு சுவிஸ் குடும்பம் ஒரு வெளிநாட்டுக் குடும்பத்தைவிட 2200 பிராங் குறைவாக செலவு செய்கின்றது" என்று குறிப்பிடுகிறார்.

சுவிஸில் வாழும் 12 லட்சம் வெளிநாட்டவர் களில் மூன்று தொடக்கம் மூன்றரை லட்சம் வரை இங்கு பிறந்தவர்களும் வளர்ந்தவர்களும் ஆவர். இந்த இளைய சமூகம் சுவிஸ்காரர் போலவே வளர்ந்திருந்தாலும் இவர்கள் இந்த சமுதாயத்தில் நிறைய நெருக்கடிகளைச் சந்தித்தவர்களாகவும், சந்திக்க வேண்டியவர்களாகவும் உள்ளனர். குறிப்பாக பாடசாலைகளில் இவர்களுக்கான வாய்ப்புக்கள் உயர்தகுதிகளின் அடிப்படை யிலேயே வழங்கப்படுகின்றன. பல கன்ரோன் களில் இத்தகைய பாகுபாடுகள் பலமாக இருக்கின்றன.

சுவிஸில் முதல் குடிவரவு வெளிநாட்டவர் களாகக் கருதப்படும் இத்தாலி, ஸ்பெயின் நாட்டுப் பிள்ளைகள் கூட இத்தகைய பாகுபாடுகளிலிருந்து இன்னும் மீண்டுவர முடியவில்லை. புதிய நாஜிகளைப் பொறுத்த வரை இவர்கள் வெளிநாட்டவர்கள் எனப்படுவ தைவிட "ஐரோப்பியர்கள், உயர்கலாச்சாரம் உடையவர்கள்" என்றெல்லாம் வர்ணிக்கப் படுகிறார்கள்.

ஆனாலும் சுவிஸ் தேசியத் தளத்தில் இவர்கள் இரண்டாம் படிநிலையில்தான். இவர்களுக்கு அடுத்த படிநிலையில்தான் அராபியர்கள், லத்தீன் அமெரிக்கர்கள் மற்றும் ஆபிரிக்கர்கள், ஆசியர்கள்.

எடுத்துக்காட்டாக, பேர்ண் நகர 93 ம் ஆண்டு அக்டோபர் மாத கல்வி ஆண்டில் சாதாரண பாடசாலைகளுக்கு பதிவு செய்த இத்தாலிய மற்றும் முன்னாள் யூகோஸ்லாவிய நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவிகளின் எண்ணிக்கை முறையே 464ம் 332ம் ஆகும். இதேநேரம் உயர்நிலைக் கல்லூரிக்கும், பல்கலைக்கழக முன்நிலைக் கல்லூரி களுக்கும் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை 87ம் 25ம் ஆகும்.

புதிய நாஜிகளால் ஐரோப்பியர்கள் எனப்படும் இத்தாலிய, ஸ்பானிய இளைய சமுதாய த்திற்கே இங்கு இத்தகைய பாகுபாடுகள் காணப்படுமாயின் சர்மிளா போன்ற கறுப்புத் தோல் கொண்ட பிறிதொரு சமூகம் எத்தகைய

↗55



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்புடன் ஆ.ர் குழுவினருக்கு,

கிருஸ்ணாவின் விமர்சனத்திற்கான பதில் கடிதமாக இதை உங்களுக்கு அனுப்புகின்றேன். பெண்ணோ கலாச்சாரக் காவியென்ற பிழையான கருத்தியலை பெண்ணின் படம் வலியுறுத்துகிறது என்ற குற்றச்சாட்டிற்குப் பதிலை நீங்கள் அளியுங்கள். என்னைப் பொறுத்தவரை நாளை பெண் என்ற முறையில் நான் எவைகளை எதிர்நோக்க வேண்டும் என்ற கவலையைப் பிரதிபலிப்பதாகவே அப் படம் அமைந்தது. நன்றி.

விமர்சகர் முரண்பட்டிருக்கும் இரு விடயங்களையும் கட்டுரையின் சாரம்சத்தின் அடிப்படையில் இருந்து பார்க்கும் போது அங்கு முரண்படுவதற்கு அதிக காரணங்கள் இல்லை என்பதைத் தெளிவாகவே பார்க்கலாம். அதற்காக காரணங்கள் இல்லாமலும் போகவில்லை. எனவே கட்டுரையாளன் கடமையில்.....

கிருஸ்ணாவைப் பொறுத்தவரை யாழ் கலாச்சாரம் பனங்கொட்டை, கிடுகுவேலித்தன வடலிக் கலாச்சாரம். ஆகவே தமிழர் கலாச்சாரம் முற்றும் முழுவதுமாகவே அதுதான். ஏனைய தமிழ் மக்கள் வாழ் பிரதேசங்களும் இதனில் அடங்குமோ? இல்லை, அவர்களுக்கு வேறு கலாச்சாரமோ? இந்த வடலிக் கலாச்சாரம் தமிழர் கலாச்சாரத்தின் இழிவான கூறு என்ற கருத்திலா அன்றேல் அதுவே முழுமையான கலாச்சாரமெனச் சாடுகிறாரா? லண்டன், கனடா போன்ற நம்மவர்கள் வாழும் நாட்டில் முற்போக்கானவர்கள் கலாச்சாரச் செழுமை, மாற்றங்களுக்கு உட்படாமல் "பனங்கொட்டைகளாகவே" இருப்பதால், இவர் பிழையெனக் கருதும் அக் கலாச்சாரத்தை அங்குள்ள தமிழ் இளவயதினருக்கு நாம் போதிக்கலாம், அது சரியாகவே அவருக்குப் படுகிறதா? குழப்பமாகத்தான் இருக்கிறது.

கட்டுரையின் மையக்கருத்து, ஓட்டம், அக்கட்டுரை எழுதப்பட்ட நடை என்பவற்றைக் கவனிக்கும் போது மதம் "மாறியவர்களுக்குப் போதனையல்ல" என்பது விளங்கும். கிட்டத்தட்ட பேச்சு வழக்கிலேயே சிறிது நய்யாண்டிச் சுவையுடன் எழுதப்பட்ட கட்டுரைக்கு, தடிப்பான மாற்றுக் கலாச்சாரக் கண்ணாடி அணிந்த விமர்சனம் முட்டையில் மயிர்பிடுங்கும் விவாதமாகவே எனக்குப் படுகிறது. முற்போக்கென்றால் என்ன? கலாச்சாரம் என்றால் என்ன? என்ற கேள்விகளுக்கான பதில்களை, விமர்சனத்திற்கான பதிலில் விமர்சகர் எதிர்பார்க்க மாட்டாரென நம்புகின்றேன்.

நாம் எங்கிருந்து வந்தோம், எங்கிருக்கின்றோம், எங்கே செல்ல முனைகின்றோம் என்ற அடிப்படையிலேயே நமது கலாச்சாரம் பற்றியும் இளவயதினருக்குக் கட்டாயம் கூறத்தான் வேண்டும். அது சரியானதா பிழையானதா என்பதனை அவர்கள் தீர்மானித்து, நல்ல கூறுகளை அவர்கள் உள்வாங்கிக் கொள்ளலாமல்லவா?. விட்டுக் கொடுப்பதென்பது சமரசமல்ல. நெருக்கத்தினூடாக இளவயதினருடன் இணைவதற்கான வழியாகவே அங்கு முன்வைக்கப்பட்டது. எந்தவொரு நாடோ அன்றேல் இனமோ தனது கலாச்சாரத்தை முற்றும் முழுவதுமாக இழக்குமாயின், உலக அரங்கினில் அது தன் குரலையே இழந்து விடும். இதுவும் கவனிக்கப்பட வேண்டிய கருத்தல்லவா?

முற்போக்கை கேள்விக்குறியாக்கியுள்ளார். அவர் குறிப்பிட்ட ..... மகளே/மகனே உன்சமத்து நான் முற்போக்கானவன்?.... என்ற வசனத்தில், எனது மனைவி பிள்ளைகளுக்கு சுதந்திரம் "கொடுத்துள்ளேன" என்று கடமையில் இருந்து நழுவுவதற்காக முற்போக்கியல் பேசுபவர்களைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குறிப்பிடவே அவ் வசனம் இங்கு வந்தது. கேள்விக்குறியுடன் வரவேண்டிய அது ("முற்போக்கு" என்றவாறு வரவேண்டிய சொல்) அடைப்புக்குறி தவற, கட்டுரையில் நூலாக இழையோடிய நகைச்சுவைத் தொனி அங்கு சரியாக விழாததால் விபரீதமாகிவிட்டது. அதற்கான பொறுப்பையும் அப் பிழையையும் கட்டுரையாளனாய் ஏற்றுக் கொள்கின்றேன். அது அங்கு நகைச்சுவையாகவே குறிப்பிடப்பட்டது.

நன்றி!

–தாஸ் –

# இரு கடிதங்கள்

**மனிதம்–28 இல் வெளிவந்த தாஸ் இன் 'சந்ததிக் கடமை' என்ற கட்டுரைமீது (இதழ்–29 இல்) கிருஸ்ணா வைத்த கருத்துக்கள் குறித்து**

அன்புடன் மனிதம் ஆசிரியருக்கு,

அநேக வணக்கங்கள். தங்களது 28, 29 இதழ்களைக் கண்ணுற்றேன். அதில் தாஸ் என்பவர் எழுதிய 'சந்ததிக் கடமை' என்னும் கட்டுரையும் அதன் பின்பு 29 வது இதழில் வாசகர் 'கிருஸ்ணா' என்பவர் எழுதிய விமர்சனம் பற்றியும் எனது சில கருத்துக்களை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சில குறைபாடுகளை தன்னகத்தே கொண்டுள்ள போதிலும் 'சந்ததிக் கடமை' கட்டுரை பயனுள்ள ஒன்றே. தாஸினது இவ்வாறான முயற்சிகள் தொடர வேண்டும். உளவியல் விஞ்ஞானம் இன்று வளர்ச்சியடைந்துள்ள காலத்தில் குழந்தைகள் பற்றிய அதுவும் தமிழ்ச் சிறார்கள் பற்றிய உளப்பகுப்பாய்வுகள் இன்றைய தேவையும் கூட. உளவியல் விஞ்ஞானம் இன்று தீர்க்கப்படாத பல சிக்கலான பிரச்சனைகளுக்கு தீர்வுகாண வழிகோலியுள்ளதாயினும், அதுவே சர்வரோக நிவாரணியல்ல. அதனாலும் தீர்வுகாணப்படாதவை பல. அதனுடன் ஏனைய விஞ்ஞானத் துறைகளும் இணையும்போது பலதரப்பட்ட சிக்கல்கள் நீங்குகிறது. இந்த எச்சரிக்கை உணர்வுடன் பகுப்பாய்வு செய்வோமாயின் நம் பார்வை இன்னும் வீச்சமுறுவதுடன் முதிர்ச்சியையும் காட்டும் என்பது என் எண்ணம்.

இந்தவகையில், வெளிவந்த கட்டுரையில் காணப்படுகிற சில பிரச்சனைகளை நாம் நோக்குவோம்.

கட்டுரையில் காணப்படும் முதலாவது குறைபாடு என்னவென்றால், எழுதியவர் (தாஸ்) இங்குள்ள தமிழ்ச் சமூகத்தின் –குறிப்பாக பெற்றோரின்– அவலத்தில் பங்குகொள்வது போல் அவர்களில் ஒருவராகிவிட்டு அப்பப்ப வெளியே போய் நின்று சனத்தைக் கோபித்துக் கொள்கிறார். இது அவரே குறிப்பிடுவது போல் சமுதாய இடைவெளியா அன்றேல் உண்மை கசக்கிறதா என்றும் கொள்ளலாம். ஆயினும் அவரது அந்நியப்பட்ட எழுத்து வாசகர் மனதில் எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உளவியல் அடிப்படையில் ஆராயப்புகும் தாஸ் அவர்களுக்கு இது புரியாததல்ல. 'நாம் வளர்ந்த சூழ்நிலை வேறு, எங்கள் சமூக அமைப்பு வேறு' என பாகுபடுத்தி விளங்கிக் கொள்ள முடிந்தவருக்கு புலம்பெயர்ந்து வாழும் எம்மவரின் அவலங்களை அனுதாபக் கண்ணோட்டத்துடன் ஏன் அணுக முடியாமல் போயிற்று. 'குற்ற உணர்வில் உங்களுக்காகத் தானே உழைக்கிறேன்..... சேர்க்கிறேன்' என்பதை 'பினாத்தல்கள்' என நையாண்டி பண்ணாமல் அவர்களது மன அவலங்களையும் நோக்குமாறு வேண்டுகிறேன். அத்துடன் நமது சமூக, கலாச்சார, மனோவியல் தன்மைகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலம்பெயர்ந்த சூழலில் நாம் எதிர்நோக்கும் சிக்கல்களையும் பருண்மையாக வைத்து ஆய்தல் நன்று. அதைவிடுத்து நமக்கு தெரிந்த கொஞ்சத்தை வைத்துக் கொண்டு (நம்மை உயர்வாக எண்ணிக் கொண்டு) சனத்துக்கு புத்திபுகட்டப் போவது பலனளிக்காது. எதிர்வரும் காலத்தில் அத்தகைய அகவிருப்பங்களைக் கடந்த முதிர்ச்சியை நோக்கிய ஆய்வுகளை நாம் தாஸிடம் இருந்து எதிர்பார்க்கலாம்.

அடுத்து தாஸின் கட்டுரை தொடர்பான கிருஸ்ணாவின் விமர்சனத்திற்கு வருவோம். இங்குள்ள எம்மவரின் அவலங்களை அனுதாபக் கண்ணோட்டமற்று அணுகும் போக்கிலும், பண்பாட்டு விடயங்களை பொறுப்புணர்வற்று விமர்சிக்கும் போக்கிலும் தாஸ் எட்டடி பாய்ந்திருந்தால் கிருஸ்ணா என்பவர் பதினாறு அடி பாய்ந்துள்ளார். கிருஸ்ணாவின் விமர்சனத்தின் சாராம்சமே தாஸிடம் 'கறார்' காணாது என்பதே. இனி ஒவ்வொன்றிலும் எனது அபிப்பிராயங்களை கூற முனைகிறேன்.

முதலில் 'சந்ததிக் கடமை' கட்டுரைக்கு தேர்ந்தெடுத்த படம் பொருத்தமற்ற ஒன்றாக, சந்ததிக்கடமை பெண்ணுக்குரிய ஒன்றாக கருதப்படும் பார்வையை வலுப்படுத்த களம் அமைத்துவிடும் என்று குறிப்பிடுகிறார். உண்மையில் கிருஸ்ணாவுக்குப் படுவது போல் ஒரு சிலருக்குப் பட சாத்தியம் உண்டென்ற போதிலும், இருவேறுபட்ட கலாச்சாரச் சூழலில் சிக்கியுள்ள சிறார்களில் குறிப்பாக பெண் சிறார்களே பாதிப்புக்குள்ளாவது அதிகம் என்றபடியாலும் சிறார்களைப் பற்றியே அக் கட்டுரை பேசியுள்ளதாலும் அந்தப் படம் பொருத்தமானதாகவே எனக்குப் படுகிறது. கட்டுரையைப் படித்து விட்டு மீண்டும் அந்தப் படத்தைப் பார்க்கும் பொழுது அச் சிறுமியின் கண்கள் பல செய்திகளைப் பேசிவிடுகின்றன.

அடுத்து எமது கலாச்சார விழுமியங்களும் அதனுடன் தொடர்புடைய பாலியல் ஒடுக்குமுறைகளும் அவற்றுடன் பின்னிப்பிணைந்த பெண் ஒடுக்குமுறைகளும் மிகவும் சிக்கலான பரிமாணங்களைக் கொண்டவையே. போதாக்குறைக்கு இவற்றுடன் மத நம்பிக்கை சம்பந்தமான விடயங்களும் கலந்துள்ளன.

இதில் நமது மக்கள் கொண்டுள்ள உணர்வுகள் ஆழமானவை. இவைபற்றி கருத்துத் தெரிவிக்கையில் அல்லது அவற்றை விமர்ச்சிக்கப் புறப்படுகையில் மிகுந்த பொறுப்புணர்வும் சகிப்புத் தன்மையும் அவசியமாகும் தடலடியான பேச்சுக்களும், தீர்வுகளும் தற்திருப்த்தியை வேண்டுமானால் அளிக்கலாம். ஆனால் அது ஆரோக்கியமானதல்ல. கலாச்சார மத விடயங்களில் நிர்ப்பந்தமும், திணிப்பும், அடக்குமுறையும் எத்தகைய பயனைத் தந்தன என்பதற்கு சோவியத்தின் படிப்பினைகள் நம் கண்முண்ணே வரலாறாய் நிற்கிறது. எழுபது ஆண்டுகளுக்குப் பின் மக்கள் மீண்டும் தேவாலயங்களைத் திறந்து வழிபடுவதைப் பார்க்கிறோம். இவை உணர்த்துபவை என்னவென்றால், முற்போக்காளர்கள் என்று கருதிக் கொள்பவர்களும் நம்பும் கோட்பாடுகளையும் அளவு கோல்களையும் விட மனிதனின் உணர்வுகள் ஆழமானவை விசாலமானவை என்பதையே. இந்த அடிப்படையில் கிருஸ்ணாவின் கலாச்சாரம், பாலியல் குறித்த பார்வைகள் குறுகியதாகும் மேம்போக்கானதாகவும் தடலடியானதாகவும் உள்ளது என்றே கருதுகிறேன்.

கிருஸ்ணாவின் பார்வையில் மறைமுகமாக இழையோடுகின்ற விடயம் எமது கலாச்சாரத்தையே இழிவாகக் கருதும் போக்காகும். இதற்கு அர்த்தம் நான் எமது கலாச்சாரத்தை அப்படியே ஏற்றுக் கொள்கிறேன் என்பதல்ல; அதனது சரியான, தவறான அம்சங்களைக் கடந்து ஆதரிக்கிறேன் என்பதல்ல. மாறாக சமூகத்தில் யதார்த்தத்தில் இருக்கும் கலாச்சாரத்தில் இருந்துதான் உயர்ந்ததொரு கலாச்சாரம் உருவாக முடியும் என்பதே எனது நிலை. இத்தகைய பார்வை கொண்டிராமல் செயற்கையாக சரியான கலாச்சாரத்தைப் படைத்து விடலாம் என்ற தொனியும் அவரது கருத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காணப்படுகிறது. அதனால்தான் சரியான கலாச்சாரம் என்பது என்ன என்று அறிவுரை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். அவர் தன்னளவில் எது சரியான கலாச்சாரம் எது பிழையான கலாச்சாரம் என்பதை அறிந்து தெரிந்துதான் மற்றவர்களுக்கு அறிவுரை கூறப்புறப்படுகிறாரா என்பதை அவர் ஒரு தடைவை தன்னைத் தானே கேட்டுக் கொள்வது நன்று.

கட்டுரையாளர் 'செக்ஸ் பற்றிய' விளக்கங்களை (இளவயதினருக்கு) அவர்களுக்குக் கூறி பின்விளைவுகளை விளங்கப்படுத்தலாம். 'பூடகம்' பரிசோதனைக்குத்தான் வழிவகுக்கும் என்றும் எமது கலாச்சாரம் - இங்குள்ள கலாச்சாரம் என்பவற்றை விளங்கப்படுத்த வேண்டிய கடமையையும் வலியிறுத்தி, இளவயதினர் எமது நடைமுறைகளை ஏற்பார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது என்றும் எச்சரிக்கிறார். அதாவது செக்ஸ் பற்றி அறிதலைவிட அறியாமையால் வரும் கேடுகளே அதிகம் என்பதையும், எமது கலாச்சாரம் இங்குள்ள கலாச்சார நடமுறைகள் என்ன என்பதை விளங்கப்படுத்துவதுதான் நமது கடமை- தேர்ந்தெடுத்தல் அவர்களின் உரிமை என்பதையும், திணிப்பு எந்தவிதத்திலும் செய்யப்படக்கூடாத ஒன்று என்பதையும் கட்டுரையாளர் சரியாகவே குறிப்பிடுகிறார். இதனை மேலோட்டமான வாசிப்பில் புரிந்து கொண்டு எமது சலாச்சாரத்தைச் சாடுவதில் தற்திருப்தி காண்கிறார் கிருஸ்ணா. பிற்போக்கோ? முற்போக்கோ? எப்படியிருப்பினும் எம்மவர்களின் உயிரும் சதையும் உணர்வுமாகக் கலந்துவிட்ட ஒன்று. புறநிலை யதார்த்தமான ஒன்று கிருஸ்ணாவுக்கு 'நூதனசாலையில் வைக்கப்பட்டிருக்கும் பொருள்' போல் தெரிகிறது. இது ஒரு சமூகத்தின் காலாச்சாரத்தை இழிவாகக் கருதும் உச்சம் எனலாம்.

அடுத்து, இங்கு வளர்ந்த இளவயதினர் முழுமையாக எங்கள் கோட்பாட்டை (அது சரியா, பிழையா என்பது வேறுவிடயம்) ஏற்பார்கள் என்பது கேள்விக் குறியே.

"இவர்களது நடைமுறையை நாங்கள் ஏற்பது என்பதும் கேள்விக்குறியே" என்று தாஸால் எழுதப்பட்ட எழுத்துக்களில் நாம் கேட்பது இங்குள்ள பெற்றோர்களின் குரலையே. இதுவே புலம்பெயர்ந்துள்ள பெற்றோரின் அவலம். இதற்கு கட்டுரையாளர் சொல்லும் 'தீர்வு விட்டுக் கொடுங்கள்' என்பதே. விட்டுக் கொடுப்பு இல்லையேல் இன்னும் துன்பம் நேரும் என்கிறார். இந்த அனுபவங்களை நாமும் கண்ணுறுகிறோம். இந்த அடிப்படையில் இதனை நாம் புரிந்து கொள்ளலாம். (இந்த அவலம் கலைச்செல்வனின் சிறுகதை ஒன்றில் சிறப்பாகச் சொல்லப்பட்டிருக்கிறது -'அ,ஆ,இ' சிறப்பிதழ்) இந்த இடத்தில் இவற்றின் சரி தவறுகளை கட்டுரையாளர் ஆராயப்புகவில்லை. இவ்வாறு ஏனைய விடயங்களையும் நுணுகி ஆராய்ந்தால் பொருத்தமற்ற முறையில் விமர்சனம் தலைகீழாக்கப்பட்டிருப்பது புரியும் - உதாரணமாக முற்போக்கு பற்றிய கருத்து, விட்டுக் கொடுப்புகள் பற்றிய கருத்துக்களைக் குறிப்பிடலாம்.

பாலியல் பற்றிய குற்ற உணர்வுகள் கட்டமைக்கப்பட்டிருப்பது, பால் ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம் என்பவையெல்லாம் எமது சமூகத்திற்கு மட்டுமே உரிய பிரத்தியேகப் பிரச்சனைகள் அல்ல. இவை எல்லாச் சமூகங்களிலும் காணப்படவே செய்கிறது. இன்றைய உலக ஒழுங்கமைப்பே அவ்வாறுதான் இருக்கிறது. இதற்கு அர்த்தம் அந்த சமூகங்களுக்குரிய தனித்துவத்தை மறுப்பதாகாது. இன்னும் குறிப்பாக சொல்லப் போனால். இந்த தனித்துவங்களுக்கே உரிய முறையில் அவை கட்டமைக்கப்படுகின்றன என்று கூறலாம். இந் நிலையில் செய்யக் கூடியதெல்லாம் ஒப்பீடே. இதைவிடுத்து ஒப்புக்கு 'சில சீரழிவுகள்' இருப்பதாக ஒத்துக் கொண்டு இங்குள்ள கலாச்சாரத்தை உயர்வாகவும் நமது கலாச்சாரத்தை இழிவாகவும் கருதும் மனோபாவத்தை கிருஸ்ணா போன்றவர்கள் களைய வேண்டும். இது ஒருவகையில் ஐரோப்பியர்களிடம் மூன்றாம் உலக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாடுகளைப் பற்றி கட்டமைக்கப்பட்டுள்ள இழிவான பார்வைக்குப் பலியாகும் நிலையே என்று அஞ்ச வேண்டியுள்ளது. இரு கலாச்சாரங்களுக்கிடையில் ஏற்படும் முரண்களில் தங்களின் வாழ்வை பற்றிக் கொள்ள, காப்பாற்றிக் கொள்ள எத்தனிக்கும் புலம்பெயர்ந்தவர்களின் அவலத்தை 'வடலிக் கலாச்சாராம்' என்று கிண்டல் பண்ணுவதும் தடலாடியாக காசா? கலாச்சாரமா? என்று கேட்டு தீர்வுகளை வழங்குவதும் எந்தப் பயனையும் தராது. ஏனெனில் தீர்வுகள் வழங்குவது சுலபம்.

இறுதியாகச் சில....

சந்ததிக்கடமை என்ற தாஸின் கட்டுரை மீதும் அதற்கான கிருஸ்ணாவின் கருத்துக்கள் மீதும் ஒரு எதிர்வாசிப்பு செய்ய முயன்றதன் விளைவே எனது இக் கருத்துக்கள். இவை முற்றிலும் சரியானவை என்பதல்ல எனது வாதம். இவற்றையும் கடந்து நான் வலியுத்த விரும்பியது, மேற்கண்ட பிரச்சனைகளில் அகநிலை விருப்புகளோ, ஒற்றைப் பரிமாண பார்வைகளோ, சகிப்புத்தன்மையற்ற பார்வைகளோ கூடாது என்பதுதான். எமக்குத் தெரிந்த அறிந்த கொஞ்சத்தை வைத்துக் கொண்டு தடலடியான தீர்வுகளை வழங்கும் அசட்டுத்தனம் கூடாது என்பதற்காகத்தான். இந்தவகையில் நிலவும் கலாச்சாரத்திற்கு சற்று கூடுதல் அழுத்தம் கொடுத்து எழுத்து அமைந்து விட்டதையும் கவனத்தில் கொள்ள வேண்டுகிறேன்.

இன்றைய தேவை : சகிப்பு....தேடல்....புரிதல்!

- R.இராமநாதன்
(Bern)

## நிர்மூலமாக்கப்பட்ட பின்னானவை

சுகன்

பயணப்பை, தொலைதூர முகவரிகள்

அநாமதேய விமானத் திக்கற்

சட்டவிரோத எல்லைகடப்பில்
முள்ளந்தண்டு எலும்பு முறிவிற்கான
x-கதிர் படங்கள்

நாளொன்றிக்கு 43,70 பிராங் வீதம்
365 நாள்களுக்கான
அகதி உதவிப்பண அங்கீகாரக் கடிதம்

பயணச் சீட்டின்றி பயணித்ததற்கான
தண்டத்தொகை ரசீது
(எளியவடிவம் : பிடிச்சு எழுதிப்போட்டான்)

அகதிக்கான தகுதியுனக்கில்லையென
நிராகரிக்கப்பட்ட பதிவுத் தபால் அட்டை

இன்னொருவரின் விசாவில் வேலை செய்ததற்கான
மாதாந்த சம்பளச்சீட்டு

இன்னொரு தகப்பனின் பெயரிலான
புதிய அகதிப்பதிவு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**?தற்போது தமிழ்நாட்டில் K.டானியலின் கதைகள், நாவல்களுக்கு மதிப்பளிக்கப்பட்டு மறுபதிப்பு செய்யப்படும் தாற்பரியம் பற்றி கூறுவீர்களா?**

டானியலின் எழுத்துக்கள் கிட்டத்தட்ட பத்து ஆண்டு காலமாக தமிழில் அச்சேற்றப்படுகின்றன. முதலில் அவர் சொந்தச் செலவில் நண்பர்களின் உதவியோடு 'பஞ்சமர்' நாவலை இங்கு அச்சிட்டு வெளியிட்டார். பின்னர் அவற்றின் தேவை கருதி நாங்கள் அவருடைய மூன்று நூல்களை வெளியிட்டோம். இப்போது தமிழ்நாட்டில் பல்வேறு தீவிர அரசியல் செயல்பாடுகளுடன் இணைந்து நிற்கக்கூடிய சிறு வெளியீட்டாளர்கள் தாங்களே முன்வந்து டானியலின் நூல்களை வெளியிடக்கூடிய ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. இதனுடைய பின்னணியை விளங்கிக்கொள்ள ஒருசில அம்சங்களை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். இலங்கை, இந்தியா போன்ற சமூகங்கள் சாதீயச் சமூகங்களாக இருக்கின்றன. இங்கே வர்க்கத்தின் இடத்தில் வர்ணம், சாதி ஆகியவற்றின் செயற்பாடுகள் இன்றும் குறிப்பிடத்தக்களவு செயலூக்கத்துடன் இருக்கின்றன. ரஷ்யா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் நடைபெற்ற பல்வேறு மாற்றங்களுக்குப் பிறகு நாம் மாக்சியமாகப் புரிந்துகொண்ட பல்வேறு அம்சங்களைப் பற்றிய சுய விமர்சனத்துடன் பிரச்சனைகளை அணுகவேண்டியிருக்கிறது. இந்தச் சூழலில் இந்தியா இலங்கை போன்ற சாதீயச் சமூகங்களில் சாதி அடிப்படையில் இச் சமூகங்களை விளங்கிக் கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்வதும், சாதியப் போராட்டங்கள் நடத்துவதென்பது இந்தியாவில் வர்க்கப் போராட்டத்தை நடத்துவதன் ஒரு வடிவம்தான் எனப் புரிந்து கொள்வதும் இன்று நமக்கு அவசியமாகியுள்ளது.

இத்துடன் ஒன்றை சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்தியாவில் மண்டல் குழு அறிக்கை என்கின்ற பிற்படுத்தப்பட்ட சாதிகளுக்கான இடஒதுக்கீடு –வேலை மற்றும் கல்வி ஆகியவற்றில் – செய்வதற்கான ஒரு அறிக்கையை அரசு அமுல்படுத்த முயன்றபோது பார்ப்பனர், சத்திரியர், வேளாளர் போன்ற முற்படுத்தப்பட்ட சாதியினர் அதற்கெதிராகப் பெரிய போராட்டத்தை நடத்தி அதை நிறுத்துகின்ற அளவுக்குச் சென்றனர். இதன் பின்விளைவாக பிற்படுத்தப்பட்டவர்கள் மத்தியில் ஒரு விழிப்புணர்வு ஏற்பட்டது. தொடர்ந்து டாக்டர் அம்பேத்கர் நூற்றாண்டு விழா தாழ்த்தப்பட்ட, தீண்டத்தகாத சமூகங்கள் மத்தியில் ஒரு எழுச்சியை ஏற்படுத்தியது. இந்தியச் சிந்தனையாளர்களில் முதன்மையானவராகக் கருதப்படக்கூடிய டாக்டர் அம்பேத்காரின் நூல்கள் இன்று மறுபதிப்புச் செய்யப்பட்டு, இந்தியா எங்கும் மறுவாசிப்புச் செய்யப்படும் ஒரு நிலை ஏற்பட்டுள்ளது.

# நேர்காணல்



தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் நிறப்பிரிகை யின் ஆசிரியர் குழுவில் ஒருவரான அ.மார்க்ஸ் சென்ற இளவேனிற்கால விடுமுறைக்காலத்தில் முதன்முதலாக ஐரோப்பியப் பயணத்தை மேற்கொண்டு சுவிஸிற்கு வந்திருந்தபோது மனிதம் குழு சார்பில் பல தடவைகள் அவருடன் உரையாடினோம்; பல அனுபவங்களையும், கருத்துக்களையும் பரிமாறிக் கொண்டோம். அவர் சுவிஸை விட்டுச் செல்லும்போது மனிதத்திற்கு கொடுத்திருந்த நேர்காணலை இங்கு தேவையும், அவசியமும் கருதி முழுமையாய்ப் பிரசுரிக்கிறோம்.

– ஆர் குழு–



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாழ்த்தப்பட்டவர்களும் பிற்படுத்தப்பட்டவர்களும் இணைந்து அரசியலைக் கைப்பற்ற வேண்டிய அவசியம் குறித்து இன்று பேசப்பட்டு, ஒருசில இடங்களில் பாராளுமன்ற அரசியலில் இத்தகைய இணைவும் ஏற்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். அம்பேத்கார் நூற்றாண்டை ஒட்டி ஏற்பட்ட எழுச்சி என்பது தமிழகத்தில் குறிப்பிடத்தக்கதாக உள்ளது. தலித் இலக்கிய முயற்சிகள் தவிர 'தலித் பண்பாட்டுப் பேரவை' போன்ற அமைப்புகள் உருவாக்கப்பட்டு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இன்று சிறு பத்திரிகையாயினும் சரி, இலக்கியம் பற்றிக் கரிசனை கொள்ளும் யாராயினும் சரி தலித் இலக்கியம் பற்றிப் பேசவேண்டிய ஒரு தவிர்க்கவியலாத நிலை ஏற்பட்டுள்ளது. 'நாங்கள்தான் முதலில் தலித் இலக்கியம் பற்றிப் பேசினோம், நீங்கள் பேசவில்லை' என்றெல்லாம் போட்டி போட்டுக்கொண்டு சொல்லவேண்டிய ஒரு நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ள ஒரு சூழலில், டானியலின் எழுத்துக்கள் மீண்டும் அச்சேற்றப்படுகின்றன. கிட்டத்தட்ட நாலு நூல்கள் அச்சிடப்பட்டு வெளிவந்திருக்கின்றன. மேலும் இரண்டு நூல்கள் அச்சாக்கத்தில் இருக்கின்றன. இது இந்த ஒடுக்கப்பட்ட மக்களின் எழுச்சியோடு இணைந்து புரிந்து கொள்ளவேண்டிய அம்சம். டானியலின் எழுத்துக்களை நாங்கள் அச்சிடுவதென்பது ஈழத்தில் இந்தப் பிரச்சனை இன்று எந்தளவில் இருக்கிறது என்பது குறித்த பார்வையின் அடிப்படையில் என்பதைக் காட்டிலும் எங்களுடைய தேவை கருதி எங்களுடைய சூழலின் அவசியம் கருதி இந்த முயற்சிகள் இன்று மேற்கொள்ளப்படுகின்றன என்பதுதான் உண்மை.

**? அண்மையில் கனடாவுக்கு விஜயம் செய்திருந்த எழுத்தாளர் சுந்தரராமசாமி K.டானியலின் எழுத்துக்கள் நிலைக்கக்கூடியதல்ல என்ற ஒரு கருத்தை உதிர்த்திருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

நானும் இதனைக் கேள்விப்பட்டேன். அவர் இந்தக் கருத்தைச் சொன்னவுடன் அங்கிருந்த புலம்பெயர்ந்த தமிழ்மக்கள் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் அதற்குப்பின் சுந்தரராமசாமி இது எனது சொந்தக் கருத்து என்று நழுவியதாகவும்கூட கனடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகையில் படித்தேன். சுந்தரராமசாமியின் பேட்டியொன்று சமீபத்தில் 'தினமணிக்கதிரில்' வெளிவந்திருந்தது. அந்தப் பேட்டியில் அவர் இன்னும்கூட எழுத்துக்கள் பற்றிய மிகவும் பிற்போக்கான பார்ப்பனிய சிந்தனையில் மூழ்கியிருக்கிறார் என்பது வெளிப்பட்டது. எழுத்து என்பது மிகவும் புனிதமான செயல் என்றும், தான் கவிதை எழுதும்போது ஒரு பெரிய லஹரியில் மிதந்து கொண்டு எழுதுவதாகவும் அவர் குறிப்பிட்டிருந்தார். எனவே எழுத்து என்பது இறைவனுடைய திருவருளால் அனுசரிக்கப்பட்டவர்கள் அனுபூதி கொண்டு எழுதும் உன்னதமான விசயம் என்கின்ற கோட்பாட்டைத் தாங்கிக் கொண்டிருப்பவர் சுந்தரராமசாமி. அவருடைய மிகவும் நவீனமான எழுத்து என்று சொல்லப்படுகின்ற 'ஜே.ஜே சில குறிப்புகள்' என்பதில்கூட எத்தகைய பிற்போக்குத்தனமான பார்ப்பனிய சிந்தனைகள் ஊடாட்டமாக நிலவுகின்றன என்பதை பிரமீள் போன்றவர்கள் அந்த நூல் வெளிவந்த காலத்திலேயே தோலுரித்துக் காட்டியுள்ளதை இந்த இடத்தில் நினைவூட்ட விரும்புகிறேன். அவர் பிறப்பால் பார்ப்பனர் என்பது மட்டுமல்ல, ஒரு பெரிய வியாபாரியாகவும் எல்லாவிதமான அரசியல் நடவடிக்கைகளிலும், ஏன் இலக்கிய நடவடிக்கைகளிலிருந்தும் கூட மிகவும் ஒதுங்கியவராகவும் இருந்து கொண்டு ஒரு மேட்டிமைத் தன்மையுடன் செயற்படக்கூடியவர். இந்த நாட்டின் ஆறில் ஒரு பங்கு மக்கள் மிகவும் அடிப்படையான மனித உரிமைகள் கூடப் பறிக்கப்பட்டு ஒடுக்கப்பட்டு பல்வேறு விதமான இழிநிலைகளுக்கு ஆளாகிக் கொண்டிருப்பது பற்றிய கரிசனையுடையவராக இருப்பாரென்று நாம் எதிர்பார்ப்பது தேவையற்ற ஒன்று. எனவே அவர் டானியலின் எழுத்துக்கள் பற்றி இத்தகைய கருத்துக் கொண்டிருப்பதில் வியப்பில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் காந்தியின் எழுத்துக்கள் வெளிவந்தன. டாக்டர் அம்பேத்கரின் எழுத்துக்களும் அதேகாலத்தில் வெளிவந்த போதிலும் அன்று அவை உலக அளவிலோ இந்திய அளவிலோ அல்லது ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியிலோ பெரியளவில் வரவேற்புக்குள்ளானது என்று சொல்ல முடியாது. சிந்தனையாளர்களையும் பத்திரிகையாளர்களையும் பற்றியும் பார்ப்பனிய ஆதிக்கத்திலுள்ள இந்த தொடர்பு சாதனங்கள் பற்றியும் நான் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அன்று காந்தியின் புத்தகங்கள் தான் ஏராளமான அளவில் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டு எல்லோராலும் வாசிக்கப்பட்டன. ஆனால் இன்று 50 ஆண்டுகளுக்குப்பின் காந்தியின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு பல ஆண்டுகள் ஆன பின்னும் அம்பேத்கரின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் தமிழகத்தில் காந்தியின் நூல்களை மொழிபெயர்ப்பதற்கோ, படிப்பதற்கோ யாருமே இல்லை. ஆனால் அம்பேத்கரின் நூல்கள் போட்டிபோட்டுக் கொண்டு பதிப்பிக்கப்படுவதையும் விமர்சனக் கூட்டங்கள் நடத்தப்படுவதையும் விவாதங்கள் மேற்கொள்ளப்படுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன் அம்பேத்கரின் நூல்கள் இன்றுவரை நிலைத்து நிற்கும் என்று சுந்தர ராமசாமி போன்றோர்கள் கற்பனைகூடச் செய்து பார்த்திருக்க மாட்டார்கள். ஆனால் இன்று நிலைமை மாறியிருக்கிறது. எனவே வரலாற்றில் என்றென்றும் நிலைத்துநிற்கக்கூடிய எழுத்துக்கள் என்கிற 'எழுத்தின் புனிதம்' பற்றிய மாயையிலிருந்து விடுபட வேண்டியதோடு, எழுத்தினது உண்மையான வரலாற்றுத் தேவை என்பதைப் பற்றிய சரியான புரிதலும் நமக்கு இன்று அவசியமானதாக இருக்கிறது.

**?இதேபோல் ஈழத்தில் யாழ்ப்பாணம் வரை . "சென்றுவந்த". கோமல் சுவாமிநாதன் ஈழத்துக் கவிதைகள் தமிழ்நாட்டுக் கவிதைகளிலும் பார்க்க தரம்குறைந்து இருப்பதாகக் கூறியிருப்பது பற்றி........ உங்கள் கருத்து?**

கோமல் சுவாமிநாதனின் இந்தக் கருத்துகளுடன் எனக்கு எள்ளளவும் உடன்பாடில்லை. தமிழ்நாட்டுக் கவிதைகளைக் காட்டிலும் ஈழத்துக் கவிதைகள் மக்களுக்கு நெருங்கியதாகவும், ஜனநாயகப்பட்டதாகவும் இருப்பதாகவே நான் உணர்கிறேன். தமிழகத்தைப் பொறுத்தமட்டில் கடந்த நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்பு கவிதை பற்றி சிறுபத்திரிகைகள் மத்தியில் இருந்த கருத்து வேறு. இன்று ஓரளவு இந்த நிலைமை மாறியிருக்கிறது. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன் கவிதை என்பது மிகவும் மேட்டிமைத் தன்மையுடைய ஒரு விசயம் என்பதாகவும் நவீன யுகத்தின் கவிதை என்பதை சாதாரண மக்களால் புரிந்துகொள்ளத்தக்க வகையில் எழுத முடியாது என்பதாகவும் ஒரு கருத்து நிலவிவந்தது. 'மீட்சி' போன்ற பத்திரிகைகள் இத்தகைய கருத்துக்களின் பின்னணியில் கவிதைகளையும் கவிதைகள் பற்றிய எழுத்துக்களையும் வெளியிட்டு வந்தன. ஆனால் –நமக்கு எத்தனைதான் விமர்சனங்கள் இருந்தபோதிலும்– பழமலையின் 'சனங்களின் கதை' என்ற கவிதைத் தொகுதி வெளிவந்த பின்தான் நிலைமை மாறியது. மிகவும் அடித்தட்டு சாதியைச் சேர்ந்த கிராமத்து மனிதனின் அனுபவங்களும் கூட கவிதையாக முடியும்; பேச்சு மொழியில் சொல்லப்படக்கூடிய விசயங்களும் கவிதையாக மக்களால் அங்கீகரிக்கப்பட முடியும் என்பதை அந்தத் தொகுதி நிறுவியது. பிறகு அதேபோன்ற எழுத்துமுறைகளுடன் கூடிய கவிதைகளை இளைஞர்கள் பலர் எழுதத் தொடங்கினர்.

ஈழத்தைப் பொறுத்தமட்டில் கவிஞர்கள் அவ்வளவு பேரும் ஏதோ ஒருவகையில் நடக்கிற இனப்படுகொலையாலும், போராலும் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கின்றார்கள். இந்தப் போராட்டத்தின் தாக்கமென்பது நாவல், சிறுகதை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ளதைக் காட்டிலும் மிகப்பெரிய அளவில் இன்று ஈழத்துக் கவிதைகளில் ஏற்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. எனவே ஒரு மேட்டிமைத்தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிக்க நடை என்பது ஈழத்தில் தகர்க்கப்பட்டு ரொம்பவும் எளிமைப்படுத்தப்பட்ட, ஜனநாயகப்படுத்தப்பட்ட, பேச்சு மொழிக் கூறுகள் அதிகம் கலந்துள்ள கவிதைகள் எழுதப்படுகின்றன. இது நாங்கள் பின்பற்ற வேண்டிய ஒரு அம்சமாகவே நான் கருதுகிறேன். சேரன், ஜெயபாலன், சிவசேகரம், நு:.மான் போன்றோரின் கவிதைகள் தவிர இன்று புதிதாக எழுதிக்கொண்டிருக்கும் சோலைக்கிளி, இளைய அப்துல்லா' போன்றோரின் கவிதைகளும் மிகவும் குறிப்பிடக்கூடியனவாக உள்ளன. புலம்பெயர்ந்த வெளியீடுகளில் வருகின்ற பல கவிதைகள் உள்ளத்தைத் தொடுவதாகவும் மக்களுக்கு நெருங்கியதாகவும் இருப்பதை என்னால் உணரமுடிகிறது. எனவே கோமல் சுவாமிநாதனின் கருத்துக்களோடு எனக்கு முற்றாக உடன்பாடில்லை.

**? ஜெயகாந்தனின் ஆரம்பகால கதைகளுக்கும், பிற்கால கதைகளுக்குமான வேறுபாட்டை நீங்கள் எப்படிக் கணிக்கிறீர்கள்?**

ஜெயகாந்தனைப் பற்றிச் சொல்வதற்கு நான் சுந்தரராமசாமியைப் பற்றிச் சொன்ன விசயங்களிலிருந்து தொடங்குவது சரியாகப்படுகிறது. சுந்தரராமசாமியின் பேட்டி வெளிவருவதற்கு ஓரிரு வாரங்களுக்கு முன்னோ பின்னோ ஜெயகாந்தனின் பேட்டியொன்று 'தினமணிக்கதிரில்' வெளிவந்திருந்தது. அவரது மணி விழாவையொட்டி அது வெளிவந்திருந்தது. அந்தப் பேட்டியில் அவரிடம் கவிதை பற்றிக் கேட்கப்பட்டது. அதற்கு அவரின் பதில் குறிப்பிடத்தக்க ஒன்றாக அமைந்திருந்தது. கவிதைக்கு இனி எதிர்காலமில்லை. இனி கவிதையின் மூலம் எந்தப் பெரிய கருத்தையும் சொல்லிவிட முடியாது என்பதுபோல அவர் கூறியிருந்ததாக நினைவு. ஆனாலும் கிட்டத்தட்ட அதேபோன்று சுந்தரராமசாமியிடம் கேட்கப்பட்டபோது அவர் கவிதை அனுபூதித்தனமான லஹரியிலிருந்து பிறக்கக்கூடியது எனக் கூறியது குறிப்பிடத்தக்கது. இரு பெரும் எழுத்தாளர்களாக இன்று கணிக்கப்படக்கூடிய சுந்தரராமசாமியையும் ஜெயகாந்தனையும் -அருகருகே நிறுத்திப் பார்க்கும்போது ஒருசில விசயங்களில் சுந்தரராமசாமியிடம் இருந்து ஜெயகாந்தன் வேறுபட்டு நிற்பதை நாம் காணலாம். சுந்தரராமசாமி பற்றி ஏற்கனவே குறிப்பிட்டேன். ஜெயகாந்தனைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஒரு விளிம்பு நிலைச் சிறுவனாக சிறுவயதில் வாழ்க்கையைத் தொடங்கியவர். பொதுவுடமைக் கட்சியில் செயலாற்றியவர். கம்யூன் வாழ்க்கையில் பங்குபற்றியவர். விளிம்புநிலை மக்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர். பின்னர் அவர் மிகப்பெரிய எழுத்தாளரானார். மிகப்பெரிய நிறுவனங்களுடன் அவருக்குத் தொடர்பு ஏற்பட்டது. அவரது வாழ்நிலை மாறியது. அவருடைய எழுத்துக்கள் மாற்றம் பெற்றன. இந்தியாவின் பாசிச வடிவமாகிய இந்துத்துவத்திற்கு சார்பூட்டக்கூடிய பல்வேறு எழுத்துக்களை எழுதும் நபராக அவர் மாறிப்போனார். எனினும் அவரிடம் -நான் ஏற்கனவே குறிப்பிட்ட- தொடக்ககாலக் கீற்றுக்கள் அவருடைய எழுத்துக்களில் ஆங்காங்கு இன்னும் தென்படவே செய்கின்றன.

**? பாலகுமாரனின் நாவல்களை பெண்களே அதிகம் விரும்பிப் படிப்பதாகக் கூறப்படுகிறது. அப்படியென்ன, பெண்களுக்கான அம்சங்களைப் பாலகுமாரன் எழுதுகிறார் என்பதுபற்றி சொல்லமுடியுமா?**

தமிழ்நாட்டில் வாடகை நூல்நிலையங்கள் உண்டு. நான் எந்த ஊருக்குச் சென்றாலும் வாடகை நூல்நிலையங்களுக்குச் சென்று என்னவகையான நூல்கள் அதிகம் எடுத்துச் செல்லப்படுகின்றன என்ற கேள்வியைக் கேட்பது வழக்கம். சொல்லப்படுகின்ற பதில்களில் ஒன்று, பாலகுமாரனின் நாவல்கள், என்டமூரி வீரேந்திரநாத்தின் மொழிபெயர்ப்பு நாவல்கள் ஆகியன அதிகளவில் எடுத்துச்செல்லப்படுகிறன என்பதாக இருக்கும். இந்த வாசகர்களை நாம் நுணுக்கமாக கவனத்தில் எடுத்துக்கொண்டு பார்த்தோமானால் அலுவலகத்துக்குப் போகும் பெண்கள் பெருமளவில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பாலகுமாரனின் நாவல்களைப் படிக்கிறார்கள். பாலகுமாரனின் நாவல்கள் தவிர, மாத நாவல்கள் வரிசையில் எழுதப்படுகின்ற ராஜேந்திரக்குமார், பிரபாகர் போன்றோரின் நூல்களும் அதிகம் படிக்கப்படுகின்றன. ஆனால் இதுகுறித்த விரிவான ஆய்வு எதுவும் மாக்சிய விமர்சகர்களால் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. மாக்சிய விமர்சனம் பற்றி நாம் சுயவிமர்சனம் செய்யவேண்டியிருக்கும் அம்சங்களில் இதுவும் ஒன்று. இன்று அதிகாரபூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் பாரம்பரியத்தையே மாக்சிய விமர்சகர்களும் ஏற்றுக்கொண்டு அது குறித்த விமர்சனங்களையே செய்து வந்துள்ளனர். அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் பாரம்பரியம் கம்பனைப் போற்றியிருந்தால் இவர்களும் கம்பனை எடுத்துக்கொண்டு அந்தப் போற்றுதலுக்கு வேறு காரணங்களை முன்வைப்பர். அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் பாரம்பரியம் ஜானகிராமனை மிகப்பெரிய எழுத்தாளன் என்று சொல்லியிருந்தால், இவர்களும் ஜானகிராமனை எடுத்துக்கொண்டு நிலப்பிரபுத்துவத்தின் சிதைவை அவர் வெளிப்படுத்தினார், எனவே நல்ல எழுத்தாளர் என்கிற ரீதியில் ஒரு விமர்சனத்தை முன்வைத்திருப்பார்கள்.

எனவே அங்கீகரிக்கப்பட்ட இலக்கியப் பாரம்பரியத்தினர் எந்தெந்த எழுத்துக்களை அங்கீகரித்தார்களோ அந்த எழுத்துக்களை எடுத்துக்கொண்டு அதை அங்கீகரிப்பதற்கான அல்லது விலக்குவதற்கான வேறு புதிய காரணங்களைச் சொல்வது என்பதாகத்தான் இதுவரை மாக்சிய இலக்கிய விமர்சனம் இருந்துவந்தது. உண்மையில் மக்கள் மத்தியில் மிகப்பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய இந்த (Popular writings) என்று சொல்லக்கூடிய ஜனரஞ்சக இலக்கியங்கள் குறித்த ஆய்வினை இதுவரை மாக்சியர்கள் தீண்டத்தகாதவைகளாகவே ஒதுக்கி வந்திருக்கின்றனர். இது கவலைக்குரியது. உண்மையில் வெகுஜனங்களிடம் பெரும்பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய இந்த நாவல்களை எடுத்துக்கொண்டு பிரதியியல் ஆய்வுசெய்து அவை எந்தளவு மக்களால் விரும்பப்படுகின்றன, எத்தகைய தாக்கங்களை மக்களிடத்தில் ஏற்படுத்துகின்றன என்பது குறித்து நாம் பார்க்க வேண்டும். தவிரவும் வாசகர்கள் யார்? என்கின்ற நிலையில் நின்று இந்தப் பிரதிகளை வெவ்வேறு விதமான வாசிப்புகளுக்கும் உள்ளாக்கவேண்டிய அவசியம் இருக்கிறது. அந்தவகையில் எந்தவிதமான முயற்சிகளும் –எங்களாலும் கூட– பெரிய அளவில் இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பதுதான் உண்மை.

பாலகுமாரனுடைய எழுத்துக்கள் பற்றிக் கேட்டீர்கள். விரிவான ஆய்வு எதுவும் செய்யப்படவில்லையானும் மேலோட்டமாகச் சொல்வதென்றால், பெண்ணுடலை கிளர்ச்சியூட்டி உங்களுடைய முழுமையென்பது ஆணின் அருகாமையில், ஆணின் தொடுகையில், ஆணின் ஆளுமையில்தான் நிறைவுறுகிறது என்ற கருத்தை அவை பெண்களிடம் பதிக்கின்றன. அந்தவகையில் இங்குநிலவும் ஆளும்வர்க்க ஆணாதிக்க கருத்தியலுக்கு வலுசேர்க்கக் கூடியதாகவே பாலகுமாரனின் பிரதிகள் அமைகின்றன. இவை இருக்கிற கருத்தியலை கேள்விக்குள்ளாக்காதவாறு, இருக்கின்ற கருத்தியலுடன் ஒத்துப்போகச் சொல்கிற வகையில் வாசகர்களை அதிகம் தொல்லைக்குள்ளாக்காத பிரதிகளாக இருக்கின்றது.. கேள்விக்குள்ளாக்குமானால் அவர்கள் சிந்திக்க வேண்டும். அது பல்வேறு பிரச்சனைகளை வாசகருக்கு ஏற்படுத்தும். எனவே இத்தகைய 'தொல்லையில்லாத' வாழ்முறையை நமது சமுதாய வாழ்க்கை இன்று ஒவ்வொருவருடைய வாழ்நிலையாக முன்வைக்கக்கூடிய சூழலில் இத்தகைய பிரதிகள் அவர்களை சிந்திக்கத் தூண்டுபவைகளாக இருப்பதற்கு மாறாக, அவர்களை சொறிந்துவிட்டு அவர்களுக்கு ஒருவித அமைதி கொடுக்கக்கூடிய பிரதிகளாக இருக்கின்றன என்ற வகையில்தான் பெண்களால் இந்த எழுத்துக்கள் விரும்பிப் படிக்கப்படுகின்றன என்றே கருதுகின்றேன். தவிரவும் திரைப்படத்தில் பாலச்சந்தர், மணிரத்தினம், கமலஹாசன் போன்றோர் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிப்பதுபோல, எழுத்துக்களில் பாலகுமாரன் செய்துவருவதும் குறிப்படத்தக்கது. தொழில் ரீதியாகக்கூட இவர்களுக்கிடையே உறவுகள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**? பொதுவாக இலக்கியத்தில் நவீனத்துவம்பற்றி சுருக்கமாகக் கூறுவீர்களா?**

இலக்கியத்தில் நவீனத்துவம் (Modernism) என்பது ஒரு இலக்கியப் போக்காக மேனாடுகளில் சுமார் 50 ஆண்டுகளுக்கு முன் தோன்றியது. இந்த இலக்கியப் போக்கு தோன்றியது குறித்து இன்று பல்வேறு கருத்துக்கள் இருந்ததென்றாலும்கூட எல்லோரும் அடிப்படையில் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கருத்து, நவீனத்துவத்தை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் மேற்கொண்டவர்கள் இருக்கிற எதார்த்தவாத எழுத்துக்களின்மீது ஒரு அவநம்பிக்கை உடையவர்களாகவும், இதற்குப் பின்னணியாக நிலவுகின்ற கருத்தியல், மதிப்பீடுகள், அழகியல் பற்றிய சிந்தனைகள் எல்லாவற்றையும் கேள்விக்குள்ளாக்கக்கூடிய ஒரு தன்மையில் இருந்தவர்கள் என்பதுமாகும். நவீனத்துவத்தைக் கடைப்பிடித்தவர்களில் இடதுசாரித் தன்மை உடையவர்களும் வலதுசாரித் தன்மையுடையவர்களும் இருந்தார்கள் என்றபோதிலும் முதலாளித்துவக் காலகட்டத்தின் நெருக்கடிகளின் தாக்கத்தின் விளைவாகவே இந்த இரு போக்குகளும் மேலைச்சூழலில் தோன்றிவந்தன என்று நாம் சொல்லமுடியும். அந்தவகையில் இருக்கிற நிலையில் அதாவது பல்வேறு அம்சங்களில் குறிப்பாக மதத்தை ஐயமுற்று அதற்கு எதிராகக் கேள்விகேட்கக் கூடிய தன்மை நவீனத்துவப் போக்குகளில் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் ஏற்பட்டது. ப்ரெக்ட் போன்ற இடதுசாரி கலை இலக்கியவாதிகள் எதார்த்தவாதம் என்பது முதலாளித்துவக் காலகட்டத்தின் இலக்கிய வடிவம்; அதை அப்படியே சோசலிச எழுத்துமுறைக்குப் பயன்படுத்துவது தவறு என்ற கருத்துடையவர்களாக நவீனத்துவத்தை தங்களது போக்கில் கையாண்டார்கள். இதேபோல ஐசன்ஸ்ரைன், மேயர்கோல்ட் போன்றவர்களும் கூட நவீனத்துவத்தை சரியாகப் பயன்படுத்திய இடதுசாரிக் கலை இலக்கியவாதிகள் என்று நாம் கூறமுடியும்.

ஆனால் தமிழகச் சூழலைப் பொறுத்தமட்டில் தமிழில் நவீனத்துவத்தைப் பயன்படுத்திய அனைவருமே பார்ப்பன, வெள்ளாள ஆதிக்க சாதியைச் சேர்ந்தவர்கள். தமிழில் எழுத்து, இலக்கியம் படைப்பது என்பதெல்லாம் இந்த இரு சாதிகளுக்குள்ளேயே கடந்த 1500 ஆண்டுகாலமாக முடக்கப்பட்டுக் கொண்டிருப்பதன் விளைவை இன்று நாம் பார்க்க முடிகிறது. இன்றும்கூட பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட சாதிகளிலிருந்து எழுத வருபவர்களை விரல்விட்டு எண்ணிவிட முடியும். இந்த மேட்டிமைத்தன்மை மிக்க மேற்குடிச்சாதிகளைச் சேர்ந்தவர்கள் எழுத்துத் துறைக்கு வந்தபோது அவர்கள் யாரும் நிலவுகிற அமைப்பை கேள்விக்குள்ளாக்குபவர்களாக இல்லை. அப்படி கேள்விக்குள்ளாக்கியவர்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். புதுமைப்பித்தன் போன்றோரிடம் இந்தக் கீற்றுக்கள் தென்பட்டாலும் அவர்களும்கூட அங்கு நிலவும் பார்ப்பன – சைவவேளாள கருத்தியலை முற்றிலும் உதறித்தள்ளிவிட்டு வெளியே வந்தவர்களாக இல்லை. எனவே இவர்கள் நவீனத்துவமாகப் படைக்க முன்வந்ததெல்லாம் எத்தகைய உளவியல் பின்னணியில் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கும்போது, அன்றைய பார்ப்பன உயர்சாதி சீர்திருத்தவாதிகள் எவ்வாறு காலனிய ஆட்சியின் விளைவாக பல்வேறு துறைகளில் நவீனமயமாகிக் கொண்டிருக்கும் சூழலுக்கு தகுந்தாற்போல இந்திய சமூகத்தை அதன் சனாதன பின்புலம் மாறாமல் திருத்தியமைக்க வேண்டும் என்று கருதினார்களோ, அதேபோன்ற நோக்குடன்தான் இவர்களும் செயற்பட்டனர். கல்கி போன்றோரின் வணிக மயமாக்கப்பட்ட எழுத்துமுறைக்கு எதிராக மட்டுமே இவர்கள் கலகக்காரர்களாக இருந்தார்கள். மற்றபடி இவர்கள் அனைவரும் மீண்டும் மரபை நிலைநாட்ட வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர்களாகவும் இந்த இந்திய மரபு சிதைந்துவிடக்கூடாது என்ற நோக்கமுடையவர்களாகவும் இருந்தார்கள். எனவே தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் நவீனத்துவம் என்பது ஐரோப்பிய, அமெரிக்க சூழலில் நவீனத்துவம் ஆற்றிய ஒரு முற்போக்கான பங்கை முழுமையாக ஆற்றியது என்று நம்மால் சொல்லிவிட முடியாது என்றே நான் சொல்ல விரும்புகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்று பின் நவீனத்துவப் (Post-Modernism) போக்குகளெல்லாம் ஐரோப்பாவில் உருவாகியிருக்கிறது. அதுபற்றி ஹேபர்மாஸ் போன்றவர்கள் மிகவும் ஆழமான விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். பின்நவீனத்துவம் மீண்டும் இந்த நவீனத்துவத்தினுடைய –அதாவது ஐரோப்பாவில் தோன்றிய நவீனத்துவத்தின்– ஒருசில முற்போக்கான அம்சங்களையும்கூட பின்னுக்குத்தள்ளி, மீண்டும் நவீனத்துவதிற்கு முந்திய பழைய நிலையை எட்டிக்கொண்டிருக்கிறது என்கிற விமர்சனத்தை வைக்கின்றனர். இது தமிழ்ச் சூழலுக்கு மிகவும் பொருத்தமாகத் தெரிகிறது. இன்று பின்நவீனத்துவவாதிகள் என்று தம்மை அழைத்துக்கொள்ளும் தமிழக எழுத்தாளர்களும் சிந்தனையாளர்களும் பார்ப்பனிய தத்துவங்களுக்கு வக்காலத்து வாங்குபவர்களாகவும் பார்ப்பனிய எழுத்துமுறையைப் போற்றுபவர்களாகவும் சைவசித்தாந்தம் போன்ற கருத்தியலை தூக்கிப் பிடிப்பவர்களாகவும் இருக்கும் நிலையை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்தவகையில் நவீனத்துவத்திற்கும் பின்நவீனத்துவத்திற்கும் கருத்தியலளவில் ஒரு தொடர்ச்சியை நாம் இங்கே காட்டமுடியும்.

**? சோசலிச யதார்த்தவாதத்தை ப்ரெக்ட் ஏற்றுக்கொள்ளவில்லை என்ற கருத்தைக் கூறினீர்கள். சோசலிச எதார்த்தவாதம் என்றால் என்ன? அதுபற்றிய உங்கள் கருத்து என்ன?**

முதலில் சோசலிச யதார்த்தவாதம் தோன்றிய சூழலை நாம் பார்ப்போம். ரசியாவில் புரட்சி வெற்றிபெற்ற காலகட்டத்திலும் அதைத் தொடர்ந்தும் பல்வேறுவிதமான மாற்றுக் கருத்துக்களும் சிந்தனைகளும் அனுமதிக்கப்பட்டன. உள்நாட்டு யுத்தத்தின்போது பல்வேறு நேசசக்திகளையும் ஒன்றிணைத்து செயற்படவேண்டிய அவசியம் கட்சிக்கு இருந்ததின் விளைவாக இத்தகைய மாற்றுக் கருத்துக்கள் பல்வேறு துறைகளிலும் அனுமதிக்கப்பட்டன. அவற்றில் ஒன்றுதான் கலை, இலக்கிய, தத்துவத் துறையில் அமைப்பியலின் தாய் எனக் கருதக்கூடிய வடிவவியல்வாதம் குறித்த பல்வேறு விவாதங்களும், அதனை ஏற்று செயற்படுத்தக்கூடிய நடைமுறைகளும் ரசியாவில் பெருமளவில் அனுமதிக்கப்பட்டிருந்தன.

ஆனால் உள்நாட்டு யுத்தத்தின்பிறகு ஆட்சியதிகாரம் மிகவும் இறுக்கமாக்கப்பட்டு மாற்றுக் கருத்துக்களெல்லாம் தடைசெய்யப்பட்டன. கட்சிக்குள்ளும்கூட மாற்றுக் கருத்துக்கள் தடைசெய்யப்பட்டன. அந்தக்கட்டத்தில் ஏற்பட்ட பல்வேறுவிதமான மாற்றங்களில் ஒன்றுதான் சோசலிச யதார்த்தவாதம். கலை இலக்கியம் பற்றிய பன்முகப் பார்வைகள் தடைசெய்யப்பட்டு அங்கே சோசலிச யதார்த்தவாதம் புகுத்தப்பட்டது. ரசிய சோசலிச சமூகத்தைக் கட்டும்போது ஒரு பாட்டாளி வர்க்க ஜனநாயக சமூகத்தை உருவாக்குவது பற்றிய மார்க்ஸ், ஏங்கெல்ஸ் இன் மகத்தான கருத்துக்கள் பலவும் தூக்கி எறியப்பட்டு அன்றைய நடைமுறையில் வெளிநாட்டு ஆபத்திலிருந்தும் உள்நாட்டு ஆபத்திலிருந்தும் சோவியத் யூனியனைக் காக்கவேண்டும் என்ற ஒரே முழக்கத்துடன் பல்வேறு விதமான பூர்சுவா அரசியல் வடிவங்கள் என்பன அங்கே அப்படியே மேற்கொள்ளப்பட்டன. பூர்சுவா அரசிலுள்ள 'கம்பனி' நிர்வாக முறை, பூர்சுவா அரசிலுள்ள சிவில் நிர்வாக முறை, பூர்சுவா அரசிலுள்ள பொலிஸ், இராணுவம் ஆகிய அனைத்து வடிவங்களும் இங்கே அப்படியே ஏற்றுக்கொள்ளப்பட்டன. உற்பத்தி சக்திகள் பொதுவுடமை ஆக்கப்பட்டு, ஆட்சியதிகாரத்தில் பாட்டாளி வர்க்கத்தின் பிரதிநிதிகள் வைக்கப்பட்ட பின்பு, அரசு வடிவம் என்ன செய்துவிட முடியும். என்ற நம்பிக்கை அவர்களிடம் இருந்தது. சுருங்கச் சொன்னால் உள்ளடக்கம் மாற்றப்பட்ட பின்பு வடிவம் எப்படி இருந்தாலென்ன என்று நினைத்தார்கள். வடிவம் பற்றிய விமர்சனமில்லாமல் பூர்சுவா அரசு வடிவங்கள் கடைப்பிடிக்கப்பட்டன. அரசு வடிவம் மட்டுமல்ல குடும்பம், கல்வி, மருத்துவம் போன்ற பல்வேறுவிதமான வரலாற்று நிறுவனங்களும்கூட பூர்சுவா வடிவத்திலேயே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அங்கு இறுக்கமாக்கப்பட்டன. அதனுடைய விளைவுகள் என்ன என்பதை இன்று நாம் பார்த்துவிட்டோம்.

இது இலக்கியக் கோட்பாட்டிலும் எதிரொலித்தது. உள்ளடக்கத்தை சோசலிசமாக மாற்றிவிட்டு வடிவத்தை பூர்சுவா வடிவமாகிய யதார்த்தவாதத்தை அப்படியே வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்திலேதான் சோசலிச யதார்த்தவாதம் என்பது உருவாக்கப்பட்டது. இதனை ப்ரெக்ட் போன்றவர்கள் எதிர்த்தனர். இன்று ரசியா மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் அரசியல் ரீதியில் இடதுசாரிகளாகிய நமக்கெல்லாம் பல்வேறு இழப்புகளை ஏற்படுத்தியிருந்த போதிலும், அரசியல் – தத்துவ ரீதியில் புதிய விழிப்புக்களையும் சுயவிமர்சனம் செய்துகொள்ளக்கூடிய பார்வைகளையும் ஏற்படுத்தியிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இத்தகைய புதிய சுயவிமர்சனத்துடன் கூடிய சிந்தனை வளர்ச்சி என்பதை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையையும் இடதுசாரி அணிகள் மத்தியில் –குறிப்பாக இளைஞர்கள் மத்தியில்– இந்த சூழல் இன்று ஏற்படுத்தியிருக்கிறது என்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாகவே நாம் கருதவேண்டும்.

அந்த அடிப்படையில் பார்க்கும் போது சோசலிச யதார்த்தவாதம் பற்றிய ப்ரெக்ட் போன்றவர்களின் கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை. யதார்த்த வாதம் என்பது வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தோன்றிய ஒரு இலக்கிய வடிவம். அது சோசலிச காலகட்டத்தினுடைய ஒரு இலக்கிய வடிவமாக இருக்க முடியாது மரபு என்பதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ள முடியாது. ஆனால் லெனினிய கலை இலக்கிய கோட்பாடும், ஒரு வகையில் மாவோயிச கலை இலக்கிய கோட்பாடும் கூட, மரபு என்பதை அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றே கூறிவந்துள்ளன. ஆனால் இன்று நமது பழைய மதிப்பீடுகள், பழைய இலக்கியங்கள் ஆகிய அனைத்துமே கேள்விக்குள்ளாக்கப்பட்டு தூக்கி எறியப்பட வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் பார்க்கும்போதுதான் இன்று உலகளவில் தோன்றியுள்ள எதிர்ப்பு இலக்கியங்கள், கறுப்பு இலக்கியங்கள், இந்தியாவில் வடபகுதிகளில் உருவான தலித் இலக்கியங்கள் போன்ற பல்வேறு இலக்கிய முயற்சிகள் இன்று நம் கவனத்தைக் கவர்கின்றன. இதனை உலக அளவிலும், இந்திய அளவிலும், தமிழக அளவிலும் ஏற்பட்டுள்ள ஒரு பொதுப்போக்கின் அம்சமாக நாம் கருத வேண்டும்.

**? தமிழில் நவீனத்துவம் பற்றிக் குறிப்பிட்டிருந்தீர்கள். தமிழில் நவீனத்துவத்தின் படிநிலைகளாக எதைக் கருதுகிறீர்கள்?**

அச்சு முறையுடன் தமிழ் நவீன மயமாகத் தொடங்கியது என நாம் குறிப்பிடலாம். பழைய எழுத்துக்கள் எல்லாம் அச்சிடப்பட்டன. உரைநடை எழுத்துமுறை என்பது பரவலாகியது. ஒரு சிலர்தான் சுவடிகளைப் படி எடுத்து வைத்துக்கொள்ள முடியும் என்ற நிலை போய், எல்லோரும் ஆளுக்கொரு பிரதி வைத்திருக்கலாம் என்ற நிலையெல்லாம் ஏற்பட்டது. நாவல், சிறுகதை என்ற எழுத்துமுறைகள் தோற்றுவிக்கப்பட்டன.

1933 இல் 'மணிக்கொடி' தோற்றுவிக்கப்பட்டது பற்றிய பெரிய புனைவுகள் இங்கு சிறுபத்திரிகையாளர் மத்தியில் உருவாக்கப்பட்டிருப்பதை நீங்கள் அறிவீர்கள். மணிக்கொடி காலம், மணிக்கொடி எழுத்தாளர் என்பதெல்லாம் மிகப்பெரிய அந்தஸ்தாக இலக்கியத்துறையில் ஏற்படுத்தப்பட்டிருப்பதையும் அறிவீர்கள். மணிக்கொடி பற்றிய புனைவுகளை நாம் இன்று தோலுரித்தாகவேண்டி இருக்கிறது. மணிக்கொடியைப் பொறுத்தமட்டில், நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி இந்த நவீனத்துவ போக்குகளில் பல்வேறு வடிவங்களை முயற்சித்தார்கள் என்றபோதிலும் ஒட்டுமொத்தமாக பெரும்பாலும் பார்ப்பனர்களும், ஒருசில வெள்ளாளர்களும், விரல்விட்டு எண்ணக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகமிகச் சில பிற்படுத்தப்பட்ட சாதியினரும் இணைந்து செய்த முயற்சியாகவே நாம் கருதவேண்டியிருக்கிறது. எனவே அந்தவகையில் பார்க்கும் போது பார்ப்பனீய கருத்தியலிலிருந்து விடுபட்டவர்களாக இவர்கள் இல்லை. தொடர்ச்சியாக பல்வேறு விதமான நவீனத்துவக் கருத்துக்களை அறிமுகப்படுத்தி வந்த பத்திரிகை வட்டாரத்தினரும் பெரும்பாலும் இந்த மேற்தட்டு உயர்சாதியினராகவே இருந்தனர். இன்னொரு போக்கு, இவர்களில் யாரும் மக்கள் இயக்கங்களுடன் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டதில்லை. எனவே இவர்கள் தங்களை மக்களிடமிருந்து விலக்கி சுருக்கிக்கொண்டு, மக்களுக்கு புரிந்தாலும் புரியாவிட்டாலும் பரவாயில்லை என்ற நோக்குடன் உயர்சாதிக்கே உரித்தான ஒரு மேட்டிமைத்தன்மை மிக்க போக்குடன் செயற்பட்டு வந்தனர். இன்று அந்தப் போக்கினுடைய நீட்சியாகத்தான் Post-Modernism என்று சொல்லக்கூடிய ஒரு போக்கும் எல்லாம் செயற்பட்டு வருகிறது.

எனவே இந்தச் சூழலில் தமிழகத்தில் வெகு சில இளைஞர்கள் யதார்த்தவாதத்தை மீறிய இலக்கியப் படைப்புகளை வெகுஜன அளவில் எல்லோரும் புரிந்து, படித்து ஏற்றுக்கொள்ளக்கூடியதான நடைமுறைகளோடு இன்று மேற்கொண்டு வருகிறார்கள். அந்தவகையில் இன்று Non-Linear எழுத்துமுறை என்பது தமிழகத்தில் இலக்கிய ஆர்வலர்கள் பெரியளவில் வாசிக்கக்கூடிய ஒரு எழுத்துமுறையாக உருவாகி வருகிறது. இவர்களிலும்கூட ஒருசில, இன்று நிலவுகிற கருத்தியல் சாதனங்களுடன் தம்மை இணைத்துக்கொண்டு இலாபம் பெறக்கூடிய போக்குடையவர்களாக இருந்தபோதிலும், பல்வேறு எதிர்அரசியல் சக்திகள் என்பன இன்று யதார்த்தவாதத்திற்குப் பிந்திய Non-Linear எழுத்துமுறையை அரசியல் நோக்கில் இடதுசாரித் தன்மையுடன் செயற்படுத்தக்கூடிய போக்கும் உருவாகியுள்ளது. இது நம்பிக்கையூட்டக் கூடியதாக இருக்கிறது என்பதை நான் இங்கு வலியுறுத்திச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனினும் இதுவும் கூட பெரியளவில் வெகுஜன வட்டத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு விட்டதாகச் சொல்லமுடியாது.

**? நீங்கள் நிறப்பிரிகை ஆசிரியர் குழுவில் ஒருவராக இருக்கிறீர்கள். இது ஒரு தரமான சிறுபத்திரிகை என்ற ரீதியில், தமிழ்நாட்டில் சிறுபத்திரிகைகளின் செயற்பாடுகள் பற்றிய உங்கள் கருத்துக்களைக் கூறமுடியுமா?**

நிறப்பிரிகைக்கும் மற்றைய பத்திரிகைகளுக்கும் இடையில் ஒரு முக்கிய வேறுபாடு உள்ளது. நிறப்பிரிகைதான் இன்று தமிழகத்தில் மிக அதிகளவில் வாசிக்கப்படக்கூடிய **சிறுபத்திரிகை.** சுமார் 750 பிரதிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படுகின்றன. பழைய இதழ்களின் பிரதிகள் எங்களிடம் ஒன்றுகூட இல்லை. மற்றைய சிறுபத்திரிகைகளைக் காட்டிலும் நிறப்பிரிகை அதிகளவில் வாசிக்கப்படுவதற்கான ஒரு முக்கிய காரணம், நாங்கள் எல்லோரும் பல்வேறு விதமான அரசியல் இயக்கங்களில் செயற்பட்டு வந்தவர்கள்/வருகிறவர்கள். எனவே எங்களுக்கு வழக்கமான சிறுபத்திரிகை வாசகர்களைக் காட்டிலும் கூடுதலாக இந்த இயக்கங்களைச் சேர்ந்த வாசகர்களும் சேர்ந்துகொள்வதன் விளைவாகவும், நிறப்பிரிகை அரசியல்– தத்துவ அம்சங்களுக்கு முதன்மைகொடுத்து கலாச்சாரப் பிரச்சனைகளைப் பேசுவதாலும் அதிக வாசகர்களைக் கொண்டிருக்கிறது.

அந்த அடிப்படையில் மற்ற சிறுபத்திரிகை வாசகர்களுக்கும் நிறப்பிரிகை வாசகர்களுக்கும் இடையிலான வேறுபாடுகளையும் நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இன்று தமிழ்ச் சூழலில் ஏற்பட்டுள்ள ஒரு அம்சத்தை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொண்டீர்களானால், மற்ற சிறு பத்திரிகைகள் அனைத்தும் (மற்ற சிறு பத்திரிகைகள் என நான் குறிப்பிடுவது... கிட்டத்தட்ட 4,5 ஆண்டுகாலமாக பழைய மணிக்கொடி எழுத்து, கசடதபற ஆகியவற்றின் பாரம்பரிய நீட்சியாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்ற பல சிறு பத்திரிகைகளை மனதில் கொண்டு சொல்கிறேன்.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நிறப்பிரிகைக்கு எதிரணியில் குவிந்து கொண்டிருக்கிற ஒரு போக்கை நீங்கள் காணமுடியும். நாங்கள் தலித் இலக்கியம், தலித் அரசியல் போன்றவற்றைப் பற்றிப் பேசுகின்றோம். நுண்களங்களில் அதிகாரங்கள் எவ்வாறு செயற்படுகின்றன என்பது குறித்த ஆய்வுகளுக்கு நாம் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். மாற்றுக் கலாச்சாரம், மாற்று வாழ்க்கைமுறை, மாற்றுக் கல்வி, மாற்று மருத்துவம் என்று பல்வேறு மாற்றுத் துறைகளைப் பற்றி அதிக கரிசனை செலுத்துகிறோம். பார்ப்பனீய மரபை முற்றிலும் தூக்கியெறிய வேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இந்தியச் சமூகம் ஒரு சாதீயச் சமூகமாக இருப்பதால், இங்கு தலித் விடுதலையும் பெண்விடுதலையும் இன்றி எத்தகைய அரசியல் விடுதலையும் முற்றுப்பெறாது என்பதை பெரிதும் வற்புறுத்துகிறோம்.

ஆனால் இன்று எங்களுக்கு எதிராக திரண்டிருக்கிற சக்திகள் அனைத்தும் தலித்தியம், பெண்ணியம் என்பவற்றை எல்லாம் வாயளவில் சொல்லிக் கொண்டிருந்தாலும் இவற்றின் உண்மையான அர்த்தத்தில் இவற்றை நாம் வெளிப்படுத்தி செயற்படுத்திக் கொண்டிருப்பதை மிகப் பெரிய ஆபத்தாகப் பார்க்கிறார்கள். திடீரென தாங்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்பவற்றையெல்லாம் முதன்மைப்படுத்துபவர்களாக காட்டிக் கொண்டு, அந்தப் பின்னணியில் இத்தகைய எதிர்ப்பு இலக்கிய, மாற்றுக் கலாச்சார நுண்களங்களில் அதிகாரங்கள் செயல்படுவது பற்றிய புரிதலுடன் கூடிய நடவடிக்கைகளுக்கு எதிராக தங்களுடைய சக்திகளையெல்லாம் குவித்து எங்களை எதிர்க்கிறார்கள். பெண்ணியவாதம் என்ற பெயரில் எல்லாவிதமான ஒழுங்குகளையும் சிதைத்து உடனடிக் குழப்பத்தை விளைவிப்பதை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டவர்கள் என்பதுபோல எங்களைப் பற்றிய கருத்துக்களை அவர்கள் பரப்புகிறார்கள். இதில் வேடிக்கை என்னவென்றால், அரசியல் ரீதியில் மிகவும் தீவிரமான இடதுசாரிகளாகக் காட்டிக்கொள்ளும் ஒருசிலரும்கூட, லெனின் காலத்திய கம்யூனிச அரசியல் கோட்பாடே இன்றளவுக்கும் பொருந்தும், சமகாலத்தில் எந்தவிதமான மாற்றமும் உலகத்தில் ஏற்படவில்லை என்று -பூனை கண்ணை மூடிக்கொண்டது போல- இன்று அரசியல் நடத்திவரும் சில குழுக்களும்கூட நிறப்பிரிகையை இதேவிதமான குற்றச்சாட்டுகளுடன் எதிர்கொள்வதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். வரலாறு பூராவும் பல்வேறு அம்சங்களில் கம்யூனிஸ்டுகள் சனாதன ஒழுக்கவாதிகளுடன் ஒன்றுபட்டுக் கொண்டதை நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நினைத்துப்பார்க்கக் கூடியவர்களாக இருக்கிறோம். வரலாறு மறுபடியும் அரங்கேறுகிற ஒரு சூழல்தான் இது.

எனினும் இதில் நம்பிக்கையூட்டக்கூடிய ஓர் அம்சம் என்னவெனில், இன்று உலகளவில் ஏற்பட்டுக்கொண்டிருக்கிற மாற்றங்களின் விளைவாக பல்வேறு இளைஞர்கள் நாங்கள் எழுப்புகின்ற கேள்விகளின் நியாயங்களை ஏற்றுக்கொண்டவர்களாக, எங்களுடைய கருத்துக்களை பரிசீலிக்கின்றவர்களாக இருக்கிறார்கள். நாங்கள் நடத்தும் கூட்டு விவாதங்களில் நூறுக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தங்கள் கருத்துக்களை சொல்வது, ஒரு பிரச்சனை என்றால் அதில் நிறப்பிரிகை என்ன சொல்கிறது எனக் கவனிப்பது, நிறப்பிரிகை வந்தவுடன் அவசரஅவசரமாக அதை வாங்கிப் படிப்பது என்பதெல்லாம் இன்று தமிழ்ச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள். இன்று பெண்ணியம் குறித்த ஒரு தீவிரமான கருத்தாடல் தமிழ் சூழலில் ஏற்பட்டிருக்கின்றதென்றால், அதில் நிறப்பிரிகையின் பங்கு மிகவும் முக்கியமானது என்பதையும் குறிப்பிட்டாக வேண்டும். இன்னொன்று நான் இங்கு குறிப்பிட விரும்புவது, மிகச் சமீபத்தில் முதன்முதலாக சிறுபத்திரிகைச் சூழலில் பிற்படுத்தப்பட்ட மற்றும் தாழ்த்தப்பட்ட சமூகங்களைச் சேர்ந்த இளைஞர்கள் பெரியளவில் பங்குபற்றி, நிறப்பிரிகையுடன் இணைந்து செயல்படத்தக்க பலசிறு பத்திரிகைகள் உருவாகி வருவது என்பது குறிப்பிடத்தக்கது. ஊடகம் , கிழக்கு , மனுசங்க , களம் புதிது போன்ற பத்திரிகைகள் இந்த வகையில் வரிசைப்படுத்திப் பார்க்கப்பட வேண்டியவை. பெரியாரை ஒரு வெறும் பார்ப்பன எதிர்ப்பாளராக மட்டுமே அவரது ஆதரவாளர்களும் எதிரிகளும் முன்னிலைப்படுத்திக் கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரு சூழலில் அவரை ஒரு எதிர்க் கலாச்சாரவாதியாக நிறுத்தி நாங்கள் செய்துள்ள இடையீடும் குறிப்பிடத்தக்க ஒன்று.

**? தமிழ்ச் சூழலில் பெண்ணிய இயக்கங்களில் புதிய போக்குகள் ஏதாவது எழுந்திருக்கிறதா? அப்படியானால் அதுபற்றி சுருக்கமாகக் கூறமுடியுமா?**

தமிழ்ச் சூழலைப் பொறுத்தமட்டில் இதுவரை பெரும்பாலும் பெண்விடுதலை இயக்கங்கள் என்றால் அரசியல் கட்சிகளினுடைய பல்வேறு வெகுஜன அமைப்புகளில் ஒன்றாகவே இருந்து வந்திருக்கிறது. பெண்விடுதலை என்பதை ஒரு அடையாளவாதத் தன்மையுடன் (Tokenism) பல்வேறு இடதுசாரி அரசியல் கட்சிகள் தங்களுடைய அறிக்கைகளில் எங்காவது ஒரு மூலையில் குறிப்பிட்டாலும் அதற்குரிய ஒரு ஆழமான முக்கியத்துவத்தைக் கொடுத்து அவர்கள் செயற்பட்டதில்லை. பெரும்பாலும் கட்சிக்காரர்களுடைய மனைவியர் பங்குபெறும் அரங்கமாகவே இவை செயற்பட்டு வந்திருக்கிறது. கட்சியின் வெகுஜன இயக்கங்களிடையேயும் கூட ஒரு பாலியல் ரீதியான வேலைப்பிரிவினையும் இருந்து வந்திருக்கிறது. சமையற் பொருட்களின் விலையுயர்வு, ஆபாச சுவரொட்டிகள் போன்றவை குறித்த எதிர்ப்புகள் மட்டுமே பெண்ணிய இயக்க செயற்பாடாக இக் கட்சிகள் தீர்மானித்து செயற்படுத்தி வந்திருக்கின்றன.

இன்று அதாவது கடந்த ஒரு நான்கு ஐந்து ஆண்டுகளில் இந்த நிலைமையில் சற்று மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன. முற்றிலும் ஆண்கள் சாராத தனித்துவமான பெண்ணிய இயக்கங்கள் –பெரிய வீச்சுடன் இல்லாவிட்டாலும்– ஆங்காங்கு ஒருசில தோன்றிவந்திருக்கின்றன. இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திருச்சியில் இத்தகைய பெண்ணிய இயக்கங்கள் சில ஒன்றாகக்கூடி பெண்மீதான வன்முறை குறித்து ஒரு பயிற்சிப் பட்டறை நடாத்தினார்கள். இதில் ஆண்கள் அனுமதிக்கப்படாதது வரவேற்கத்தக்க ஒரு அம்சமாக இருந்தது. பெண்களாக இருந்தபோதும் பார்ப்பனப் பெண்களை இயக்கங்களில் அனுமதிக்கக் கூடாது என "தமிழினப் பெண்விடுதலை இயக்கம்" என்ற அமைப்பு கூடி செயல்பட்டு வருகின்றது. இந்தியாவில் இந்த சனாதனிகளால் முன்மொழியப்பட்ட பெண்ணியச் சிந்தனைகள் சாதிமுறையையும், வருணாச்சிரமத்தையும், குடும்பம் போன்ற நிறுவனங்களையும் காக்கும் நோக்குடனேயே முன்வைக்கப்பட்டன. ராஜம் கிருஸ்ணன், சிவசங்கரி போன்ற பல பெண் எழுத்தாளர்கள் இந்து மரபை ஆதரித்துக் கொண்டே பெண்விடுதலை பேசுகின்றனர். இந்துமரபு, பார்ப்பனீயம், சாதியமைப்பு ஆகியவற்றை எதிர்ப்பதைப் பெண்ணியத்தோடு இணைத்தவர்களாக பெரியார், பூலே ஆகியேரைக் குறிப்பிடலாம். **"பெரியார்–பூலே வழியில் பெண்ணியம்"** என்கிற கருத்தையும் இங்கே ஒருசிலர் முன்மொழிந்து வருகின்றனர்.

ஒரு மேலோட்டமான பார்வையில் உலகளவில் பெண்ணியப் போக்குகளை மூன்று பிரிவுகளுக்குள் அடக்கிவிட முடியும்.

பூர்சுவா சமூகத்தில் ஆணுக்கான வாக்களிக்கும் உரிமை, கல்வியுரிமை, சமவேலைக்கு சமஊதியம் போன்ற உரிமைகள் அனைத்தும் ஆண்களைப்போல பெண்களுக்கும் சமமாக வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகளை முன்வைக்கின்ற பெண்ணியச் செயற்பாடுகளை பூர்சுவா பெண்ணியச் செயற்பாடு என்று நாம் சொல்லலாம்.

பெண்ணடிமைத்தனம் என்பது உற்பத்தி நடவடிக்கைகளில் பெண்கள் ஒதுக்கப்பட்டதிலிருந்து தொடங்குகிறது. உற்பத்தியில் பெண்களுக்கு சமபங்கு வகிக்கும் பொழுது மட்டுமே பெண்ணடிமைத்தனம் நீங்கும். எனவே உற்பத்தியில் சம பங்களிக்கக்கூடிய ஒரு வர்க்கப் புரட்சியை உருவாக்குவதே இன்றைய நோக்கம். அதுவரை இந்தப் பிரச்சனைகளை கூடுதல் முக்கியத்துவம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொடுத்து செயற்படுத்துவது என்பது வர்க்கப் புரட்சியை பின்னுக்குத் தள்ளுவதாக அமையும் என்கிற கருத்துக்களை மாக்சியப் பெண்ணியம் இதுவரை முன்வைத்து வந்திருக்கிறது.

பெண்ணுக்கான தனித்துவப் பண்புகளை முதன்மைப்படுத்தி அவற்றைப் பெருமை கொள்ளத்தக்க அம்சங்களாக முன்வைப்பதே பெண்ணிய விடுதலைக்கு வழிவகுக்கும் என்கிற கருத்துக்களில் செயற்படக்கூடிய சில தீவிரப் பெண்ணிய இயக்கங்களும் மேல்நாடுகளில் செயற்பட்டு வருகின்றன.

ஆனால் இந்த மூன்று பெண்ணிய இயக்கங்களுக்கும் ஒரு பொதுவான அம்சம் என்னவெனில் இந்த மூன்றுமே ஆண், பெண் என்கிற வேறுபாடு சாராம்சரீதியானது, இயற்கையானது என்று ஏற்றுக்கொள்ளக் கூடிய பெண்ணியப் போக்குகள்தான்.

நவீனமான பெண்ணியச் சிந்தனை ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் சாராம்ச ரீதியான வேறுபாடுகள் என்பது எதுவுமே கிடையாது என்கிற கருத்தை முன்வைக்கிறது. மிகச் சில அடிப்படையான உயிரியல் வேறுபாடுகள் தவிர வேறு எந்தவகையிலும் –உடல்வலு ரீதியிலோ அல்லது வேறு எந்த அம்சங்களிலுமோ– பெண்மை, ஆண்மை என்று சொல்லத்தக்களவில் எந்தவிதமான தனித்துவமான பண்புகளும் இயற்கையாக பெண்களுக்கோ, ஆண்களுக்கோ கிடையாது என்கிற கருத்தை வலியுறுத்திப் பெறக்கூடிய சிந்தனையின் அடிப்படையில் செயற்படும் பல புதிய பெண்ணியப் போக்குகள் உருவாகி இருக்கின்றன. அந்த அடிப்படையிலான விவாதங்கள் என்பன தமிழ்ச் சூழலிலும் மேற்கொள்ளப்படுகின்றன. எழுத்துக்கள் அனைத்தும் ஆண்மைய எழுத்துக்களாகவே இருக்கின்றன என்பதனால் அதற்கு மாறாக தன்னைப் பெண்ணாகப் பாவித்துக்கொண்டு எழுதுதல், ஒருவகை பாலிலி எழுத்துமுறையை பயன்படுத்துதல் என்பதெல்லாம் இன்று விவாதத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு நடைமுறையில் மேற்கொள்ளப்படக் கூடிய நிலை இன்று உலகளவில் ஏற்பட்டுள்ளது. தமிழ்ச் சூழலிலும் அதனுடைய பிரதிபலிப்புகள் ஆங்காங்கே ஏற்பட்டு வருகின்றன. ஆனால் இத்தகைய சிந்தனைகள் என்பன பெரியளவில் ஒரு பரந்துபட்ட வீச்சை ஏற்படுத்திவிட்டது என்று சொல்லமுடியாது. எனினும் இந்த சிந்தனைகள் என்பன இன்று எளிதில் புறக்கணிக்கக் கூடிய ஒன்றாக இல்லாதளவிற்கு ஓரளவு குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய தன்மையில் இன்று தமிழ்ச் சூழல் விளங்குகின்றது.

இச் சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். குடும்பம், ஒருதார மனம், அவை சார்ந்த ஒழுக்க மதிப்பீடுகள் என்பது எல்லாம் வரலாற்றில் ஒரு குறிப்பிட்ட சூழலில் தோன்றிய நிறுவனங்கள். ஒரு தந்தைவழி அதிகாரத்துவ சமூகம் உருவான பொழுது இத்தகைய நிறுவனங்களும், மதிப்பீடுகளும், பெண்ணடிமைத்தனமும் தோன்றுகின்றன. குடும்பம் போன்ற நிறுவனங்களும் உருவாக்கப்படுகின்றன. தனிச் சொத்து, அரசு ஆகியவற்றுடன் குடும்பம், ஒருதார மணம் ஆகியவற்றையெல்லாம் இணைத்து மார்க்ஸ், ஏங்கல்ஸ் ஆகியோர் மிகவும் ஆழமான கருத்தை சொல்லிவிட்டுப் போயிருக்கிறார்கள். ஆனால் பின்னர் வந்த போல்சேவிக் கட்சிப் பாரம்பரியத்தில் இந்த சிந்தனைகளெல்லாம் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி மறக்கடிக்கப்பட்டன. ஒரு சாராம்சவாத பெண்ணிய நோக்கிற்குள் தங்களை மாக்ஸ்சிஸ்டுகள் ஈடுபடுத்திக் கொண்டது மட்டுமன்றி குடும்பம், ஒழுக்கம் போன்ற நிறுவனங்களின் வரலாற்று ரீதியாக கட்டமைக்கப்பட்ட தன்மையை மறந்துபோன ஒரு மிகப்பெரிய தவறும் நிகழ்ந்தது. இதன் விளைவாக உற்பத்தி, சொத்துக்கள் எல்லாம் பொதுவுடமையாக்கப்பட்ட போதிலும் ரசியா போன்ற நாடுகளில் ஒரு பூர்சுவா சமூகத்தில் இருந்ததைக் காட்டிலும் அதிகளவில் பெண்ணடிமைத்தனம் தொடர்ந்தது. ஏற்கனவே குறிப்பிட்டபடி அங்கெல்லாம் ஏற்பட்ட பல்வேறுபட்ட மாற்றங்களின் அடிப்படையில் இவைகளெல்லாம் மறுபரிசீலனைக்குரியவை என்பதை மாக்சியர்கள் உணரத் தலைப்பட்டுள்ளது ஒரு வரவேற்கத்தக்க அறிகுறியாக நான் கருதுகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**? தலித்தியம், பெண்ணியம் பற்றியெல்லாம் நிறப்பிரிகை பேசி வருகிறது என்கிறீர்கள். இந்தப் பார்வைகள் தமிழ் இலக்கிய விமர்சனத்தை எந்த வகையில் வளப்படுத்தியுள்ளன என்று சொல்ல முடியுமா?**

அழகியல் என்ற பெயரால் மூடிவைக்கப்படுகிற இலக்கியத்தின் அரசியலைத் தோலுரிப்பது என்கிற நோக்கில் மாக்சிய விமர்சனம் உலகெங்கிலும் செயற்பட்டு வந்திருக்கிறது. எனினும் அறியப்பட்ட மாக்சியத்தில் கலந்திருந்த பல்வேறு முதலாளியக் கூறுகளின் விளைவாக இந்தப் பணியை மாக்சிய இலக்கிய விமர்சனம் என்பது சரியாக நிறைவேற்றியது என்று சொல்லமுடியாது. தலித்தியமும், பெண்ணியமும் இந்தக் குறைபாடுகளைப் போக்க முனைகின்றன. பெரிய அளவில் சாதனைகள் செய்யப்படவில்லையாயினும் தமிழ்ச் சூழலில் குறிப்பிடத்தக்க சில விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. விவாதங்களை எழுப்பியுள்ளன. எழுத்தின் புனிதம் இன்று கேள்விக்குள்ளாக்கப்பட்டுள்ளது. இதுவரை இலக்கியப் பாரம்பரியம், தமிழ்க் கலாச்சாரம் என்று சொல்லப்பட்டு வந்ததெல்லாம் இந்த சாதீய, ஆணாதிக்க, வர்க்க சமூகத்தில் பலன்பெற்ற அதிகாரபூர்வ ஆதிக்க சக்திகளால் கட்டமைக்கப்பட்டவை, கண்டுபிடிக்கப் பட்டவை, கற்பிதம் செய்யப்பட்டவை. இவை அனைத்தையும் தூக்கியெறிய வேண்டும். இதுவரை கோலோச்சிய எல்லா மதிப்பீடுகளையும் கவிழ்த்துத் தலைகீழாக்க வேண்டும். தலித் குரலை தலித்கள்தான் ஒலிக்க முடியும். பெண்ணியக் குரலை பெண்கள்தான் முழக்கமுடியும். இங்கே வரலாற்றில் மறைத்துவைக்கப்பட்ட எதிர்க் கலாச்சாரக் குரல்களை, எதிர் மரபுக் குரல்களைத் தொகுக்க வேண்டும். பெரியார், அம்பேத்கார் சிந்தனைகளின் வெளிச்சத்தில் இந்திய வரலாற்றைப் பார்க்க வேண்டும். பார்ப்பனீய அரசியல் மதிப்பீடுகளைக் குழிதோண்டிப் புதைக்க வேண்டும். பாலியல் ஒடுக்கமுறையின் சமூக விளைவுகளை வெளிக்கொணர வேண்டும். குடும்பம் போன்ற ஆணாதிக்க நிறுவனங்களை, ஆணாதிக்க மதிப்பீடுகளைக் கேள்விக்குள்ளாக்க வேண்டும். எழுத்தைப் பிரதியாகப் பார்த்து அதற்குள் பொதிந்து கிடக்கும் அதிகாரங்களைக் கட்டுடைக்க வேண்டும்.

எனவே விமர்சனம் என்பது வெறும் பொருளாதாரப் பின்புலத்தை மட்டும் ஆராய்வதாக இல்லாமல் எழுத்தைப் பிரதியியல் ஆய்வுக்குட்படுத்த வேண்டும். கட்டுடைக்க வேண்டும். ஆணாதிக்கப் பிரதிகளைத் தோலுரிக்க வேண்டும். பால்சாரா மொழிநடையைப் பயன்படுத்த வேண்டும். ஒடுக்கப்பட்ட மக்களின் குரலை யதார்த்தவாத வடிவத்திற்குள் அடக்க முடியாது. புதிய எழுத்து முறைகள், ஒழுங்கமைப்புகளை மீறிய வடிவங்கள் முதலியவற்றைப் பயன்படுத்தியாக வேண்டும் என்றெல்லாம் இன்று பேசப்படுவதற்கு தலித்திய, பெண்ணியச் சிந்தனைகள் காரணமாகியுள்ளன.

**? நீங்கள் இந்தியாவிலிருந்து வந்திருக்கின்றீர்கள். சுவிஸில் இரண்டு வாரகாலம் வரை தங்கியிருக்கிறீர்கள் இந்த வகையில் நீங்கள் ஏற்கனவே கேள்விப்பட்டது அல்லது அறிந்த வகையில் இத் தேசங்களுக்கிடையிலான கலாச்சார வேறுபாடுகளை எப்படிக் கணிக்கிறீர்கள்? இதில் குறிப்பாக ஓரினச்சேர்க்கையை விரும்புகிறவர்கள், Autonome Group (அதாவது முழுச்சுதந்திரவாதிகள்) . போதைவஸ்து பாவனைக்கு உட்பட்டவர்கள் பற்றிய உங்கள் பார்வையை வெளிப்படுத்துவீர்களா?**

ஒரு இரண்டு வாரகால அவதானிப்பு என்பது ஒரு சமூகத்தைப் பற்றிய முழுமையான பார்வையை ஏற்படுத்திவிட முடியாது என்றபோதிலும் உங்களைப் போன்ற நண்பர்களின் துணையோடு இந்த சமூகத்தைப் பார்த்ததின் விளைவாக எனக்கு ஒருசில அம்சங்கள் பிடிபட்டுள்ளது. நூல்களைப் படித்து புரிந்துகொள்வதைக் காட்டிலும் இந்த இரண்டு வாரகால அனுபவம் எனக்கு ஒருசில அம்சங்களைக் கூடுதலாகப் புரிந்துகொள்வதற்கு வழிவகுத்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுவிஸ் சமூகத்தில் கடைப்பிடிக்கப்படும் ஒழுங்கு மீறாத வாழ்க்கைமுறை என்பது என்னை வியப்புக்குள்ளாக்கியது. இங்கு 1973 வரை பெண்களுக்கு வோட்டுரிமை வழங்கப்படாதிருந்த செய்தியையும் கடந்த 23 ஆண்டுகள் வரை ஒருசில Kanton (மாநிலம்)களில் இந்த நிலைமை நீடித்து வந்தது என்பதையும் இங்கு வந்தபின்புதான் விளங்கிக்கொள்ள முடிகிறது. அதுமட்டுமல்ல புதிய நாசிசப் போக்குகள் இச் சமூகத்தில் எவ்வளவு வேகமாக வளர்ச்சிபெற்று வருகிறது என்பதற்கான பின்னணியையும், இந்த ஒழுங்கமைவை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையுடன் தொடர்புபடுத்திப் பார்க்க வேண்டிய அவசியத்தை நான் உணர்ந்து கொண்டேன். இந்த ஒழுங்கமைவு ஒவ்வொரு விசயத்திலும் நகர அமைப்பு, கிராம அமைப்பு, சாலையமைப்பு, நடந்து செல்லுதல், குப்பைபோடுதல் உட்பட ஒவ்வொன்றிலும் வெளிப்படுவது என்பது ஒரு சாதாரண சுத்தம் பற்றிய விசயமாக மட்டும் நான் கருதவில்லை. நேற்று உங்களுடன் பேசிக்கொண்டிருக்கும் போது Not Normal என்பதற்கு ஒத்த ஜேர்மன் மொழிப் பிரயோகத்ததை (Nicht Normal- நிஹற் நோர்மால்) சுவிஸ் மக்கள் பெரியளவில் பயன்படுத்துவது பற்றி நீங்கள் குறிப்பிட்டது இச் சந்தர்ப்பத்தில் எனக்கு நினைவுக்கு வருகிறது. எனவே ஒரு Norm க்குள் -அதாவது ஒரு ஒழுங்குக்குள்-வாழ்க்கையை அமைத்துக் கொள்ளவேண்டிய அவசியம் பற்றிய பிரக்ஞையுடன் இந்த மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

உலகெங்கிலும் உள்ள பல்வேறு ஏகாதிபத்திய நிறுவனங்களுக்கும் வங்கிகளுக்கும் நிதிமூலதனத்தைக் கடன் கொடுத்து அதன்மூலம் உலகமக்கள் அனைவரையும் வட்டிச் சுரண்டலுக்கு ஆளாக்கியிருக்கும் இந்தச் சமூகத்தின் ஒழுங்குக்குட்பட்ட மனநிலை என்பது என்னை மிகவும் வியப்புக்குள்ளாக்கியது. எத்தகைய ஒழுங்கு குறித்த நடவடிக்கைகளுக்கும் எதிரான மீறல்கள் என்பதும் அச் சமூகத்துக்குள் சிறிய அளவிலேனும் இருந்தே தீரும். இங்கே திருமணத்திற்கு முன் ஒரு பெண் சராசரியாக 16 பேருடன் உடலுறவு கொள்வதாக ஒரு தகவலை இங்குள்ள நண்பர் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். நேற்று சூரிச் ரயில் நிலையத்திற்கு அருகில் போதைப் பொருள்கள் பாவித்துத் திரியும் இளைஞர் யுவதிகளை என்னால் பார்க்க முடிந்தது.

பல்வேறு எதிர்க் கலாச்சாரக் குழுக்களும் சந்திக்கும் மையமான Reithalle என்ற இடத்திற்கு செல்லும் வாய்ப்பும் எனக்கு ஏற்பட்டது. இன்று சுவிஸ் சமூகத்தில் உருவாகிவரும் நாசிசப் போக்கு என்பது அகதிகளுக்கும் வெளிநாட்டவருக்கும் எதிராகத் திரும்பியிருப்பதும், அகதிகள் திருப்பியனுப்பப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் மிக வலுவாக எழுப்பப்பட்டிருப்பதும், அதற்கு அரசும் ஆதரவாக இருக்கக் கூடியதுமான சூழலில்.... இவற்றிற்கு எதிராக பாராளுமன்ற இடதுசாரி அரசியல் கட்சிகள்கூட வலுவான எதிர்ப்புக் குரலை எழுப்பத் தயாராக இல்லாத நிலையில்.... இவற்றிற்கெதிரான வலுவான குரலை -அவர்கள் எந்தளவிற்கு சிறுபான்மையினராக இருந்தபோதிலும்- எழுப்பக்கூடியவர்களாக இந்த எதிர்க்கலாச்சாரக் குழுவினரே இருக்கின்றனர் என்பது எனக்கு வியப்பாக இருக்கிறது. இந்த Autonome குழுக்கள்தான் வெளிநாட்டவரை வெளியேற்றுவதற்கு எதிரான முழக்கங்களை Bern நகர சுவர்களில் எழுதியிருக்கின்றனர் என்பது எனக்கு முக்கியமான விசயமாகப் படுகிறது. அவர்களைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தபோது அவர்கள் எந்தளவிற்கு கட்டுத்தளைகளை உடைத்தெறிந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது புரிந்தது.

எனவே இத்தகைய மிகவும் ஒழுங்குக்கு உட்பட்ட சமூகத்தில் பொருளியல் ரீதியாகவும், கலாச்சார ரீதியாகவும் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டவர்கள் மட்டுமே இந்த சமூகத்தினுடைய பாரதூரமான அம்சங்களை மிகச் சரியாகக் கணிக்கக்கூடியவர்கள் என்ற கருத்து எனக்கு வலுப்பட்டது. இந்தச் சமூகத்தில் பாட்டாளி வர்க்கமாக நாம் கருதக்கூடிய தொழிற்சாலை உழைப்பாளிகள்கூட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த வட்டித்தொழில் சமூகத்தின் பலாபலன்களை அனுபவிக்கக் கூடியவர்களாக இருக்கின்ற சூழலில், இந்த விளிம்புநிலை மக்களே ஒரு சரியான அரசியல் பார்வையுடையவர்களாக இருக்கமுடியும் என்கிற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. எல்லாவற்றையும் துடைத்து Polish பண்ணி சென்ற்' உம் தெளித்து வைத்திருப்பது போன்ற Bern நகரத்தில் ஒரு களங்கம் போல ஒரு மூலையில் எந்தவிதமான அழகுபடுத்தலுமின்றி, இன்னும் சொல்லப்போனால் ஒரு அசிங்கமான சூழலில் இவர்கள் சந்திக்கும் அந்த றைத்ஹாலே என்பது குறியீட்டு ரீதியாக அவர்களின் நிலையை வெளிப்படுத்துவதாகவே நான் கருதுகிறேன்.

**? ஏற்கனவே எனது கேள்வியில் குறிப்பிட்டிருந்தேன் – ஓரினச்சேர்க்கையை விரும்புபவர்கள், Autonome Group எனப்படும் முழுச்சுதந்திர வாதிகள், போதைவஸ்து பாவனைக்குட்பட்டவர்கள் பற்றிய உங்கள் பார்வையையும் வெளிப்படுத்தும்படி கேட்டிருந்தேன். அதுபற்றி தொடர்ந்து சொல்லுவீர்களா?**

Autonome அமைப்புக்குள் 'லெஸ்பியன்' கள் என்று சொல்லக்கூடிய பெண்பால் ஓரினப்புணர்ச்சியாளர்களும் மற்றும் 'கே' எனப்படும் ஆண் ஓரினப்புணர்ச்சியாளர்களும் தங்களை வெளிப்படையாக அறிவித்துக் கொண்டு மற்றவர்களுடன் இணைந்து செயற்படக்கூடியது பற்றி Autonome குழுவில் நாம் சந்தித்தவர்கள் கூறினார்கள். லெஸ்பியன் குழுவைச் சேர்ந்த பெண்களையோ ஓரினப்புணர்ச்சி மேற்கொள்ளக்கூடிய ஆண்கள் யாரையுமோ சந்திக்கக்கூடிய வாய்ப்பு எனக்கு இந்த 15 நாட்களில் கிடைக்கவில்லை என்றபோதிலும், இவர்கள் மிகவும் செயலூக்கத்துடன் Autonome குழுவுடன் இணைந்து பல அரசியல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை அறிந்துகொள்ள முடிந்தது. உலகெங்கிலும் நடைபெறக்கூடிய பல்வேறு விதமான போராட்டங்கள் பற்றிய அறிமுகக் கூட்டங்களையும் ஆதரவு இயக்கங்களையும் இவர்கள்தான் நடத்துகின்றார்கள்.

சமூகத்தில் பொருளியல் ஒடுக்குமுறைக்கு சமமாக பாலியல் ஒடுக்குமுறையும் செயல்படுகிறது. பொருளியல் ஒடுக்குமுறை என்பதுகூட பிரக்ஞைபூர்வமாக செயற்படக்கூடிய ஒன்றாக இருப்பதினால் ஒடுக்கப்படுபவர்கள் ஒன்றிணைந்து ஒடுக்குமுறையை உணர்ந்து போராடுவது எளிதாக இருக்கிறது. ஆனால் பாலியல் ஒடுக்குமுறையின் விளைவு என்பது பிரக்ஞையையும் தாண்டி நனவிலி மனத்தில் பதியப்பட்டு செயற்படுத்தப்படுவதன் விளைவாக இந்தப் பாலியல் ஒடுக்குமுறைக்கு உள்ளாபவர்கள் ஒன்றிணைந்து போராடுவதற்கு இயலாதவர்களாக உள்ளனர். எல்லாவிதமான கொடுமைகளையும் ஏற்றுக்கொள்ளத் தக்க மனநிலையை உருவாக்கக்கூடியதாக பாலியல் ஒடுக்குமுறை அமைகிறது என்பது போன்ற கருத்துக்களில் எங்களுக்கு உடன்பாடு உண்டு. அந்தவகையில் பார்க்கும் பொழுது ஓரினப்புணர்ச்சி என்பது நிலவுகிற பாலியல் ஒடுக்குமுறையை மீறுகிற வகையில் – திருமணத்திற்கு முந்திய பாலியல் உறவு போலவே– ஒருவகை கலாச்சார ஒழுங்கு மீறலாகவே நாம் பார்க்கவேண்டி இருக்கிறது.

அமெரிக்க அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டத்திலிறங்கி பல ஆண்டுகாலம் சிறையிலிடப்பட்ட மூன்று லெஸ்பியன் கைதிகள் பற்றிய பேட்டியொன்றை நீங்கள் நிறப்பிரிகையில் சிலஆண்டுகளுக்கு முன் படித்திருப்பீர்கள். இந்தப் பாலியல் ஒடுக்குமுறையிலிருந்து தங்களை முற்றாக விலக்கிக் கொண்டு ஏதோ ஒரு வகையில் மீறி செயற்படுபவர்களாக இருக்கும் பெண்கள் பெரும்பாலும் அரசியல் ரீதியில் புரட்சிகரமான சிந்தனையை எளிதில் ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களாக இருக்கின்றார்கள். இந்த மீறல் என்பது ஓரினப் புணர்ச்சி என்ற வகையில் இருக்கலாம் அல்லது பாலியல் சுதந்திரம் என்ற வகையிலும்கூட இருக்கலாம். எனவே ஒழுங்கமைவுகளை சிதைத்து விடுதலை பெறச்செய்வது என்பது புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனநிலையும் அதிகாரத்திற்கு எதிராக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயற்படக்கூடிய ஊக்கத்தையும் எளிதில் ஏற்படுத்தக் கூடிய ஒன்றாக இருக்கிறது என்பதையே என்னால் இதன்மூலம் காணமுடிகிறது. எனவே நம்மைப்போன்றவர்கள் இதுவரை பொதுவுடமை இயக்கப் பாரம்பரியத்தில் ஒழுக்கம் பற்றிய பிரச்சனையில் சங்கராச்சாரிகளைக் காட்டிலும் பெரியளவில் வேறுபட்டு நிற்கக்கூடியவர்களாக இல்லாது இருந்த நிலையை மாற்றிக்கொண்டு ஓரினப் புணர்ச்சியாளர்கள் போன்றவர்களையும் அவர்களது இயக்கங்களையும் அருவருப்பான, கேவலமான இயக்கங்களாகக் கருதாமல் அவர்களையும் நம் நட்புசக்திகளாகப் பாவிக்கவேண்டிய அவசியம் இன்றைய சூழலில் நமக்கு இருக்கிறது என்று நான் கருதுகின்றேன்.

**? சுவிஸில் தங்கியிருந்த இவ் இரண்டுவார காலத்தில் இந் நாட்டிலுள்ள ஈழத் தமிழர்கள் பற்றிய உங்கள் கணிப்பீடு என்ன?**

சுவிஸில் நான் இரண்டுவார காலம் தங்கியிருந்த பொழுது பலரது இல்லங்களுக்கும் செல்லக்கூடிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. பலரோடு சந்தித்துப் பேசக்கூடிய வாய்ப்பும் எனக்குக் கிடைத்தது. என்றபோதிலும் இந்த பலர் என்பது சுவிஸில் இருக்கக்கூடிய தமிழ்ச் சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியினர்தான். "மனிதம் வாசகர் வட்டத்தைச்" சேர்ந்த ஒருசில தோழர்களுடைய இல்லங்களை மட்டுமே என்னால் பார்க்க முடிந்தது. இதை வைத்துக்கொண்டு ஒட்டுமொத்தமாகத் தமிழர்களுடைய வாழ்க்கையை என்னால் மதிப்பீடுசெய்ய முடியாது. என்றபோதிலும் உங்களையெல்லாம் சந்தித்தளவில் எனக்குத் தோன்றிய சில கருத்துக்களை நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

வெளிநாட்டில் பல்வேறு கலாச்சாரங்களுக்கு மத்தியில் வாழவேண்டிய அவசியமும், உள்நாட்டில் ஏற்பட்ட கொடுமையிலிருந்து தப்பித்து இந்த வெளிநாடு வந்து சேருவதற்கிடையில் உங்களுக்கு ஏற்பட்ட பல்வேறுவிதமான கொடூரமான அனுபவங்களும், இன்று ஒரு ஏகாதிபத்திய சமூகத்திற்குள் இரண்டாந்தர குடிமக்களாக வாழவேண்டிய நிலைக்கு நீங்கள் தள்ளப்பட்டிருக்கிற சூழலும் உங்கள் மத்தியில் புதிய சிந்தனைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனப்பாங்கை அதிகளவில் ஏற்படுத்திருக்கிறது என்பதை என்னால் உடனடியாகப் பார்க்க முடிந்தது. இது மிகவும் வரவேற்கத்தக்க அம்சமாக நான் கருதுகிறேன். எங்களுடைய சமூகத்தில் உள்ளதைக் காட்டிலும் நமது தோழர்கள் மத்தியில் பெண்கள் இங்கு விடுதலை பெற்றிருப்பது என்பது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக நான் கருதுகிறேன். வீட்டுவேலைகளில் நீங்கள் எல்லாம் சமஅளவில் அவர்களுடன் பங்குபெறுவது என்பதும் உடைஉடுத்துகிற விடயங்களில் மிகவும் மோசமாகிய பெண்ணடிமைத்தன சின்னமாகிய தமிழ்நாட்டு உடைகளை நீங்கள் துறந்திருப்பது என்பதும் மகிழ்ச்சியளிக்கிறது. ஆண்களாக இருந்தாலும் பெண்களாக இருந்தாலும் கலந்து பழகுவது என்பதும் பாலியல் பிரச்சனைகளைக்கூட மனம்விட்டுப் பேசுவது என்பதும் என்னால் மிகவும் வரவேற்கத்தக்கதாக உள்ளது.

இந்த ஒரு வேற்றுச் சமூகத்திற்குள் நீங்கள் அரசியல் ரீதியாக இந்த சமூகத்தின் செயற்பாடுகளிலிருந்து எல்லாம் ஒதுக்கப்பட்டு, உங்கள் நாட்டு அரசியலிலும் பல்வேறு காரணங்களின் விளைவாக நீங்கள் தீவிரமாக ஈடுபடமுடியாத ஒரு சூழலில்.... மனிதம் போன்ற ஒருசில நடவடிக்கைகளை தவிர்த்து, மற்றைய வகையில் நீங்கள் பெரும்பாலும் உட்கருங்கி உங்கள் குடும்பத்திற்குள் உங்களை நீங்கள் ரொம்பவும் இறுக்கமாக்கிக்கொண்டு எங்கள் சூழலில் உள்ளதைக் காட்டிலும் அதிகளவு குடும்ப இறுக்கத்துடன் நீங்கள் செயற்படுவது என்பது எனக்கு ஒரு கவலைக்குரிய புள்ளியாகப் பட்டது. இது உங்கள் மத்தியில் நடைமுறையிலுள்ள பெண்விடுதலைக் கூறுகளை அர்த்தமிழக்கச்செய்யும். ஒரு வேற்றுச் சமூகத்தில் நம்முடைய கலாச்சார அடையாளங்களைத் தொலைத்துவிடக் கூடாது என்கிற ஆர்வத்துடன் நீங்கள் செயற்படுவதையும், அதற்குப் பின்னால் உள்ள பதைபதைப்பையும் புரிந்துகொள்ள முடிகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆனால் அதே சமயத்தில் நமது கலாச்சார அடையாளங்கள் என்கிற அடிப்படையில் தமிழ்க் கல்வி போன்றவற்றில் நீங்கள் தேவாரம் திருவாசகத்தோடு நிறுத்திக்கொள்ளக் கூடிய ஒரு சூழல் இங்குள்ளது என்பதும், நம்முடைய கலாச்சார அடையாளத்தை காப்பாற்றிக் கொள்வதற்காகவே இங்கு பார்ப்பனர் வைத்து வேதம் ஓதி திருமணம் நடத்துவது போன்றவற்றையெல்லாம் –நீங்கள் செய்யாவிட்டாலும்கூட– இங்கிருக்கும் தமிழர்கள் பெரியளவில் செய்வது என்பதும் எனக்கு கவலைக்குரிய அம்சங்களாக இருந்தன. நம்முடைய கலாச்சாரம், அடையாளம் பற்றிய சரியான கேள்விகளை எழுப்பிக்கொண்டு எது நமது தமிழ் அடையாளம் என்பதைக் குறித்து எல்லாம் நீங்கள் யோசிக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது. அடுத்தபடியாக இங்குள்ள சூழலில் உங்களுக்குப் போதிய வருமானம் கிடைக்கக்கூடிய இந்தப் பின்னணியில் இந்த சமூகத்தினுடைய 'நுகர்பொருள்' கலாச்சாரத்திற்கு நீங்களும் பெரியளவில் பலியாகிக் கொண்டிருக்கக்கூடிய ஒரு போக்கு உண்டு என்பதும் எனக்கு கவலைக்குரிய ஒன்றாகப் படுகிறது.

**? தமிழக மக்கள் மத்தியில் இலங்கைத் தமிழர் பற்றிய அபிப்பிராயம் எந்த நிலையில் இருக்கிறது? ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்திற்கு எந்தளவு தார்மீக ரீதியான ஆதரவை கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பற்றி கூறமுடியுமா?**

சுவிஸ் சமூகத்தில் அரசுக்குத் தேவையான ஒரு கருத்தை, எடுத்துக்காட்டாக தமிழர்களை வெளியேற்றுவது என்று அவர்கள் தீர்மானித்தாலும்சரி தமிழர்களை வைத்துக்கொள்வதென்று தீர்மானித்தாலும்சரி, உடனடியாக அதற்குத் தகுந்தாற்போல் இங்குள்ள பத்திரிகைகளும் தொலைக்காட்சி நிறுவனம் போன்றவைகளும் முடுக்கிவிடப்படுகின்றன என்பதைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள். அதுபோலத்தான் தமிழ்ச் சூழலிலும் கருத்து உருவாக்கம் செய்யக்கூடிய மிக முக்கியமான மையமான கேந்திரங்கள் என்பன இன்று அரசிடமும் பார்ப்பனச் சக்திகளிடமுமே குவிந்துள்ளன என்பதை நீங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த அரசும் ஆதிக்கம் செலுத்தக்கூடிய பார்ப்பனியமும் ஈழத் தமிழ்ப் போராட்டம் என்பது இந்திய ஒருமைப்பாட்டுக்கு எதிரானதாக அமையும் எனக் கருதுகின்றன. இந்திய ஒருமைப்பாடு சிதைந்தால் இந்த அரசிலும் பார்ப்பனிய ஆதிக்கத்திலும் பலன் பெறுவோர்களுக்கு பெரிய இழப்பு ஏற்படும் என்ற புரிதலுடன் ஈழப் போராட்டத்திற்கு எதிரான செயற்பாடுகள் என்பன தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். ராஜீவ் காந்தியின் கொலையை ஒட்டி இது மிகத் தீவிரமடைந்தது.

ஈழப் போராட்டத்திற்கு எதிரான ஒரு மனநிலை என்பது இன்று பெரியளவில் உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் சில போராளிக் குழுக்களுடைய செயற்பாடுகள் என்பன இதற்கு உதவிசெய்வது போல் அமைந்தது என்பதும் ஈழப் போராளி ஒருவருடன் தொடர்பு வைத்திருந்தாலே மிகக் கொடூரமான முறையில் அரசின் தாக்குதல் இருக்கும் என்கிற அச்சம் இன்று உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் ஓரளவு கவலைக்குரிய ஒன்றாக இருந்தாலும்கூட, கடந்த 30,40 ஆண்டுகளாக இங்கு உருவாகி வந்துள்ள தமிழ்த் தேசிய உணர்வு நிலை என்பது ஒட்டுமொத்தமாக தமிழ்ப் போராட்டத்திற்கான ஆதரவை உள்ளார்ந்த நிலையில் ஏற்படுத்தியிருக்கிறது என்றுதான் கூறமுடியும். எனவே இந்தவகையில் ஈழப் போராட்டம் குறித்த ஒரு அடிப்படையான கரிசனம் என்பது நீறுபூத்த நெருப்பாக தமிழ் மக்கள் மத்தியில் அணையாமல் காக்கப்பட்டு வருகிறது என்றுதான் நான் குறிப்பிட விரும்புகிறேன். எனவே ஒரு சூழல் வரும்பொழுது 10 ஆண்டுகளுக்குமுன் ஈழப் போராட்டத்திற்கு இருந்ததுபோல ஒரு மிகப்பெரிய ஆதரவு தமிழ்ச் சூழலில் மீண்டும் உருவாவதற்கான வாய்ப்புகள் இன்னும் மறைந்துவிடவில்லை.

↗31



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**புரட்டாதி**
**+**
**ஐப்பசி**
**V**
**கார்த்திகை**
**+**
**மார்கழி**

**1994**

VVV

இரு மாதத்துக்கு ஒருமுறை வெளிவந்த இதழ்

மனிதம்! இவ் இதழுடன் ஐந்தாவது வருடத்தைப் பூர்த்தி செய்துள்ளது. ஐந்தாவது ஆண்டைப் பூர்த்திசெய்யும் இவ் இதழ் மிகவும் காலதாமதமாகவே வெளிவருகிறது. வாசகர் வட்டம் (அல்லது படிப்பு வட்டம்) எனும் சிறு அமைப்பின் வேலைத் திட்டமாகவே ஆரம்பத்தில் மனிதம் வீடியோவும் (4 இதழ் வெளிவந்தது), பின் மனிதம் சஞ்சிகையும் வெளிவந்தது. மனிதத்திற்கு ஏற்பட்ட நெருக்கடிகளை இலகுவாகக் கடந்து செல்லவும், இன்னும் தாய் மண்ணிலும் தமிழ்நாட்டிலும் ஒருசில பத்திரிகைகளின் பொருளாதார நெருக்கடியில் பங்கெடுக்கவும் இச் சிறு அமைப்பின் கட்டமைப்பு காரணமாக இருந்தது. ஆனால் இன்று இக் கட்டமைப்புக்குள் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் சிக்கலாகியுள்ளன.

சொல்லுக்கும் – செயலுக்கும், எழுத்துக்கும் – நடத்தைக்கும் இடையில் விரிசல்கள்! பெண்ணடிமைத்தனம், மதச்சடங்குகளில் காணப்படும் பிற்போக்குத் தனங்கள், திருமண வைபவங்கள் முதல் பிறந்தநாள் கொண்டாட்டங்கள் வரை அனைத்தையும் பணச்சடங்கு வைபவங்களாக மாற்றும் எம்மவரின் செயற்பாடுகள் பற்றியெல்லாம் ஆத்மார்த்தமான ஒருவகை வரையறைகளைக் கொண்டிருந்த வர்கள் நாம். எம்மில் சிலர் இவ்வித ஆத்மார்த்த உணர்விலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டதுடன், இத்தகைய செயற்பாடுகளுடன் தம்மையும் இணைத்துக் கொண்டனர். இந் நடவடிக்கை களினால் எழும் கேள்விகளுக்கு மனிதம் பதில் கொடுக்க வேண்டிய சிரமத்துக்கு உள்ளாகியதுமுண்டு. மேலும் இத்தகைய செயற்பாடுகளை நியாயப்படுத்தும் வகையில் "மனித உணர்வுகள் இப்படித்தான்

www.tamilarangam.net

இருக்கும். அடிக்கடி மாற்றமடைக் கூடியது. அதியுயர்ந்த மனிதாபிமான நோக்கில் பார்த்தால் இவை சாதாரணமானவைதான்" என்று ஒரு சிலரால் விளக்கங்களும் கொடுக்கப்படுகின்றன.

இந் நிலைமையில் மனிதம் தொடர்ந்து வெளிவருவது சார்பான கருத்துப் பரிமாற்றத்தை உண்டுபண்ணும் பொருட்டு சில வாரங்களுக்குமுன் மனிதம்குழு சார்பில் மனிதம் பத்திரிகையின் நிறுவனர்கள் (அவ்வப்போது வெளியேறியவர்கள் உட்பட) அனைவர்க்கும் பத்திரிகைக்குழுஅழைப்பு அனுப்பி கூட்டத்தையும் கூட்டியது. "தொடர்ச்சியான ஒரு வேலைத்திட்டம் என்ற அடிப்படையிலும், முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள கூட்டுழைப்பு அவசியம் என்ற கருத்திலும், பத்திரிகையின் தேவை அவசியமானது என்ற நோக்கிலும் மனிதம் தொடர்ந்து வெளிவரவேண்டும்" என்ற கருத்துடன் விவாதம் ஆரம்பமானது.

*"வாசகர்வட்ட அமைப்பைப் பலப்படுத்தி, பத்திரிகையைத் தொடர்ந்து கொண்டு வருவதற்கான நிலையான வருவாயை அல்லது நிதியை ஒழுங்கு செய்துகொண்டு பத்திரிகையைக் கொண்டுவர முயற்சிக்கலாம்"*

*"அரசியல் படிப்பை மேற்கொள்வது, மாற்றுக் கலாச்சாரம், எதிர்க்கலாச்சாரம், பெண்ணியம் ஆகியன பற்றி புதிய கருத்துக்கள் சார்பாக தொடர்ந்து விவாதங்களையும், கலந்துரையாடல்களையும் மேற்கொள்வது, அதன்பின் ஏற்படும் புதிய கருத்துநிலைகளின் அடிப்படையில் பத்திரிகையை வெளியிடலாம்"*

**இறுதி இதழ்**



www.tamilarangam.net

"மேற்படி கருத்துக்கள் சார்பாக விவாதங்களை நடத்திக் கொண்டு சமகாலத்தில் பத்திரிகையையும் கொண்டுவரலாம். இதற்கான ஒரு களமாக பத்திரிகையையும் பயன்படுத்தலாம்."

– போன்ற கருத்துக்கள் இக் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.

இதுதவிர, "எதிர்க் கலாச்சார, மாற்றுக் கலாச்சார நடவடிக்கை களைக் கைவிட்டு அல்லது அதன் முக்கியத்துவத்தைக் குறைத்து, அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்; மனிதம் பத்திரிகை இதுவரை வெளிவந்த கருத்துக்களுடன் தொடர்ந்து வெளிவர வேண்டியதில்லை; இதுசார்பாக விவாதங்களை நடத்தி பத்திரிகையை ஆறுதலாகக் கொண்டுவரலாம்" என்று கதைப்பவர்களும் உண்டு.

நேசத்திற்குரிய வாசகர்களே!

மேற்படி முரண்பாடுகளுக்கிடையில், மனிதம் பத்திரிகையைத் தொடர்ந்து வெளிக் கொணர்வதற்கான உடன்பாடு காணப்படாத நிலைமையில், பத்திரிகையை நிறுத்தவேண்டிய சூழ்நிலைக்குட் பட்டுள்ளோம் என்பதை மனவேதனையுடன் அறியத் தருகிறோம். எம்மை ஆதரித்தும் உற்சாகப்படுத்தியும், ஐந்துவருடகாலம் மனிதம் வெளிவர உதவிய வாசகர்கள், ஆக்கதாரர்கள் உள்ளிட்ட அனைவரு க்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி! வணக்கம்!

– மனிதம் குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

27 ←

**? இதுவரை நாங்கள் கேட்ட கேள்விகளுக்கு நீங்கள் விளக்கமாகப் பதிலளித்தீர்கள். இறுதியாக நீங்கள் ஏதாவது கூற விரும்புகிறீர்களா?**

இங்குள்ள தமிழர்களுடைய வாழ்நிலைபற்றிய உங்கள் கேள்விக்கு நான் அளித்த பதிலின் தொடர்ச்சியாக நான் இப்போது சொல்லப்போகிறவற்றை எடுத்துக்கொள்ள வேண்டும்.

ஐரோப்பாவில் இன்று புதிதாக உருவாகி வரக்கூடிய நாசிச அபாயம் என்பது வெளிநாட்டிலிருந்து இங்கே புகலிடம் பெற்று இருக்கக்கூடியவர்களுக்கு எதிராகவே முதலில் தோன்றுகிறது என்பதை நாம் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். அந்த அடிப்படையில் இங்குள்ள ஈழத்தமிழர்கள் அனைவரும் இன்னும் சற்று இறுக்கமாக அரசியல் ரீதியில் நமது நலன்களை காக்கக் கூடிய வகையில் ஒன்றிணைந்து இருக்கக்கூடிய அவசியம் எனக்கு முதன்மையாகப் படுகிறது. அத்தகைய ஒன்றிணைவு ஒன்று இப்போது இருப்பதாகத் தோன்றவில்லை. சுவிஸ் நாட்டிற்குள் இருக்கும் தமிழர்கள் ஒன்றிணைவதைத் தவிர இப்படி வேறுபட்ட பல நாடுகளில் உள்ள தமிழர்கள் தனித்தனியாக ஒன்றிணைந்து நிற்பதும் பின்பு அவர்கள் அனைவரும் ஒரு ஒட்டுமொத்தமான பொது இணைப்புக்குள் வருவதும் அவசியமாக இருக்கிறது. இன்று ஐரோப்பிய ஒன்றியம் என்பது போல பெரிய ஒன்றிணைவுகள் எல்லாம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற பொழுது நாமும் நமது நலன்களைப் பாதுகாத்துக்கொள்ள இத்தகைய ஒன்றிணைப்புகளை மேற்கொள்ள வெண்டியது மிகவும் அவசியம். அத்தகைய ஒன்றிணைப்பு முயற்சிகள் எந்தளவுக்கு இருக்கின்றன எண்பது பற்றி எனக்குத் தெரியவில்லை. இது குறித்து நீங்கள் கவனம் செலுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, உங்களுடைய பிரச்சனைகளில் உங்களுக்கு ஆதரவாக இருக்கும் உள்நாட்டு சக்திகளை அடையாளம் கண்டு அவர்களுடன் இணைந்து செயற்படுவது பற்றியும் நீங்கள் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல உங்கள் பிரச்சனைகளை கவனத்தில் எடுத்துக்கொண்டு அதற்காகக் களத்தில் இறங்கக்கூடியவர்களாக – அவர்கள் எவ்வளவு பலவீனமானவர்களாக இருந்தபோதிலும்– இந்த மாற்றுக் கலாச்சாரக் குழுக்கள்தான் உள்ளனர். இத்தகைய மாற்றுக் கலாச்சாரக் குழுக்களுடன் உங்கள் தொடர்பு மிகவும் பலவீனமானதாக இருக்கிறது என்பது வருத்தத்தைத் தருகிறது. சுவிஸ் சமூகத்தில் பெரும்பான்மை மக்கள் போன்றே நீங்களும் இவர்களைத் தீண்டத்தகாதவர்களாக கருதாமல் தோழமைச் சக்திகளாக இணைந்து செயற்பட வேண்டும் என்று தோன்றுகிறது. பேர்ணிலுள்ள Zentrum-5 போன்ற, பல்வேறு கண்டங்களையும் சேர்ந்த புலம்பெயர்ந்த மக்களுடைய ஒருங்கிணைப்பு அமைப்புகளிலும் Autonome Group களுடனும் நீங்கள் உங்கள் தொடர்பை அமைப்பு ரீதியில் வலுப்படுத்திக்கொள்ள வேண்டும்.

உள்நாட்டில் நடைபெறக்கூடிய இனவெறி, பாசிசம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டங்களுக்கு நீங்கள் எந்தளவுக்கு ஆதரவாக இருக்க முடியும் என்று பரிசீலிக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அப்போதுதான் நீங்கள் அந்நியமாகிற உணர்வை ஒரளவாவது தவிர்த்துக்கொள்ள முடியும்.

அடுத்து ஐரோப்பாவில் நீங்கள் இருப்பதன் விளைவாக உங்களுக்கு எத்தனையோ பிரச்சனைகள் இருந்தபோதிலும் எங்களுக்கு எல்லாம் இல்லாத ஒருசில வாய்ப்புக்கள் உங்களுக்கு கூடியுள்ளதை கவனத்தில் எடுத்துக்கொண்டு அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மிகவும் நவீனமான சிந்தனை எல்லாம் ஐரோப்பிய மொழிகளில் உடனுக்குடன் பெயர்க்கப்படுவது மிக முக்கியமான ஒரு அம்சம். ஜேர்மன் மொழியில் மிக நவீனமான சிந்தனைகள் அனைத்தும் பெயர்க்கப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஜேர்மன் மொழி விளங்கக் கூடிய பகுதியில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வசிக்கக்கும் நீங்கள் இந்த சிந்தனைகள் எல்லாவற்றையும் ஒரளவு ஜேர்மன் மொழி பயின்றால் நேரடியாகப் பரிச்சயம் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. ஜேர்மன் மொழி பயிலுவதன் மூலம் உங்களுக்கு உள்நாட்டிலும் பல்வேறுவிதமான தொடர்புகள் கிடைப்பதற்கு சாத்தியங்கள் இருக்கிறது. தவிரவும் புதிய சிந்தனைகளையெல்லாம் நீங்கள் தமிழ்ப்படுத்தி வெளியிடுவீர்களேயானால் அது களத்திலிருந்து போராடிக்கொண்டிருப்பவர்களுக்கு ஒரு தத்துவார்த்த வெளிச்சத்தைத் தரக்கூடிய ஒரு நல்ல பணியாக இருக்கும்.

தவிரவும், கடந்த 10 ஆண்டுகளில் பல்வேறு விதமான மாற்றங்கள் உலகளவில் இன்று ஏற்பட்டுள்ளன. ஏகாதிபத்தியத்தின் செயற்பாடுகளிலும் இன்று பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட்டிருக்கிறது. புதிய உலக ஒழுங்கு என்று இன்று சொல்லப்படக்கூடிய இந்த பொருளாதார அமைப்பின் அரசியல் என்னவாக இருக்கும் என்பது குறித்த பெரிய தெளிவு எமக்கு யாருக்கும் இல்லை. ஆனால் இந்த அரசியல்தான் எதிர்காலத்தில் நம்முடைய தேசியஇனப் போராட்டங்களையெல்லாம் நிர்ணயிக்கப்போகிறது. அந்த வகையில் இந்த புதிய உலக ஒழுங்கில் பல்வேறுவிதமான அம்சங்களையும் ஆய்வுசெய்து அவை நமது தேசிய இனப் போராட்டத்தில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்பது குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளலாம்.

நீங்கள் எல்லோரும் கம்பியூட்டர் போன்ற நவீன சாதனங்களை எல்லாம் வைத்திருக்கிறீர்கள். புதிய உலக ஒழுங்கு தொடர்பான ஆவணங்களையெல்லாம் சேகரித்து நமது போராட்டத்திற்கு தொடர்புடைய ஒரு நல்ல ஆவணக் காப்பகம் ஒன்றை உருவாக்கமுடியும். Bern இல் Third World Network நடத்துகிற இத்தகைய ஒரு ஆவணக் காப்பகத்தைப் பார்த்தேன். எனவே இந்த ஆவணக் காப்பகம் என்பது புதிய உலக ஒழுங்கு பற்றிய தரவுகளையும் தேசிய இனப் போராட்டம் பற்றிய தரவுகள் மற்றும் தத்துவங்களையும் அகதிகள் பிரச்சனைகள் பற்றிய தரவுகளையும் சேகரித்து வைக்கும் ஒரு நிலையமாக அமையலாம். இந்த அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்ட கட்டுரைகளையும் நீங்கள் வெளியிடலாம். Autonome குழுக்கள் ஏராளமான பத்திரிகைகளை வெளியிடுகின்றன. அவற்றில் மிகவும் வேறுபட்ட நோக்கில் கலாச்சாரப் படைப்புக்கள் மட்டுமன்றி அரசியல் படைப்புக்களும் வெளிவந்துகொண்டு இருக்கின்றன. இவற்றையெல்லாம் நீங்கள் மொழிபெயர்த்துத் தரலாம். முடிந்தால் அவற்றை வெளியிடுவதற்கும் முன்வரலாம். அப்படி செய்வீர்களேயானால் தமிழகத்திலிருந்தும்கூட நாங்கள் இணைந்து மொழிபெயர்ப்பதிலோ அல்லது வெளியிடுவதிலோ அல்லது விநியோகிப்பதிலோ எந்தவிதமாக பங்காற்ற முடியுமோ அவற்றில் எல்லாம் எங்களை மிகவும் தீவிரமாக ஈடுபடுத்திக்கொண்டு பங்காற்றுவதற்குத் தயாராக இருக்கிறோம்.

தவிரவும் இன்று மாக்சியத்திற்கு ஏற்பட்டுள்ள பல்வேறு வீழ்ச்சிகளுக்குப் பிறகு சோசலிச கட்டுமானம் பாட்டாளி வர்க்க அரசு ஆகியவை பற்றி பல்வேறு ஆய்வுகளை நாம் வெளிப்படுத்திக் கொள்கிறோம். அதுபோலவே தேசிய இனப்பிரச்சனை குறித்தும் பல்வேறு விதமான நவீன சிந்தனைகளின் அடிப்படையில் ஆய்வுகள் செய்யவேண்டி இருக்கிறது. ஒரு தேசிய இன விடுதலை என்பது ஒட்டுமொத்தமான அடித்தட்டு மக்களின் விடுதலையாக இருப்பதற்கான சாத்தியங்கள், அது இன்னொரு அதிகாரத்துவ பாசிச சமூகமாக மாறாமல் இருப்பதற்கான சாத்தியங்கள் என்ன என்பது பற்றிய ஆய்வுகளையும்கூட செய்யவேண்டிய அவசியம் நமக்கு இருக்கிறது. இது வெறுமனே இயக்கங்களை விமர்சிப்பதாக இல்லாமல் இதற்குப் பின்புலமாக உள்ள தத்துவார்த்தப் பிரச்சனைகளில் நீங்கள் கவனம் செலுத்த வேண்டும்.

இவற்றையெல்லாம் நான் ஏதோ ஒரு மேல்நிலையில் நின்றுகொண்டு உங்களுக்கு சொல்லக்கூடிய அறிவுரை என்று கருதமாட்டீர்கள் என்ற நம்பிக்கையோடு சொல்கிறேன். வெளியிலிருந்து வந்துள்ள ஒரு தோழரது பார்வை என்கிற அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை கவனத்தில் எடுத்துக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொண்டால் போதுமானது. வெளியிலிருந்து பார்க்கும் பொழுது சில பலன்கள் உண்டு. சில குறைபாடுகள் ஏற்படுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. எனவே என்னுடைய பார்வைகள் அனைத்தும் சரியானதாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. எனினும் நீங்கள் இவற்றைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**? இந்தப் பயணம் உங்களுக்குப் பயனுடையதாக இருந்தது எனக் கருதுகிறீர்களா?**

நிச்சயமாக உங்களையெல்லாம் சந்திக்கக்கூடிய பெருவாய்ப்பாக இது அமைந்தது என்பதுதவிர, கடந்த நான்காண்டுகளாக நிறப்பிரிகை மூலம் நாங்கள் ஆற்றிவரும் பல்வேறு பணிகள், முன்வைத்துவரும் பல்வேறு கருத்துக்கள் ஆகியவற்றிற்கு ஒரு நடைமுறை நிரூபணம் இந்த ஐரோப்பியப் பயணத்தின் மூலம் எனக்குக் கிடைத்தது. முன்வைக்கும் கருத்துக்கள், செய்கிற செயல்கள் ஆகியவற்றிற்கான நியாயப்பாடு கண்முன் கிடைப்பதென்பது எத்தனை பெரிய விசயம். உலக அளவில் எதிர்ப்புச் சக்திகளுடன் ஒன்றிணைந்து நிற்க வேண்டிய அவசியம் புரிந்ததோடு, யார் யாருடன் இணைந்து நிற்கவேண்டும் என்பதும் விளங்கியது. இந்து பாசிசத்தை எதிர்த்து நிற்கும் நாங்கள் உலக அளவில் பாசிச எதிர்ப்பு சக்திகளுடன் இணைந்து நிற்கவேண்டிய அவசியத்தை நாங்கள் இனி பிரச்சாரம் செய்வோம். புலம்பெயர் தமிழர்களின் பிரச்சனைகள் என்ன என்பதும் இங்கே வந்தபின் மேலும் தெளிவாகியது. இது குறித்து தமிழக மக்களின் கவனத்தை ஈர்க்கும் பணியைத் தொடர்ந்து செய்வோம்.

இத்தகைய பெரிய வாய்ப்பை அளித்ததற்காக மனிதம் ஆசிரியர் குழுவிற்கு "நிறப்பிரிகை" இதழ் சார்பாகவும் "மக்கள் கல்வி இயக்கம்" அமைப்பு சார்பாகவும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!

## நதீஸ்வரனின் ஒரு கவிதை

–02.10.94

காகம் அழுதது
கலையடி ராசாத்தி

கப்பலும் வரையில்லை
கடுதாசியும் வரையில்லை
காயிதகாறன் என்னானானோ ?

ஊரை விட்டுப் போனராசா
இம் மாதமும்
ஒரு கடிதம் போட்டிருப்பான்.
கண்காணாத் தேசத்திலை
காப்பாத்தவேணும் கடவுளே....

ஊரெல்லாம் ஒடிஞ்சுபோச்சு
உறக்கமெல்லாம் குலைஞ்சுபோச்சு
பாழ்பட்டுப்போன பிரச்சினையுக்கை
ராசா
பாக்கத்தான் முகம் வருமோ ?

ஊர்க்கோயில் வீதியெல்லாம்
உன்னை நினைச்சு வேண்டிடுவேன்.
என்ரை
உசிர்மூச்சு இருக்கவேணும்
ராசா
உன்னை ஒருக்காப் பாக்கும்வரை!



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிதை எழுதுகிறேன்

கவிதை எழுதுகிறேன்

இளைய அப்துல்லாஹ்
(இலங்கை)

என் குழந்தாய்

கவிதை எழுதுகிறேன்.
என் தேசம் பற்றிய
உன்னிப்பில்.
சீழ்வடிக்கும் கண்களைப்
பெற்ற தாயே!
உன் சிந்தனையிலும்.
சம்மதம் கலந்த
பூமியை விட்டு
விலக்கப்பட்ட நிலையிலும்
தேசம் பற்றிய
ஈரலிப்பில்.
பூர்வீகம் இழந்துபோன
எங்கள்
எல்லாமே!
கண்ணீர் விடுவதும்
பின்னர்
கவிதை வடிப்பதும்
பின்னர்
உணர்விழப்பதுமான
மூன்று நிலைகளில்.

♦♦♦

சோனா வாரியாய்
இரும்பு மழைகள்
எங்கள் மக்களின்
தலையில்...
தேடிய பூமி
கிடைத்தது
சவமாய்.
அனைத்தும் இழந்த
அரைநிலையில்,
புத்தியும் அற்ற
புகலிடம் தொலைத்த
ஆண்களும் பெண்களுமாய்.

♦♦♦

துரத்தப்பட்டவர்கள்
மீண்டும்
திணிக்கப்படுகிறார்கள்.
"அகதி" பற்றிய
பயம் வேறு.
"இலங்கை" கொள்ளாத
தழும்பல் போக்கு.
ஊழியை விதி
காவி வருகிறது.
செத்தவீடுகளின்
பறை மேளம்
ஓங்கிக் கேட்கிறது.
குண்டுகள் வீசும்
விமானங்களை மீறி
கவிதை எழுதுகிறேன்.

எங்கள்
வடபுலத்து
மக்களைக் காப்பாற்றுங்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் குழந்தாய்

என் குழந்தாய்!
அடிமுடி தேடும் உன்
பார்வை ஆழத்தின் வேராய்....
என்னுள் எத்தனை
ரணங்கள்
அனைத்தும் உன் பற்றியது.
ஓடிக்களைத்த ஆற்றின்
பாளம் பாளமான வெடிப்புப்
போல உன் முன்னோக்குதல்

என் குழந்தாய்!
எத்தனை இரவுகள்
அழிந்து போயின.
தொலைத்தது நீ மட்டுமல்ல
நானும் என் மக்களும்
கண்ணே!

கலங்கிய எத்தனை காட்சிகளைத்தான்
இன்னும் மறக்காமல் இருப்பது
எத்தனை மின்கம்பங்களை
எத்தனை உடன்பிறப்புக்களின்
விகாரங்களை
எல்லாம்
நினைவிலிருத்துவது
மூளையின் அந்தப்பகுதியே
பாரம் தாளாளமல்
அவதிப்படும் போது
குழந்தாய்.....?

ஊமத்தங் கூவையும்
ஆந்தையும்
சுடலைக்குருவியும்
எத்தனை சிதிலங்களை
எங்களுக்கு
அறிமுகப்படுத்தியாயிற்று...

பாசிசம் பற்றிய தேடலின்
போதுதானே என்
உடன்பிறப்புக்கள்
காணாமல் போனதும்
பின்னர்
சடலங்களாய் கொண்டு
வந்ததும்.
என் குழந்தாய்1

இரவும் பகலும்
நெருக்கப்பட்ட
எங்கள் தாய்மண்
பற்றிய ஒவ்வொரு
அதிர்விலும்
குலுங்கி உறைவது
மானுடம்.
யாருக்கு என்ன கவலை?

தேசத்தின்
சிதைவுகளின் மேல்
ஆசனங்கள் வைத்து
அமர ஒத்திகை
பார்ப்பவர்களின் தேர்தல்
தீட்ஷண்யத்தினுள்
நாமெல்லாம் குறுகிப்
போகிறோம்.

ஆண்களும் பெண்களும்
குலுங்கி அழுகிறோம்.
என் குழந்தாய்!
சிதைந்த என் தேசம் பற்றிய
உன் விழிகளின் தேடலினூடு
என் உறைவும்.
காலத்தின் இறுக்கம்
பற்றிய
மீளாப் பயத்துடன்
உன்னைப் போலவே கண்ணே!
நானும் என் மக்களும்...

மனிதம் –29
அட்டைப்படம்
தந்த
தாக்கமே
இக் கவிதை

– இளைய
அப்துல்லாஹ் –



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

–தமயந்தி

# கிறான் மரமும் பனை வடலியும்

எல்லாம் முடிந்ததென்பதுபோல் மேற்கடலடியினிதழில் கவிழ்ந்துபடுத்து தன்னிதழ் உரசும் வானத்துச் சொண்டில் இரத்தத்தைப் பூசிவிட்டு, "கருத்தோல் போர்த்திய இரவே வருக! பரந்து விரிந்த உன் இருட்டு வலையை வீசியெறிந்து உனதிஷ்டம்போல் ஆள்வாயுலகை ஆதிக்கக் கரங்களை விரித்து" எனக் கூறிவிட்டு மறைந்தான் சூரியச் சக்கரவர்த்தி. பகலின் அனர்த்தங்களையே தாங்கமுடியாத கடல், மேனி நொந்து, சோர்ந்து, இரவின் கொடுமை எவ்வாறோவென எண்ணியெண்ணி அஞ்சியபடி மௌனமாக, ஆடாமலசையாமல் படுத்திருந்தது, அலைக் குழந்தைகளைத் தன் முந்தானைக்குள் மூடி மறைத்தபடி. மறைந்துபோன சூரியச் சக்கரவத்தி கூட எதிர்பாத்திராத நிகழ்வு நடந்தேறியது. உயிரை விடத் துடித்துக்கொண்டிருந்த ஒன்றிரண்டு நட்சத்திரச் சிப்பாய்களுடன் முழுமை பெறாத பாதி நிலவு படையெடுத்தது, "கவிழ்த்தேன் உலகை" என கறுப்புச் சாயம் பூசிப் புறப்பட்ட கரிய வான் வெளியின் களத்து மேட்டில். ஆயினும் இருளின் ஆள்கையினை அதனால் முறியடிக்க முடியாமற் போயிற்று. நள்ளிரவுக்கும் மேலாய் போராடிக் களைத்துப் போயின உடல் கொண்டு நிலவும், கூடவே நட்சத்திரச் சிப்பாய்களும். "வைத்திரு இதனை" என்று பூமியிடம் நிலவு கொடுத்த சிறிதளவு ஒளியை, காலம் முடிந்ததென அடிவானில் அடக்கமாகும் நிலவின் உடலுடன் போட்டு புதைத்தது பூமி.

சனி தினத்தின் ஜீவன் இருட்டுக்குள் புதைந்து போயிற்று. நகரத்தின் மையப்பகுதியில் சில மணி நேரங்களுக்கு முன்பாகவெல்லாம் இரட்டைகளாகவும், குழுவாகவும் மதுச் சாலைகளுள்ளும், இரவு விடுதிகளுள்ளும் நுழைந்து உலகை மறக்க முனைந்த இளைய மனிதக் கூட்டத்தினர் போதையின் சுக துக்கங்களுடன் இருப்பிடங்களைத் தேடி சென்று முடங்கிவிட்டனர். நகரத்தின் உயர்ந்த கட்டிடங்களின் ஒதுக்குப் புறங்களிலும், நகரத்தின் ஓரத்தில் எப்போதோ அமைத்து வைக்கப்பட்ட உருவழிந்த பழைய பூங்காவினுள் பல விதவிதமான, சுவைமிகுந்த, மதுவாடை வீசும் போதை நிறைந்த காதல் முத்தங்களையும், மென்மையான விரிப்பைப் பற்றிய கரிசனையற்ற இன்பச் சுவீகாரங்களையும் பல இரவுத் தாள்களில் வரி வரியாய்ப் படித்து அனுபவம் நிறைந்த கிறான் மரத்து ஒதுக்குகளிலும் சில இளைய சோடிகளின் இன்பப் பகிர்வுகள் அரங்கேறிக்கொண்டிருந்தன.

செக்பொயின்ற் நகரத்தின் பிரதான இறங்கு துறையின் வாயிலில் பன்நாட்டு வாசங்களையும் நுகர்ந்தபடி தன்னுடலை மெல்லிய ஒளிகொண்ட அலங்கார விளக்குகளால் மெருகூட்டியபடி இருப்புக்கொண்டிருக்கும் இரவு விடுதி இன்றைய தினத்தில் தன்னை நம்பி வந்தவர்களை குரோணர்களை மட்டும் பெற்றுக்கொண்டு மதுவையும், மங்கிய விளக்கொளியில் இசையின்பத்தையும், நடனமாட தன் வயிற்றின் நடுவில் இடமும் கொடுத்து, பிரியாவிடைகூறி அனுப்பி வைத்து விட்டு வெறுமையாகி தனித்துக் கிடந்து ஒளியிழந்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அன்னெ பிஜோர்க் செக் பொயின்றரை விட்டு எல்லா மனிதர்களும் தள்ளாடியபடியும், ஒருவரையொருவர் கட்டித் தழுவியபடியும் குழுவாகவும், அன்றைய தினத்துக்கான இன்பப் பகிர்வுகளுக்கு சோடிகள் சேராதவர்கள் "தெருவில் முயற்சி செய்வோம்" என்ற அற்ப நம்பிக்கையுடன் தனியர்களாகவும் வெளியேறியபின் இறுதியாக செக்பொயின்றரை விட்டு வெளியேறி தெருவில் தன்னை நகர்த்திக்கொண்டிருந்தாள் அன்னெபிஜோர்க்.

அளவான மதுவின் வருடல் அவளை நிதானத்துடன் கொண்டு சென்றது. கண்களுக்குப் புலப்படாத தூரங்களில் அன்றைய இரவுக்கான சுகங்களுக்குப் பகிரும் துணைகளைத் தேடும் இளசுகளின் கலகலப்புகள் காற்றில்லா பூமியில் பரந்துகொண்டிருந்தன. அன்னபிஜோர்க்கின் காதுகளையும் அவை வந்து தொட்டன. இப்படித்தான். இப்படியானதோர் காற்றற்ற அமைதியான, இன்பக் கலகலப்புக்கள் வியாபித்திருந்த அருமையானதோர் இரவுதான் அது. இரண்டு வருடங்களுக்கு முன்னால் வசந்தகால விடுமுறையொன்றின் இரவு அது. தோழிகள் சூல்வை, ஆன்னெ ஓசெ, றைடுன் ஆகியோருடன் முதல் தடைவையாக இரவு விடுதியான சுவர்க்கக் கூரைக்கு வந்திருந்தாள். சூல்வை, ஆன்னெ ஓசெ, றைடுன் மூவருக்கும் இது முதற்தடவையல்ல. அவர்கள் மூவரும் ஏற்கெனவே இரவுவிடுதி அனுபவமுள்ளவர்கள். ஆனால் அன்னெபிஜோர்க்கிற்கு இதுவே முதற்தடவையாக இருந்தது.

ஒவ்வொருவரும் தலா மூன்று கோப்பைகளுக்கு மேல் பியர் அருந்தி முடித்து மறுபடியும் ஆளுக்கு ஒவ்வொரு கோப்பை பியரை வாங்குவதற்காக றைடுன் சென்றுவிட்டாள்.

வாருங்கள் நடனமாடி வருவோம் என எல்லோரையும் ஆன்னெ ஓசெ அழைத்தாள்.

"ஆமாம் இது மிகவும் நன்று" ஆமோதித்தாள் சூல்வை. வெண்ணுரைகள் கொதித்து மிதக்க, கோப்பைகள் நிறைந்த மதுவுடன் றைடுன் வந்து சேர்ந்தாள்.

இவற்றை இப்படியே வைத்து விட்டு வாருங்கள் நடனமாடி வந்து பருகுவோம் என உரைத்தபடி மேசை மீது மதுக் கோப்பைகளை வைத்தாள் றைடுன்.

அது பற்றித்தான் பேசிக்கொண்டிருக்கின்றோம். –கட்டை விரலால் அடிக்கட்டையில் தட்டி சிகரட் முனையில் துருத்திக்கொண்டிருந்த சாம்பலை சாம்பற்கோப்பையில் சேர்த்தபடி ஆன்னெ ஓசெ கூறினாள்.

"எனக்கு நடனமாடப் பிடிக்கவில்லை" என்ற அன்னெபிஜோர்க்கை மூவரும் அதிசயமாகப் பார்த்தனர். அன்னெபிஜோர்க் நன்றாகவே நடனமாடுவாளென்பது மூவருக்குமே தெரியும். நடனமாடுவதில் அன்னபிஜோர்க்குக்கு மிகவும் இஷ்டமுண்டென்பதுவும் அவர்களுக்குத் தெரியும். அப்படியிருந்தும் அவளுக்குப் பிடித்தமான நடனத்தை ஆடுவதற்க்கு ஏன் மறுக்கிறாள் எனபதே மூவரது பார்வைகளிலும் துருத்தி நின்ற கேள்வியாகும்.

"உனக்கு நடனம் பிடிக்கவில்லையா..?" றைடுன் அதிசயக்கிண்டலாகக் கேட்டாள். உன்னுயிர்த் தோழன் நடனம்தான் என்பாயே...? இன்றென்னவாயிற்று அன்பே உனக்கும் உனது தோழனுக்குமிடையில்...? ஆன்னெ ஓசெ அவளது தாடையைத் தடவியபடி தனது சிறிய நீலக் கண்கள் இரண்டையும் சிமிட்டி நின்றாள்.

"அன்பே ஓசெ இன்று எனக்கு நடனத்தை ரசிப்பதுதான் பிடித்தமானதாயுள்ளது. நீங்கள் ஆடுங்கள், நான் ரசிக்கின்றேன். என்னை மட்டும் தொந்தரவு செய்யாதீர்கள், தயவு செய்து விட்டு விடுங்கள்"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதிலுரைத்துவிட்டு அன்னெபிஜோர்க் தனக்கான புதிய மதுக்கோப்பையை எடுத்து ஒரு மிடறு புது பியரை சுவை பார்த்து விட்டு மீண்டும் மேசை மீது வைத்தாள்.

மங்கலான வர்ண விளக்குகளின் சிமிட்டல்களிடையே திரளோடு திரளாய் மூவரும் நடனாமாடிக்கொண்டு நின்றனர். அவர்களது நடனத்தை ரசித்தபடி அன்னெபிஜோர்க் தனது இருக்கையில் அமர்ந்திருந்தாள்.

அழகிய பெண்ணே! என்னோடு நடனமாட உனக்கு விருப்புள்ளதா...? குரல்கேட்டு திரும்பினாள் அன்னெபிஜோர்க். பாதி போதையில் அவன் நின்றிருந்தான் பின்னால். எதிர்பராத விதமாய் எழுந்த அவனது கேள்விக்கு உடனடிப் பதிலிறுக்க முடியவில்லை அவளால். மௌனமாய் அவனைப் பார்த்தபடியே இருந்தாள்.

"என்னோடு நீ நடனமாட உடன்படுவாயானல் இந்த இரவு எனக்கு மிகவும் மகிழ்வுடையதாக இருக்கும். சில நிமிடங்களை எனக்காக சமர்ப்பிக்க மாட்டாயா பெண்ணே...?" கெஞ்சுவதுபோல் அவனது வேண்டுதல் இருந்தது.

வர்ண விளக்குகளின் மின்னல்களிடையே நடனமாடும் கூட்டத்துடன் கலந்து கொண்டனர் அன்னபிஜோர்க்கும், அவனும்.

பார்த்தாயா வேடிக்கையை...? "எங்கள் விண்ணப்பத்தை மறுத்த விண்ணாணத்தாள் இப்போது எவனோ ஒரு அந்நியனுடன் ஆனந்த நெருக்கமாய் ஆடுகிறாள" ஓசெ தனது நர்த்தனத்திடையே றைடுனின் காதைக் கடித்தாள்.

"யாரிவன்...? துருக்கியனா..?" ஓசெயிடம் றைடுன் .

"ஆசியனாய் இருக்க வேண்டும்" றைடுனிடம் ஓசெ.

இருக்கலாம். எனதெண்ணம் இவனொரு பாக்கிஸ்தானியென. நீயென்ன கருதுகிறாய்..? றைடுனின் கேள்விக்கு ஒப்பாய் தலையசைத்தாள் ஓசெ.

புதினமொன்றைக் கண்ணுற்றீர்களா பெண்களே...? இருவருக்குமிடையில் நடனத்துடனேயே வந்து சேர்ந்தாள் சூல்வை.

"மௌனமாகு சின்ன மலரே. நாங்கள் நடப்பதை அறிவோம். நீ இப்போதைக்கு மௌனித்திருப்பாயானால் இன்னும் அறிவோம் பின்னால். நடன நேரம் முடிவுறட்டும்" றைடுன் தங்கள் மூவருக்கும் கேட்கும்படி கூறிக்கொண்டே ஆடுகிறாள்.

"இலங்கையனா...?"

"ஆமாம். ஆனால் நான் இலங்கையை விட்டு வெளியேறி ஏழு வருடங்ளாகின்றன."

"அதனால் நீ இலங்கையன் இல்லை என்கிறாயா..?"

"சட்டப்படி அப்படிதான். நான் நோர்வேஜியப் பிரஜை. நோர்வேஜியக் கடவுச்சீட்டு."

"நிறவாதிகளுக்கு அது பொருட்டல்ல.... கேட்க மறந்து விட்டேன்: எனது பெயர் அன்னபிஜோர்க். அன்னபிஜோர்க் ஊலாவ்: உனது பெயர்...?"

"மூர்த்தி."

"அழைப்பதற்கு இலகுவான பெயர்தான். நான் சந்தித்த உனது தேசத்தவர்களது பெயர்கள் அநேகமானவை அழைப்பதற்கு மிகவும் கடினமானதானவை."

"உனது பெயர் மிகவும் அழகானது. எனக்குப் பிடித்திருக்கிறது."

நடனமாடி முடித்து மீதமான பியரை அருந்தியபடியே உரையாடிக்கொண்டிருந்த இருவரையும் கவனித்தும், கணக்கிலெடுக்காதவர்கள்போல் வந்தமர்ந்தனர் தோழிகள் மூவரும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"பெயர் மூர்த்தி. இலங்கை." மூவருக்கும் அவனை அறிமுகம் செய்து வைத்தாள் அன்னபிஜோர்க்.

"எங்களுக்குத் தெரியாமல் உனக்கொரு இலங்கைக் காதலனா..?" றைடுன் நையாண்டியாய்.

"இல்லையில்லை. இப்போதுதான் அறிமுகமாகினோம்" அன்னபிஜோர்க்.

"அப்படியானால் இனிமேற்தான் காதலா..?" ஓசெ தலையைச் சரித்துப் புன்னகைத்தபடி. அவர்களுக்கள் சிரிப்பொலிகள் எழுந்தன. அவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். அந்த இரவு அவர்களோடு அவனுக்கும் இரவு விடுதியில் ஆனந்தமாய்க் கழிந்தது. தொடர்ந்தது. தோழிகளற்ற வேளையிற்கூட அவனோடு அன்னபிஜோர்க் இரவு வர்ணங்களையும், அந்த வர்ணங்களுக்குண்டான இனிய இசைகளையும், அந்த இசைகளுக்குண்டான இனிய அந்தரங்கங்களையும் தமக்குள் பகிர்ந்து சுவைத்தனர் போதைச் செறிவு குறைந்த மதுவுடன்.

"உனக்கு நேரம் ஒத்து வருமா பெண்ணே என்னுடனிந்த இரவைக் கழிக்க...?"

தனதண்மையில் ஒலித்த குரலுக்குரியவனை நோக்கி மீண்டாள் அன்னெபிஜோர்க். தெரு விளக்கு கம்பத்துடன் சாய்ந்தபடி போதை கண்களிரண்டாலும் கொடியசைக்க அவன் நின்றுகொண்டிருந்தான். மஞ்சள் நிற தெரு விளக்கின் ஒளியில் அவனது புன்னகைத்த முகம் பொன்போல் மிளிர்ந்தது.

"மன்னித்துக் கொள் நண்பனே. எனக்கு இன்று நேரம் ஒத்து வராது. இன்றல்ல என்றுமே எனது நேரம் ஒத்து வராதது. மன்னித்துக்கொள்" அன்னபிஜோர்க் அந்த வாலிபனுக்கு பதிலிறுத்து விட்டு, தனது அறையை நோக்கி தன்னை நகர்த்தலானாள்.

"ஹலோ...! ஆர் சித்தப்பாவா? நாந்தான் மூர்த்தி. ஆள் வெளிக்கிட்டிட்டாவோ?"

"ஓம் தம்பி. ரெண்டு மணிக்கு பிளைட் எடுத்திற்றுது பிள்ள. எங்கட நேரம் ரெண்டு மணி".

"எல்லாம் வாங்கிவிட்டியளோ....?"

"என்ன தம்பி...? சத்தமாக் கதையும்"

"எல்லாம் தந்திட்டினமோ...?"

"ரெண்டுதான் தம்பி தந்தவையள். அப்பிடியே வாங்கி அம்மாட்டக் குடுத்திட்டன்..."

"ஏன்...? மிச்சத்துக்கு என்னவாம்..?"

"என்ன தம்பி..? மிச்சமோ?! மிச்சம் மூணும் அடுத்த மாசம் தருகினமாம்"

"அந்தக் காணி...?"

"ஓமோம். காணி எழுதித் தந்திட்டினம். அடுத்த மாசம் அவயள் தாற மூணயும் வச்சு நீர் சொன்னதுமாதிரி காணிக்க வேலயத் தொடங்கலாமெண்டு நினைக்கிறன். கொப்பரும் அப்பிடித்தான் சொன்னவர். அவயளுக்கும் ஒரு ஒழுங்கான வீடில்லத்தானே...?!"

"வேணாம் சித்தப்பா. அதப் பிறகு பாப்பம். மிச்சம் மூணயும் அப்பிடியே வாங்கி கொழும்பில என்ர பேரில எக்கவுண்ட் திறந்து போட்டு விடுங்கோ. பேங்கர்மாமாவோட எல்லாம் விபரமாக் கதச்சிருக்கிறன். அவரயும் சந்தச்சிட்டுப் போங்கோ"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# உன் சிரிப்பென்ற மாயப்பொடி

தங்கநகை சுற்றுகின்ற
பட்டுக் காகிதத்துள் மடித்தா
இல்லை,
வெயில் கொஞ்சம் குறைந்திருக்கும் பொதுநிறத்துப் பகலில்
நீ விரும்பி அணிகின்ற நீலநிற
பூப்போட்ட பூமணக்கும் சேலையுள்ளா
சிரிப்பை
மடித்து வைத்துவிட்டு வந்துள்ளாய் வீட்டில்!

நான் கடிதமாகிவந்து உன்வீட்டில் சீவிக்கும்
உனது இரகசிய
பொன்முலாம் பூசிய அந்தப்
பெட்டிக் கண்ணுள்ளா!

நீ இன்று
சிலந்தி வலைபின்னி, அதில் கொசுபட்டுத் தொங்கி
முகத்தை வைத்திருப்பது,
இந்தக் கந்தோர் நிலத்தின் அடிக்குப்போய்
மேலும் மேலும் புதையத்தான், சதைப்புஷ்பம்!

நீ சிரித்தால்
இக் கந்தோர்
ஆகாயம் போய் நிற்கும்.
அலுவலுக்கு வருகின்ற ஊர்மக்கள்
தேவ குதிரைகளில் ஏறிவந்து பணிமுடிப்பர்.
உன் சிரிப்பு எங்கே,
மணக்கும் அந்த
மாயப் பொடி எந்த
மணிக்குள் மூடி வைத்துவர இருக்கிறது!

கந்தோர் கட்டடத்தின்
கூரை புதைகிறது.
அது இறங்கி முடிவதற்குள்
சொல்லு, நான்போய் எடுத்துவர காற்றாவேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் கந்தோர் முழுமதி

கப்பல் விட்டபடி குதூகலிப்பாய்
நான் சிரித்தால்.
கடலை உன் மேசையிலே கூட்டி இருத்திவைத்து
அதற்குள்.

மலையைத் தலைமயிரில் கட்டிக் கிறுக்குவாய்
தென்றலைக்கூட்டும் நெடிய கூந்தலல்லவா உன்னுடைய
தலையின் மயிர்கள்!
அலைகளால், கதிரையிலே
இருந்தபடி,
உனது,
வேலைகளையும் சாட்டுக்குச் செய்தபடி.

அன்று நீ
வானம் விட்டாய்!
சீறி வீசும் பெருங்காற்றும் இல்லை,
அன்று
மரங்கள் வேர் ஆட்டி எச்சரித்த,
செத்துப்போகும் அளவுக்கு இருந்த,
தினம்.
இருந்தாலும்,
நீ இருப்பிடத்தில் இருந்து விட்ட வானம்
சிறிய நெடு நூலில்
பறந்தது மிக நன்றாய்.

நான் சிரித்தால்,
அல்லது கதைத்தால்,
நீ இவ்வளவும் செய்கின்றாய்,
செய்யாதமாதிரி இருக்கும் ஒரு விதமாய்!
இன்று நான் கதைக்கவில்லை, என்னசெய்வாய்;
நெஞ்சு பிய்ந்து
அதன் துண்டுகளை நான் பொறுக்கி
ஒட்ட முடியாத ஒரு நிலையில்.
தனிப்பட்ட வேதனையில்.

ஓ....... உன் கண்ணைக் கழற்றி மேசையிலா வைத்துவிட்டாய்
முகத்தால் இரத்தம் வடியும்
என் கந்தோர் முழுமதி!

*சோலைக்கிளியின்*

**இரு கவிதைகள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# உளவியல் பார்வையில் நாசிசம் — 3

நாசிசத்தை உளவியல் அடிப்படையில் விளக்க முனையும் இக் கட்டுரை இன்றைய நிலைமைகளை இன்னொரு பரிமாணத்தில் விளங்கிக் கொள்ள உதவும்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி – இறுதிப் பகுதி)

இனி, கிட்லரின் குணாம்சங்களை சிறிது பார்ப்போம். அவரது படிப்பினைகள், நாசிச அமைப்பு என்பன 'ஆட்சியாதிக்கக்'' கொள்கையினை அடிப்படையாகக் கொண்டது. இதுவே ஏறத்தாழ நாசிச அறைகூவலை ஏற்றுக்கொண்ட மக்களின் சமூகப் பண்பாகவும் இருந்தது. கிட்லரின் சுயசரிதை ஆட்சியாதிக்கக் கொள்கைக்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டு. அதுதவிர நாசி இலக்கியங்களில் முதன்மைப் பிரதிநிதி என்ற கணிப்புமிருக்கிறது. எனவே இதனை எனது ஆய்வின் முதன்மை ஆதாரமாக எடுத்துக் கொள்கிறேன்.

ஆட்சியாதிக்கத்தின் சாராம்ச குண இயல்பாக சாடிச மசோகிச சமகாலப் பிரசன்னம் விபரிக்கப்படுகிறது. மற்றையவர்கள்மீது அளவற்ற அதிகாரத்தை நிலைநாட்டும் நோக்கமும், அவ் அதிகாரம் பிறரின் அழிவுத்தன்மைக்கு காலாயிருக்கும் போக்கினையும் சாடிசம் எனக் கணிக்கின்றனர். மசோகிசம் ஒரு மாபெரும் சக்தியினுள் தன்னை அர்ப்பணித்து, அச் சக்தியின் பலத்தில் அதன் புகழினில் பங்கேற்று மகிழ்வதெனக் கருதப்படுகிறது. இவ்விரு குண இயல்புகளுமே தனிமைப்படுத்தப்பட்ட ஓர் மனிதன் –சமூகத்தில் தனியனாக நிற்பதற்கான பலமில்லாமையால்– சமூக இணைவாழ்வு உறவினை ஏற்படுத்தி, தனது தனிமையைப் போக்கும் தேவையின் விளைவாக அமைகிறது.

ஆளுமைக்கான சாடிச ரீதியான ஆவல் கிட்லரின் "எனது போராட்டம்" (Mein Kampf) என்ற புத்தகத்தில் பலதடவைகள் வெளிப்படுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. ஜேர்மன் மக்களின் மீதான கிட்லரின் வெறுப்பும், 'அன்பும்' சாடிசத்திற்கேயுரிய ஓர் குணாம்சம். அதுபோலவே இவரது அரசியல் எதிரிகள்மீது செலுத்திய அராஜகமும் சாடிசத்தின் முக்கியமான குணாம்ச வெளிப்பாடாக இருந்தது. அவர் தனது ஆளுமையின் கீழ் இருக்கும் மக்களின் திருப்தி பற்றிக் குறிப்பிடுகையில் "அவர்களுக்குத் தேவையானதெல்லாம் வலியவர்களின் வெற்றியும், நலிந்தவர்களின் அழிவு அன்றேல் வரைமுறையற்ற அர்ப்பணிப்பும்." ஓர் புழுவைப்போல்.... தன்னிலும் வலிவு குறைந்தவர்களை தன் ஆளுமையின் கீழ் வைத்துக் கொள்ளாது, மாறாக தன்னை முழுமையாக வலியவருக்கு அர்ப்பணித்துக் கொள்வது என்பதாகும். இவ்வாறு மக்கள் ஆளுபவனை நேசிக்கிறானே ஒழிய ஆளுமைக்கு உட்படுபவனையல்ல. எந்தவொரு சித்தாந்தம் தலைவனைத் தவிர வேறொருவரையும் தலைமைப் பதவிக்கு ஊடுருவ விடாதிருக்கின்றதோ அந்தச் சித்தாந்தத்தை உள்ளார உளத் திருப்தியுடன் நேசிப்பார்கள். பரந்த சுதந்திரம்

www.tamilarangam.net

இவர்களுக்கு ஒரு பாரமாகவே அமையும். அவ்வாறான சுதந்திர அமைப்பில் இவர்கள் அடிக்கடி திசையறியாது தனது சுதந்திரத்தினை என்ன செய்வதென்று தெரியாது திகைப்பதுடன், தான் தனிமைப்பட்டுப் போனதாக உணர்ந்து நிற்பர். இவர்கள் தங்கள் உணர்வுகள் எவ்வளவு கேலிக்கிடமான வகையில் கையாளப்படுகின்றது, மழுங்கடிக்கப்படுகின்றது என்பதை உணரார். மனித சாராம்ச ரீதியான சுதந்திரம் இவர்களது வாழ்முறையில் எட்டியும் பார்க்காத அளவிற்கு தடைசெய்யப்பட்டு, (இவர்கள்) தாங்கள் வரித்துக் கொண்ட சித்தாந்தத்தில் கற்பனையில் மாத்திரம் அதை கவர்ச்சிப் பொருளாக ஆளுபவர்கள் வைத்திருப்பர்.

"பார்வையாளர்களின் மனோபலத்தினைத் தகர்த்து, தங்கள் பிரச்சாரங்களை ஏற்க வைப்பதற்கு பேச்சாளருக்கு அதிக பலம் வேண்டும். இதுவே பிரச்சாரத்தின் முக்கியம்" எனக் கூறினார் கிட்லர். அது மட்டுமல்லாது பார்வையாளர்கள் உடல் களைப்புற்றவர்காளாக இருப்பின் அது இன்னும் உகந்ததாக இருக்கும் எனவும் குறிப்பிட்டார். ஆகவே ஒரு தினத்தின் எந்த நேரத்தில் அரசியல் கூட்டங்களை நடாத்த வேண்டும் எனத் தீர்மானிப்பது முக்கியமான தென்பதும் அவர் கருத்து. "காலையிலும் நாள் முழுவதும் கூட ஓர் மனிதனின் மனோபலம், அதனை அடக்க முயலும் இன்னொரு பலத்திற்கு எதிராக வீறுகொண்ட சக்தியுடன் எதிர்த்தெழும்; ஆனால் பின்னேரங்களில் தன்னிலும் கூடிய ஓர் பலத்தின் முன்னால் இலகுவாக நெகிழ்ந்து விடும். உண்மையிலேயே இவ்வாறான அரசியல் கூட்டங்கள் இரு எதிர் சக்திகளுக்கும் இடையிலான மல்யுத்தம் போன்றதே. ஆயினும் திறமையான, அதேநேரத்தில் போதனை போன்று தொனிக்கும் பேச்சுத் திறமை புதிய அங்கத்தவர் களை வென்றெடுக்க உதவும். ஏனெனில் பார்வையாளர்கள் மனோபலம் மெல்ல மெல்ல தங்கள் பிடியிலிருந்து நழுவுவதை உணர்வர். ஒருவரின் மனோபலம் அவரது பிடியிலிருக்கும் போதிலும் பார்க்க, வலுவிழந்த இந் நேரமே பிரச்சாரத்தின் வெற்றி இரகசியம்."

ஒரு மனிதன் தன்னை ஓர் சக்தியிடம் முற்றும் முழுவதுமாக ஒப்படைப்பதற் கான மனோநிலையை தோற்றுவிக்கும் சூழ்நிலைகளைப் பற்றி கிட்லர் நன்றாகவே அறிந்திருந்தார். இதுபற்றி ஓர் திறமையான விளக்கத்தையும் அவர் கொடுக்கின்றார்.

"ஓர் மக்கள்திரள் அரசியல் கூட்டத்தின் அவசியம் என்னவெனின், ஓர் தனிமனிதன் புதிதாக அரசியல் இயக்கமொன்றினுள் தன்னை இணைத்துக் கொள்ளும்போது, தனிமையை உணர்வதுடன் தான் தனிமைப்பட்டுவிட்டேனோ என்ற பயமும் அவனைப் பீடிக்கின்றது. ஆனால் இவ்வாறான கூட்டமொன்றில் அவன் பங்கேற்கும் பொழுதுதான், தான் எவ்வளவு பெரிய சமூக அமைப்பினுள் தன்னைப் பிணைத்துள்ளேன் என்பதனை முதன்முறையாக அறிகின்றான். இதுபோன்ற மக்கள் திரளின் மத்தியில் தனிமனித னது உணர்வு உரம் பெறுவதுடன், புதிய உற்சாகத்தையும் அவன் பெறுவான். கிட்டத்தட்ட எல்லோருக்குமே இந்த உணர்ச்சிக் கிளர்வு ஏற்பட வாய்ப்புண்டு....... யாராவது ஒருவர் தனது சிறிய தொழிற்கூடத்திலிருந்தோ அன்றேல் பாரிய வியாபார ஸ்தலத்திலிருந்தோ ஆயிரக் கணக்கான மக்கள் கூடியிருக்கும் ஓர் அவையினுள் நுழையும் பொழுது முன்னையதில் தனிமையை உணர்ந்தவர் பின்னையதில் தன்நம்பிக்கையைப் பகிரும் தொகையினர் மத்தியில்.... தானே தனக்குள் உருவாகும் ஒருவித மனக்கிளர்வில் எதிர்ப்பாற்றல்களை இழந்து விடுவார். இதனை நாங்கள் "மக்கள் திரள் மயக்கம்" (Mass Suggestion) என அழைக்கின்றோம்.

கோயபெல்ஸ்சும் மக்களை இவ்வாறான கண்ணோட்டத்தில்தான் விபரிக்கின்றார். "மக்கள் தாங்கள் சரியான முறையில் ஆளப்படுவதைத் தவிர வேறொன்றையும் விரும்புவதில்லை." –தனது நாவலான 'மிசயேலில்' இவ்வாறு குறிப்பிடுகிறார். "சிற்பிக்குக் கல் எவ்வாறோ அவ்வாறேதான் எனக்கும் மக்கள்! தலைவனு க்கும் மக்களுக்கும் இடையிலான பிரச்சினை ஓர் அச்சிடுபவருக்கும் நிறங்களுக்கும் இடையிலான சிறிய பிரச்சினை போன்றதே." இன்னுமொரு நூலில் இவரது சாடிசத் தன்மை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தெளிவாக வெளிப்படுகின்றது. "மற்றையவர்கள் மீது ஆளுமை செலுத்தமுடியாவிடின் எவ்வளவு பலமற்றவனாகவும் வெறுமையானவனாகவும் உணர்கின்றேன். ஆனால் அதேவேளையில் ஆளுமை எனக்கு புதிய சக்தியைத் தருகிறது" என்கிறார். அவரது மனநிலை வேறுபாடுகள் பற்றி அவரே குறிப்பிடுகையில் "சிலவேளைகளில் ஒருவர் ஆழமான மனச்சோர்வுடையவராக இருப்பார். இதனை நிவர்த்தி செய்ய மக்களின் வழிநடத்தியாக நின்றால் இச் சோர்வு தானாகவே பறந்துவிடும். ஏனெனில் மக்களே சக்தியின் ஊற்று" என்கிறார்.

நாசிகளால் தலைமைத்துவத் தகுதி என்று கருதப்பட்ட -அதாவது மக்களைத் தங்களது ஆட்சியின் கீழ் வைத்துக் கொள்வதற்கான சக்தியே தலைமைத்துவம் என்றதான- வரையறை ஜெர்மன் தொழிலாளர் முன்னணி (German Labor Front) தலைவர் லேயினால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒன்று. நாசி தலைவர்களது குணநலன்கள் பற்றியும் அவர்கள் பெறவேண்டிய கல்வியின் தன்மை பற்றியும் அவர் எழுதுகையில்... "முதலில் எங்களுக்குத் தெளிவாக வேண்டியது தலைவர்களாகப் போகின்ற இவர்கள் மக்களை வழிநடாத்த வேண்டுமென்று முழுமனதாகவிரும்புகிறவர்களா? எஜமானர்களாக இருக்க விரும்புகின்றவர்களா? ஒரே சொல்லில் ஆள விரும்புகிறவர்களா?..... நாங்கள் ஆள விரும்புவதுடன் ஆளுமை அளிக்கும் சந்தோசத்தையும் அனுபவிக்க விழைகின்றோம்..... இந்த இளம் தலைவர்களுக்கு நாங்கள் குதிரைகளை அடக்கிச் சவாரிசெய்யும் திறனை கற்பிப்போம். இதனால் ஓர் உயிரின் மேலான முழு ஆதிக்கத்தையும் இவர்கள் உணர்ந்து கொள்வார்கள்."

இவ்வாறான கோட்பாடுகளே கிட்லரின் கல்வி பற்றிய கருத்திலும் விரவியிருந்ததை அவதானிக்கக் கூடியதாக இருந்தது. அவர் கூறியிருந்தார்... "மாணவர்களின் முழுக் கல்வி முறையும் அவர்களது வளர்ச்சியும் நாங்கள் மற்றையவர்களை விட உயர்ந்தவர்கள் என்ற நம்பிக்கையை வலுப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். ஆனால் வேறோர் இடத்தில் "ஓர் பையன் அநீதியையும் சகித்துக் கொள்ளப் பழகவேண்டும்" எனவும் கிட்லர் குறிப்பிடுகிறார். அப்போதுதான் அவன் தலைவனுக்கு எதிராகத் திரும்ப மாட்டான் என்று கருதுகிறார் என நான் நினைக்கிறேன். வினோதமான கருத்து! இவ்வாறான மனோநிலை சடோ-மாசோசிசத் (Sado Masochistic) தன்மையின் வெளிப்பாடே. (ஆளுமைக்கான ஆசையும் அதேவேளையில் அடிபணிவுக்கான ஆவலும்)

மக்களின் மீது ஆட்சி செலுத்துவதற்கான ஆவலே நாசித் தலைவர்களின் உள் அவாவாக இருந்தது. மேலே குறிப்பிட்டது போல் சிலவேளைகளில் ஆட்சிக்கான அவா மிகத் தெளிவாகவே வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டது; சிலவேளைகளில் இவ் ஒப்புக்கொள்ளல் அவ்வளவு வெளிப்படையாக இல்லாவிடினும் மக்கள் ஆளப்படுவதையே விரும்புகின்றார்கள் என்பதுபோல் மென்மையாக வெளிப்படுத்தப் பட்டது. சிலவேளைகளில் மக்களை சிறிது தூக்கி வைத்துப் பேசி தங்கள் கபடத்தனத்தை மறைக்க முயற்சித்தனர். தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் (Self preservation) உணர்வு பற்றிப் பேசுகையில் கிட்லர், "ஆரியர்களின் இவ் உணர்வு ஓர் உயர்ந்த தளத்தினை எட்டிவிட்டது. ஆரியன் 'நான்' என்ற முனைப்பினை (Ego) தனது சமூகத்திற்கு அர்ப்பணித்ததுடன் காலத்தின் தேவையையொட்டி அதனைத் தியாகம் செய்யவும் தயங்க மாட்டான்" என்றார். கிட்லரைப் பொறுத்தவரை தன்னைப் பாதுகாத்தலும் அதிகாரவெறியும் கிட்டத்தட்ட ஒன்றாக இருந்ததென்பதனை பின்பு பார்ப்போம்.

தலைவர்கள் ஆட்சிச் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருக்கையில் மக்களுக்கு சாடிச மனநிறைவு தொடர்ந்து வழங்கப்பட்டது. ஜெர்மனிக்குள்ளும் வெளியேயும் இன, அரசியல் ரீதியான சிறிய குழுக்கள், 'தேய்ந்து' கொண்டிருக்கும் நாடுகள் என்பன இவர்களது குரூர மகிழ்ச்சியின் அடிப்படைகளாகக் கொள்ளப்பட்டன. கிட்லரும் அவரது சகாக்களும் ஜெர்மன் மக்கள்மீது ஆதிக்கம் செலுத்த, ஜெர்மன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களோ உலகினில் உயர்ந்த குடி என உலகின் மீது ஆதிக்கப் பார்வையைக் கொண்டிருந்த துடன், உலகினைத் தாங்கள் ஆளவேண்டும் என்ற பேராவல் அவர்கள் உள்ளத்தில் நிறைந்திருந்தது.

கிட்லரும் உலகினைத் தானும் தனது கட்சியும் ஆளவேண்டும் என்ற விருப்பினைத் தெளிவாகவே வெளிப்படுத்தினார். அமைதியை விரும்புவர்கள் பற்றி அவர் கேலிசெய்கையில்.... "உயர்ந்த கோட்பாடுகளையுடைய ஓர் மனிதன் ஏற்கனவே உலகினை வெற்றிகொண்டு அவனே உலகின் எஜமானன் என்ற பின்பு, அமைதியை விரும்புபவர்களது சிந்தனை நல்லதெனவே கொள்ளவேண்டும்" என்கிறார்.

தொடர்ந்தும்... "இனம் மாசடைந்து கொண்டிருக்கும் காலகட்டத்தில் இருக்கும் தேசமொன்று –என்றோ ஒருநாள் உலகத்தைக் கட்டியாளப்போகும்– இவ் இனத்தின் தூய்மையினைப் பாதுகாப்பதற்கு தன்னை அர்ப்பணித்துக் கொள்ளும்" என்றார்.

வழமையாக கிட்லர் தனது ஆட்சிக்கான ஆவலை நியாயப்படுத்திக் கொள்வார். அவரது முக்கியமான நியாயப்படுத்தல்களில் சில இங்கே தரப்படுகிறது.

"நான் மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துவது அவர்களது நன்மைக்காகவும் உலக கலாச்சார நலன் கருதியுமே. ஆளுமைக்கான ஆவல் இயற்கையின் விதியே. நான் அதனை உணர்ந்து இயற்கையின் சட்டங்களைக் கடைப்பிடிக்கின்றேன்" என்கிறார்.

தான் தனக்கும் மேலான சக்தியின் கட்டளையின் கீழ்த்தான் இயங்குவதாகவும், இச் சக்தி கடவுள். விதி, சரித்திரம், இயற்கை என்பன போலவும் கூறினார்.

"எனது ஆளுமையைக் கையிலெடுக்கும் முயற்சி மற்றவர்கள் என்னையோ ஜெர்மன் மக்களையோ தங்கள் ஆதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்கு எடுக்கும் முயற்சிகளின் முறியடிப்பே. நான் விரும்புவது சமாதானத்தையும் சுதந்திரத்தையுமே." என்கிறார்.

மேற்கூறிய இவரது நியாயப்படுத்தல்களில் முதலாவதை அவரது "எனது போராட்டம்" (Mein Kampf) என்ற புத்தகத்தின் இப் பந்தியில் காணக்கிடக்கின்றது.

"சரித்திரத்தில் காணப்படுவதுபோல் மற்றையவர்களிடம் காணப்பட்ட இன ஒற்றுமை ஜெர்மன் மக்களிடம் இருந்திருக்குமாயின் ஜெர்மன் சாம்ராச்சியம் இன்று உலகினை ஆண்டுகொண்டிருக்கும். ஜெர்மன் உலகை ஆண்டுகொண்டிருந்தால் உலகில் சமாதானம் இன்று ஒலிவ் மரத்துக் கிளையுடனும் கண்ணில் கண்ணீருடனும் இருக்கும் சமாதான விரும்பிகளினால் அல்ல, மாறாக வீரவாள்களுடன் மக்களை நடாத்திச் சென்ற தலைவர்களினால்தான் ஈட்டப்பட்டிருக்கும். அவ்வாறான வீரமே உலகினை மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்தது."

இக்கால கட்டங்களில் இவரது பேச்சுக்கள் ஜெர்மன் மக்களினது நலன்களைப் பற்றியதாக மாத்திரமல்லாது, பரந்துபட்ட மக்களின் நலன் கருதிய பேச்சாக அமைந்திருந்ததை ஒவ்வொரு பத்திரிகை வாசிப்பவரும் அறிந்துகொள்ளக் கூடியதாக இருந்தது.

இரண்டாவதான நியாயப்படுத்தல் –தனது ஆளுமைக்கான ஆவல் இயற்கையின் விதிப்படியானதென்பது– கண்துடைப்புச் செயலே. அத்துடன் இந்த உணர்வு தனக்கு வெளியே உள்ள இன்னுமொரு சக்தியிடம் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதற்கான ஆவலின் வெளிப்பாடே (கடவுள், இயற்கை, சரித்திரம், விதி). கிட்லரின் டாவினிசம் பற்றிய கொச்சையான விளக்கத்தில் "உயிர் வாழ்வன தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உணர்வு" என்பதை அவர் "மனித சமூகங்களைப் பாதுகாப்பதே முதன்மையானது" என விளக்குகிறார்.

தன்னைப் பாதுகாத்துக் கொள்வதற்கான உணர்வு எளியவர்களை வலியவர்கள் அடக்கியாள்வதற்கான சண்டைக்கு இட்டுச்சென்று, அது பொருளாதார மேலாண்மைக்கு வழிவகுத்து, இறுதியில் வலியவர்கள்தான் வாழத்தகுந்தவர்கள் என்று முடியும். தன்னைப் பாதுகாக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உணர்வுடன் மற்றையவர்கள்மீது ஆளுமை செலுத்த வேண்டும் என்ற கிட்லரின் கூற்று மிகத் தெளிவாகவே வெளிப்படுகிறது. "மனிதனின் முதல் கலாச்சாரம் பழக்கியெடுக்கப்பட்ட மிருகங்களில் தங்கியிருந்ததிலும் பார்க்க, கூடியளவு தரத்தில் அல்லது நிலையில் மற்றவரைவிட தாழ்ந்தோரிலேயே தங்கியிருந்தது' என்கிறார்.

தனது சாடிசத்தை இயற்கையின் மீதும் இவர் திணித்தார். "இயற்கை எல்லா அறிவுகளையும் கொண்ட குரூர அரசி. இயற்கையின் 'தன்னைப் பாதுகாக்கும் தன்மை' வெட்கமற்ற தன்னலம் கருதுவதுடன், திறமையானதும் வலுவானதின் வெற்றிக்கு அடிகோலுவதும் ஆகும்." என்கிறார்.

கொச்சைப்படுத்தபட்ட டாவினிச விளக்கத்தினூடு 'சோசலிச' கிட்லர் சமூகத்தில் மட்டுப்படுத்தப்படாத போட்டி வாய்ப்பினிற்கெதிராக எவ்வாறு வெற்றி கொள்கிறார் எனக் கவனிப்போம். பல தேசிய இனக் குழுக்களுக்கிடையிலான கூட்டு முயற்சிக்கெதிரான விவாதத்தில், "இவ்வாறான சேர்க்கையில் சக்தியின் சுதந்திரமான போக்கு கட்டுப்படுத்தப்படுகிறது. திறமையானதைத் தேர்ந்தெடுப்பதற்கான நிகழ்வு தடைப்படுகிறது. அத்துடன் வலிய, அறிவாற்றல் கூடிய மனிதனின் இறுதி வெற்றி என்றென்றும் தடைப்படுகிறது" என்கிறார். ஆனால் வேறிடங்களிலோ வேறுபட்ட சக்திகளின் சுதந்திரமான இயக்கம்தான் 'வாழ்வைப் பற்றிய பேரறிவு' எனவும் குறிப்பிடுகின்றார்.

உண்மையிலேயே டார்வினின் கொள்கை சாடோ–மாசோக்கியத் தன்மை வாய்ந்ததல்ல. ஆனால் மாறாக மனிதனின் கூர்ப்பு மூலம் கலாச்சார சிகரங்களை எட்டுவதற்கான நம்பிக்கையின் தொனி. கிட்லரிற்கோ இதுவே தனது சாடிசத் தன்மையை நியாயப்படுத்தும் ஓர் ஊடகம். உளவியல் ரீதியாக டார்வினின் கொள்கையின் முக்கியத்துவம் பற்றி அரைவேக்காட்டுத்தனமான கருத்துக்களை முன்வைத்தார். உதாரணமாக இவர் மூனிச்சில் வாழ்ந்தபோது (இந்தக் காலத்தில் இவர் யாருமே அறியாத ஒரு அனாமதேயம்) காலை ஐந்து மணிக்கு எழும்பிவிடுவாராம். அவ் அதிகாலைவேளையில் "எனது சிறிய அறையினுள் வரும் எலிகளுக்கு மீதிப் பாண் துண்டுகளைச் சிறிய துகள்களாக்கிப் போடும் பழக்கத்திற்குள்ளானேன். இச் சிறிய பிராணிகளின் உணவிற்கான போராட்டத்தைக் கவனிப்பேன்."

இந்த 'விளையாட்டு' ஒரு சிறிய அளவிலான டார்வினின் "வாழ்விற்கான போராட்டம்" கிட்லரிற்கோ இது வேறுவிதமான ஓர் விளையாட்டு. குட்டி பூர்சுவா ஒருவர் தன்னை ரோமப் பேரரசனாகப் பார்க்கும் விளையாட்டு. உலகரங்கில் அவர் விளையாடப்போகும் சரித்திர விளையாட்டிற்கு முன்னோடி.

கடைசியான அவரது சாடிசத்திற்கான நியாயப்படுத்தல் –மற்றையவர்களின் தாக்குதலிற்கு எதிராகத் தன்னை பாதுகாத்தல். கிட்லரின் எழுத்துக்களின் பல இடங்களில் இது பிரசன்னமாகிறது. அவரும் ஜேர்மன் மக்களும் என்றுமே குற்றமற்றவர்கள். சூதுவாது அறியாதவர்கள். ஆனால் எதிரிகள்தான் சாடிசக் காட்டுமிராண்டிகள். இவ்வாறான பிரச்சாரம் சுதந்திரத்திற்கெதிரானதும், பொய் என்று தெரிந்தும் உண்மையென உருவகப்படுத்தியதும் ஆகும். ஆனாலும் உணர்வு ரீதியாக ஓரளவேனும் 'உண்மை' உள்ள கற்பனையான குற்றச்சாட்டுக்கள். இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் தனது சாடிச உருவகத்தையும் பேரழிவுத் தன்மையையும் கண்டுகொள்ளாதிருக்க காவலரணாகப் பயன்படுத்தப்பட்டன. இவ்வாறான காவலரண்கள் ஒரு சமன்பாட்டுக்கமையவே எழுப்பப்பட்டன. நீதான் சாடிச உட்கருத்துக் கொண்டவன். எனவே நான் தூய்மையானவன். ஆனால் கிட்லரைப் பொறுத்தவரை இச் சமன்பாடு பொய்யானதே. அவரது எதிர்ப்பு அரண் உண்மைக்குப் புறம்பான எல்லையையே தொட்டு நின்றது. எதிராளிகளை என்னென்ன குற்றச்சாட்டுக்களைக் காட்டி குற்றம்சாட்டினாரோ அவைகளையே அவர் வெளிப்படையாகத் தனது இலட்சியமாக ஒப்புக்கொண்டார். யூதர்களை, கொம்யூனிஸ்டுகளை, பிரான்சியர்களை தனக்கும் ஜேர்மன் மக்களுக்கும் எதிராக சதிசெய்பவர்கள், தங்களை அடக்க நினைப்பவர்கள் என்று குற்றம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாட்டிக் கொண்டே அவர்களுக்கெதிரான தனது நடவடிக்கைகளை நியாயமானதெனச் சாதித்தார். இவ்வாறாக தனது சொல்லிற்கும் செயலுக்கு மிடையிலான பொருந்தாத் தன்மையை நியாயப்படுத்தலால் நிரவிவிடுகின்றார். "யூதர்கள் பிரான்சிய ஆபிரிக்கத் துருப்புக்களை ரைன் நதிக்கரைக்கு எங்களை அழிக்கும் நோக்கத்திற் காகவே கொண்டு வருகிறார்கள்" என்றும், "இதன்மூலம் இனக் கலப்பினால் வெள்ளையினம் மாசுபடும்" என்றும், "அத்துடன் அவர்கள் தாங்கள் எஜமானர்கள் ஆகிவிடுவார்கள்" என்றும் கூறினார். கிட்லரின் இந்தக் குற்றச்சாட்டில் தான் எதைத் தனது உயர்ந்த இலட்சியமாகக் கருதுகிறாரோ, அதனையே அவர்கள்மீது குற்றச்சாட்டாக வைக்கும் முரணான தன்மையைக் கண்டு கொண்டு, அதை நியாயப்படுத்த முனைகிறார். "யூதர்களின் தற்காப்பு உணர்விற்கும், ஆரியர்கள் உலகை ஆழ்வதற்கான முயற்சியில் அவர்களின் தற்காப்பு உணர்வுக்குமிடையில் குணாம்சங்களில் பாரிய வேறுபாடு இருக்கின்றன" என முடிக்கிறார்.

இதே குற்றச்சாட்டை பிரான்சியர்களுக் கெதிராகவும் வைக்கின்றார். "பிரான்சியர்கள் ஜேர்மனின் கழுத்தை நெரித்து அதனது பலத்தைப் பறிக்க நினைக்கின்றனர்" என்கின்றார். இதையேதான் பிரான்சியர் ஐரோப்பாவில் மேலாதிக்கம் பெற நினைக்கும் முயற்சியை முறியடிக்கும் நடவடிக்கையில் விவாதமாக வைக்கின்றார். பின்பு, தான் பிரான்சியத் தளபதியாக இருந்தால், தானும் இதைத்தான் செய்திருப்பேன் என்றும் ஒப்புக்கொள்கிறார்.

"கொம்யூனிஸ்டுகள் மனிதப் பண்பற்றவர்கள், கொடூரமானவர்கள்" என்பது இவரின் குற்றச்சாட்டு! "மார்க்சியத்தின் வெற்றி அதன் அரசியல் நோக்கத்தினை கொடூர வழியில் அடைவதற்கான முயற்சி. அதேநேரத்தில் ஜேர்மனின் குறைபாடு, எதையும் கவனத்தில் கொள்ளாத வீறுகொண்ட சக்திகளுடனான கூட்டில்லாமையும் உயர்ந்த அரசியல் நோக்கினை முன்வைத்து இக்கூட்டுடன் சாதிக்க முனைப்பில்லாமையும் ஆகும்" என்றும் கருத்துத் தெரிவித்திருந்தார். செக்கோஸ்லவாக்கியாவின் 1938 இன் பிரச்சனையும் அதன்பின் பான போரும் மேலேகுறிப்பிட்டது போன்று பல உதாரணங்களைக் கொண்டிருந்தன. நாசிகளுக் கெதிரான அடக்குமுறை அங்கு இல்லாததால், அடக்குமுறைக்கெதிரான தற்காப்பு நடவடிக்கை என்ற விளக்கம் அங்கு இடம்பெறவில்லை. செக்கோஸ்லாவாக்கியாவில் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் பொய்யானவை என்பதுடன் யூதர்கள், பிரான்சியருக்கெதிரான குற்றச்சாட்டி லிருந்த கற்பனைத்தனமான 'உணர்வு' க்குக்கூட இங்கு இடமில்லை. இவ்வாறான நடவடிக்கை களின் பிரச்சாரத்திற்கான பெறுமானத்தை மாத்திரம் பெற்றிருந்தன. சனத்தொகையின் ஒருபகுதி –குறிப்பாக நடுத்தர வர்க்கத்தின் கீழ்மட்டம்– அதனது வர்க்கக் குணாம்சமான சித்தப்பிரமை (Paranoid) நிலையில் இதை நம்பியது.

தேசிய விடுதலைப் போரில் ஈடுபட்டிருந்த மற்றைய குழுக்கள்மீதான, அவர்களது சக்தியற்ற நிலைமையின் மீதான, வெறுப்பு இவரது குணமான சத்தியற்றவர்கள் மீதான வெறுப்பின் வெளிப்பாட்டினை இனங்காண உதவியது. தேசிய விடுதலையே தனது தலையாய நோக்கெனக் கூறிக்கொண்ட இவர், அதே தேசிய விடுதலைக்கான போராட்டத்தை முன்வைத்த குழுக்களின்மீது, அவர்களது சக்தியற்ற தன்மையின்மீது, வெறுப்புக்காட்டிய போது, தேசிய விடுதலைக்கும் இவருக்கும் உண்மையிலேயே என்ன உறவிருந்ததென்பது புலனாகியது. இவர் மூனிச்சில் இருந்தபோது சிறிய தேசியவாதக் குழுவினில் சேர்ந்திருந்தார். முதலில் அக் குழுக் கூட்டத்திற்குச் சென்றபோது அவரது உணர்வு வெளிப்பாடு இவ்வாறிரு ந்தது..... "வெட்கம் வெட்கம்! இது ஏதோவொரு பொழுதுபோக்குச் சங்கம் மாதிரியல்லவா இருக்கிறது. இதிலா நான் அங்கத்தவனாவது? கடைசியாக புதிய அங்கத்தவர் சேர்ப்பது பற்றி விவாதிக்கப்பட்டது. நான் அதில் சிக்கிக் கொண்டேன்."

இந்த தேசிய விடுதலைக் குழுவை அவர் 'கேலிக்கிடமான ஓர் சிறிய சங்கம்' எனவும் அதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரேயொரு அனுகூலம் "தனிப்பட்ட ரீதியான சொந்த நடவடிக்கைகளுக்கு உகந்தது" எனவும் சாடினார். கிட்லர் தனது சமகாலத்தில் இருந்த எந்தப் பெரிய அரசியல் கட்சியிலும் தன்னை இணைத்துக் கொண்டிருக்கமாட்டேன் எனக் கூறினார். அவரைப் பொறுத்தவரை பலமற்ற ஓர் குழுவினிலேயே தான் தனது அரசியல் வாழ்வினைத் தொடங்கவேண்டும் என்றிருந்தார். அவரது தொலைநோக்கும் பலமும் பலம்வாய்ந்த இன்னுமொரு அமைப்பில் வெளிப்பட்டிருக்காது. ஏனெனில் அங்கு ஏற்கனவே இருக்கும் சக்தியுடன் மோதி, தன் பலத்தை நிலைநாட்டு வதற்கே அவரது சக்தி செலவழிந்து போய்விடும்.

பலமற்றவர்கள் பற்றிய அவரது நிலைப்பாட்டில் இந்திய சுதந்திரத்திற்கான போரைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். தேசிய விடுதலை பற்றிய கோசங்களை தனது சொந்த நலன்களை முன்னிட்டு வைத்த அதே கிட்லர், எந்தவித இராணுவ வலிமையற்ற இந்தியப் புரட்சிவாதிகள் பலம் பொருந்திய ஆங்கில சாம்ராச்சியத்திற் கெதிராகப் போராடத் திரும்பியபோது, அவர்கள் மேல் வெறுப்பையே உமிழ்கிறார். "யாரோ ஒரு ஆசிய நாட்டு பக்கிரியே... யாரோ எனக்கு அதைப் பற்றி கவலையில்லை. ஐரோப்பாவில் அலைந்து கொண்டு இவர் இந்தியாவின் உண்மையான சுதந்திரப் போராளியாம்! புத்திக் கூர்மையுள்ள ஐரோப்பிய மக்களை –இந்தியாவினை தனது அதிமுக்கிய பிரதேசமாக வைத்திருக்கும்– பிரித்தானிய சாம்ராச்சியம் நிலைகுலையப் போகிறதென நம்பவைக்கப் பார்க்கிறார்.... இந்தியக் கலகக்காரர்கள் இதனை ஒருபோதும் சாதிக்கப்ப போவதில்லை..... அங்கவீனர்களின் கூட்டணி ஒருநாளும் பலம்பொருந்திய ஒரு சாம்ராச்சியத்தை முறியடிக்க முடியாது..... இனரீதியாக தாழ்வான அவர்களது 'ஒடுக்கப்பட்ட' நாட்டையும், எனது நாட்டையும் நான் ஒருபோதும் ஒப்பிட்டுப் பார்க்கமாட்டேன்." என்கிறார்.

வறியவர்கள்மீது காதலும் பலமற்றவர்கள் மீது வெறுப்பும் சாடோ–மசக்கியிசத் தன்மை. இத் தன்மை கிட்லரினதும் அவர்களது சகாக்க ளினதும் அரசியல் நடவடிக்கைகள் பற்றிய அதிக விளக்கங்களைத் தருகிறது.

நாசிகளின் எழுச்சிக்கு முந்திய அரசு இவர்களை எதிர்க்காமல் இணக்கப் போக்கைக் கடைப்பிடித் தால்தான் இவர்களை சமாதானப்படுத்தலாமென எண்ணி கருணை காட்டத் தொடங்கியது. ஆனால் நாசிகளோ இதனால் ஆறுதலடைய வில்லை. மாறாக அரசின் சக்தியற்ற தன்மையும் நிர்வாகக் கொள்கைகளில் உறுதியற்ற தன்மையும் நாசிகளின் வெறுப்பைத் தூண்டவே உதவியது. கிட்லர் வைமர் குடியரசை வெறுத்தார். ஏனெனில் அது ஓர் பலமற்ற அரசாக இருந்தது. ஆனால் அக் குடியரசின் இராணுவ அதிகாரிகளை, பெருந்தொழில் உரிமையாளர்களை, அவர்களின் பலம்பொருந்திய நிலைமைக்காக ஆதர்ச புருஷர்களாகக் கண்டார். இவர் என்றுமே பலம்பொருந்திய பெரிய அமைப்புகளுக்கெதிராகப் போராடவில்லை. பலமற்ற சிறிய குழுக்களிற் கெதிராக போர்க்கொடியை உயர்த்தினார். கிட்லரதும் ஏன் முசோலினியினுடையதும் 'புரட்சிகள்' தங்களைப் பாதுகாத்துக்கொள்ளப் பலமற்றவர்களுக்கெதிராகவும், ஏற்கனவே திரட்டப்பட்ட இவர்களது பலத்தின் துணையுட னுமே நடந்தேறின. கிட்லரின் பிரித்தானியாவின் மீதான பார்வையானது பல காரணங்களுடன், (இங்கு விவாதிக்கப்படும்) உளவியல் தன்மையின் அடிப்படையிலும் பெறப்பட்ட ஒன்றாகும். பிரித்தானியா பலம்பொருந்திய அமைப்பென்று இவர் கருதும்வரை அதனை நேசித்தார். பிரித்தானியாவின் பலவீனங்களைக் காணத் தொடங்கியவுடன் இவரது காதல் வெறுப்பாக உருமாறத் தொடங்கியது. இதுவே அதனை நிர்மூலப்படுத்தும் ஆவலையும் கொண்டுவந்தது. புரிந்துணர்வு, இரக்கக் குணம் என்பன இவரைப் பொறுத்தவரை நட்பைக் கொண்டு வருதலுக்குப் பதிலாக வெறுப்பையே கொடுத்தது.

இதுவரை கிட்லரின் சித்தாந்தத்தின் சாடிசப் பக்கம் பற்றிப் பார்த்தோம். அதேபோல் இவ் விவாதத்தில் ஆட்சியதிகாரக் குணாம்சத்தில் சாடிசம் போலவே மசோசியசப் பக்கமும் இருப்பதைக் கண்டோம். இது தன்னைவிட அதிவல்லமை பொருந்திய சக்தியிடம் தன்னை அர்ப்பணிப்பதற்கான ஆவல், தனது தனித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தன்மையை அழித்துக் கொள்ளல், இதுதவிர பலமற்றவர்கள்மீது அதிகாரத்தை நிலைநிறுத்தும் ஆவல் என்பன. இந்த மச்சோயிசப் பக்கம் நாசிகளின் சித்தாந்தத்தில் அவர்களது ஆட்சியில் பொதுமக்கள் தொடர்பாக மிகத் தெளிவாகவே தெரிந்தது. பொதுமக்களுக்கு மிகத் தெளிவாகவே மீண்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்ட செய்தி : "ஒரு தனிமனிதன் அவனைப் பொறுத்தவரையில் எந்தவிதமான சக்தியுமே அற்றவன் என்பதை அவன் ஏற்றுக் கொள்ள வேண்டும். அவன் பெரிய சக்தியினுள் தன்னைக் கரைத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு இரண்டறக் கலந்து அப் பெரிய சக்தியின் வலிமை புகழ் என்பவற்றில் பங்கேற்று மகிழவேண்டும்." கிட்லர் சித்தாந்தம் பற்றிய தனது கருத்தில் இதைத் தெளிவாக இவ்வாறு வரையறுத்தார் : "சித்தாந்தம் மாத்திரமே மனிதர்களை தன்னிச்சையாக ஆளுமையின் முன்னுரிமையை அதன் பலத்தை ஏற்றுக்கொள்ள வும், இதனால் உலகினை ஆளும் முதன்மைச் சக்தியினுள் தங்களை சிறு தூசித் துகள்களாக இணைத்துக் கொள்ளவும் வழிவகுக்கும்."

கொபபெயல்ஸ்சும் ஏறத்தாழ இவ்வாறான ஒரு வரையறையையே சோசலிசம் எனக் கருதி முன்வைத்தார். ஒரு 'சோசலிசவாதி' 'நான்' என்ற உணர்வினை அழித்து 'நீ' ஆகிறான். சோசலிசம் என்பது தனிமனிதன் 'நான்' என்பதை முழுமையாகத் தியாகம் செய்வதுதான் என்றார்.

தனிமனிதத் தன்மையை தியாகம்செய்து தன்னை ஒரு தூசாக்கிக் கொள்வது கிட்லரைப் பொறுத்தவரை ஒரு தனிமனிதன் தனது அபிப்பிராயம் அவனது ஆவல்கள் சந்தோசம் என்பனவற்றின் உரிமையை விட்டுக்கொடுத்தல் அல்லது அழித்துக் கொள்ளல் என்றே தெளிவாகிறது. இவ்வாறான உரிமைத் துறப்பு அரசியல் அமைப்புகளுக்கு மிகத் தேவையானது. இவ்வாறான அமைப்புகளில் "தனிமனிதர்கள் தங்களது சொந்தக் கருத்துக்களையோ தாம்சார்ந்த நலன்களையோ முன்வைப்பதைக் கைவிட்டுவிடுவார்கள்." சுயநலமற்ற தன்மையை இவர் வெகுவாகப் புகழ்ந்து மக்களுக்கு ஓர் தார்மீகப் பாடத்தையும் போதிக்கிறார். "தங்களது சொந்த மகிழ்விற்கான வேட்டையில் மக்கள் மோட்சத்தில் இருந்து நரகத்தினுள் நழுவி விழுந்துவிடுகின்றனர்" என்றார். கல்வியின் நோக்கமே தனிமனிதத் தன்மையை பலப்படுத்துவதிலிருந்து தவிர்த்துக் கொள்ளப் பயிற்றுவிப்பதே. "ஒரு பையன் பாடசாலையிலேயே நீதியான குற்றச்சாட்டுக்களை மாத்திரமன்றி எவ்வித அடிப்படையுமில்லாத குற்றச்சாட்டுக்களைக்கூட மௌனமாக ஏற்றுக் கொள்ளப் பயிற்றுவிக்கப்படுகிறான்" என்கிறார். தனது இறுதி வெற்றியைப் பற்றி எழுதுகையில்... "மக்கள் குடியரசில் மக்களின் சிந்தனை இறுதியாகவும் வெற்றிகரமாகவும் ஓர் கட்டத்தினை வந்தடையவும், இக் காலகட்டத்தில் மனிதர்கள் உயர்தர நாய்கள், குதிரைகள், பூனைகளை வளர்த்தெடுப்பது பற்றிய தங்கள் கரிசனையை மனித சமுதாய மேம்பாட்டிற்காகச் செலவழிக்கவும், அதேவேளையில் ஒருவர் எதற்காக விட்டுக்கொடுக்கின்றார் என அறிந்து அமைதியாக விட்டுக்கொடுக்கவும், மற்றையவர் மகிழ்ச்சியாக விட்டுக்கொடுத்து தியாகம் செய்யவும் ஆயத்தமாயிருப்பார்கள்" என்கிறார்.

மேற்கூறிய விடயம் சிறிது ஆச்சரியமானதாக உள்ளது. "எதற்காக விட்டுக்கொடுக்கின்றார் எனத் தெரிந்து அமைதியாக விட்டுக்கொடுக்கவும்..." என்ற வசனத்தின் பின் இன்னுமொரு அணி எதிரானதாக வந்திருக்கவேண்டும். அது இப்படியாக இருக்கலாம், தலைமை வகிக்கும் அணி அன்றேல் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்ட அணி என்றுகூட இருந்திருக்கலாம். ஆனால் கிட்லர் மற்ற அணியையும் 'தியாகத்தின்' அடிப்படையிலேயே விபரிக்கின்றார். 'அமைதியாக விட்டுக் கொடுத்தல்', 'மகிழ்ச்சியாக தியாகம் செய்தல்' என்ற இருபதங்களையும் விளங்கிக் கொள்வது கடினமாகவுள்ளது. எனது ஊகம் சரியானதாயின், கிட்லர் தனது எண்ணத்தில் நிதர்சனமாகக் கண்டது தியாகம் செய்யும் மக்களையும் ஆளும் ஆட்சியாளர்களையும் தான். வெளிப்படையாகவே தான் ஆளுவதற்கான 'உயர்வான' நோக்கினை அவர் வெளிப்படுத்தி யிருப்பினும் பலவேளைகளில் அதனை மறுத்து மிருக்கின்றார். இந்த சர்ச்சைக்குரிய வசனத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இதனை வெளிப்படையாகக்கூற விரும்பவில்லை. எனவேதான் ஆளுவதற்கான ஆவலை அவர் 'மகிழ்வுடன் தியாகம் செய்தல்' என மாற்றி விட்டார். சுய ஒறுப்பு, தியாகம் பற்றிய தனது தத்துவம் பொருளாதார ரீதியல் எவ்விதமான மகிழ்விற்கும் இடமற்றவர்களுக்கானதே என்பதை கிட்லர் தெளிவாகவே உணர்ந்திருந்தார். சமூகத்தின் நிலையை மாற்றி ஒவ்வொரு தனிமனிதனிக்கும் மகிழ்வினைத் தரக்கூடிய அமைப்பினை உருவாக்க இவர் விரும்பவேயில்லை. வறுமையையே இவர் ஆயுதமாகப் பாவித்தார். இதன் மூலம் தனது போதனையான 'சுய ஒறுப்பினை' மக்கள் நம்பும்படியும் செய்தார். மிகத் தெளிவாகவே இவர் இதனை வெளிப்படுத்தினார். "நாம் மிகப்பெரிய வறுமையான மக்கள் தொகையினரைப் பார்க்கின்றோம். இவர்களது தனிப்பட்ட சொந்த வாழ்க்கைதான் உலகின் அதியுயர்ந்த செல்வந்த நிலை என்றிருப்பினும் அதில் அவர்களுக்கு எந்தவித நாட்டமுமில்லை."

'தியாகம்' பற்றிய முழுப் போதனைகளுக்கும் பின்னால் ஓர் வெளிப்படையான காரணமுள்ளது. மக்கள் தங்களை விட்டுக் கொடுத்து ஆளுமையை ஏற்றுக்கொள்ள வேண்டும் – அதாவது தலைவரதும் அவரது சகாக்களினதும் பதவிக்கான மற்றும் ஆளுமைக்கான ஆவலை நிறைவேற்ற வேண்டும். இவ்வாறான தன்மை கிட்லரின் குணாம்சத்திலும் காணக்கூடியதாக இருந்தது. அவரைப் பொறுத்தவரை தன்னைத் தானே அர்ப்பணித்துக் கொண்ட உயர்சக்திகளாக கடவுள், விதி, சரித்திரம், இயற்கை... என்பனவாக விரிந்தன. இவை எல்லாமே அவரைப் பொறுத்தவரை ஒரேயொரு கருத்தைத்தான் கொண்டிருந்தன. இவையெல்லாமே தனக்கும் மீறிய மிக வலிமைவாய்ந்த சக்தி என்பதுதான் அது. தனது சுயசரிதையின் ஆரம்பத்தையே இவ்வாறுதான் தொடங்கினார். "எனது நல்லகாலமாக விதி எனது பிறப்பிடத்தை 'பிறவ்நவ்' இலுள்ள 'இன்' என்ற இடத்தைத் தேர்வுசெய்தது (Braunau On The Inn)" என்கிறார். தொடர்ந்து எழுதுகையில்... "ஜெர்மனியர்கள் எல்லோருமே ஓர் நாட்டின் கீழ் கூடவேண்டும். அப்போதுதான் இந் நாடு எங்களுக்குச் சிறிய தாகப் போவதன் மூலம் தேவையின் உந்தலால் தார்மீக அடிப்படையில் நிலப்பரப்புக்களையும் பிரதேசங்களையும் நமதாக்கிக் கொள்ளலாம்." என்கிறார். 1914–1918 நடந்த போரின் தோல்வி இவரைப் பொறுத்தவரை 'புரிந்த குற்றங்களுக்கான தண்டனையே.' ஒரு நாடு மற்றைய இனங்களுடன் கலப்பதால் 'படைப்பின் சக்திக் கெதிராகப் பிழை செய்கின்றனர்' என்கிறார். இதை இன்னுமொரு சந்தர்ப்பத்தில் "படைப்பின் கர்த்தாவிற்கெதிராக நடக்கின்றார்கள்" என்றார். "ஜெர்மனியின் பணி 'பிரபஞ்சங்களைப் படைத்தவரின்' கட்டளை. மோட்சம் மக்களை விட உயர்ந்தது. மக்களை மடையராக்கலாம் ஆனால் மோட்சத்தினை லஞ்சம் கொடுத்து வளைத்துவிட முடியாது." என்றார்.

கிட்லரை ஆச்சரியப்பட வைத்த சக்தி கடவுளோ, படைப்பின் இரகசியமோ, விதியோ அல்ல. இவைகளிலும் மேலாக இயற்கைதான் அந்த சக்தி. ஏனெனில் கடந்த நானூறு வருட சரித்திர நிகழ்வில் மனிதனின் மேல் ஆதிக்கம் செலுத்திய இயற்கையை மனிதன் ஆதிக்கம் செய்ய முடிந்ததுதான். கிட்லரின் கூற்று மனிதர்களை ஒருவன் ஆளவேண்டும்; ஆனால் இயற்கையை ஒருவன் ஆளமுடியாது என்பது. முன்பு குறிப்பிட்டதுபோல் –இவரின் கூற்றுப்படி– மனித சரித்திரம் மிருகங்களைப் பழக்கியெடுத்ததில் ஆரம்பிக்கவில்லை. நிலையில் குறைந்த மனிதர்கள் மீதான மற்றவர்களது அதிகாரத்தினால் தான் ஆரம்பமானதென்பது. இயற்கையை மனிதனால் வெல்ல முடியுமென்ற கருத்தை கேலியாகக் கொச்சைப்படுத்தும் இவர், "இயற்கையை வெல்வோம்" என்பவர்களையும் கேலியாகவே பார்த்தார். "ஏனெனில் அவர்களிடம் இந்த எண்ணத்தைத் தவிர வேறெந்த ஆயுதமுமில்லை" என்றார். தொடர்ந்தும்... "மனிதன் இயற்கையை வெல்லவில்லை; மாறாக இயற்கையின் சில இரகசியங்களையும் அடிப்படை விதிகளையும் அறிந்துகொண்டு, அதன்மூலம் இவ் அறிவினைப் பெறாத மற்றைய உயிரினங்களின் எஜமானனாக உயர்ந்து விட்டான்" என்று விளக்கமளித்தார். மீண்டும் இதே கருத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாங்கள் பார்க்கக் கூடியதாக இருக்கின்றது, அவர் சொன்னார்...

'அதாவது இயற்கை நாம் அடிபணிய வேண்டிய மாபெரும் சக்தி; ஆனால் உயிர்வாழ்பவைகளை நாம் அடக்கியாளலாம்.'

இதுவரை கிட்லரின் எழுத்துக்களிருந்து -முன்பே நான் விபரித்தபடி- ஆட்சியாதிக்கக் குணாம்சத்தின் இருவிதமான உணர்வுகளான 'ஆளுமைக்கான தீவிர ஆவலையும்' அதேபோன்றே 'தன்னிலும் பெரிய சக்தியிடம் தன்னை அர்ப்பணிப்பதற்கான போக்கினையும்' கண்டோம். கிட்லரின் சிந்தனையும் நாசிக் கட்சியின் சித்தாந்தமும் ஏறத்தாழ ஒன்றாகவே இருந்தன. இக் கட்டுரையில் காணப்படும் அவரது சிந்தனைகள் அவரின் எண்ணற்ற கூட்டங்களில் தனது உரைகளின் மூலம் குறிப்பிட்டவை. இதே கூட்டங்களின் மூலம் தனது கட்சிக்கான மக்கள் திரளையும் அவர் பெற்றார். நாசிச் சித்தாந்தம் கிட்லரின் தனிப்பட்ட குணாம்சமான தாழ்வு மனப்பான்மை, வாழ்வின் மீதான வெறுப்பு, சுய ஒறுப்பு, அத்துடன் வாழ்வினை மகிழ்வாக வாழ்வோர் மீதான வெறுப்பு என்ற அடிப்படைகளைக் கொண்டது. இதுபோன்றே மேற்கூறப்பட்ட குணங்களே சாடோ-மசோகிசத்தின் விளைநிலமாகும். இவைகளே மக்களுக்கும் எடுத்துச் சொல்லப்பட்டது. தங்களது குணாம்சங்களையே படிப்பினைகளாக கிட்லரின் வாய்மூலம் கேட்ட அதே குணங்கொண்ட மக்கள் சாரிசாரியாக அவரைப் பின்தொடர்ந்தனர். சித்தாந்தம் மாத்திரம் கீழ்மட்ட மத்தியதர மக்களின் மனநிறைவினைக் கொடுக்கவில்லை. நடைமுறையிலும் படிநிலை அமைப்பொன்று (Hierachy) நிறுவப்பட்டு, இதில் ஒவ்வொருவரும் தனக்குமேல் ஒருவரிடம் தன்னை அர்ப்பணிக்கவும் தனக்குக்கீழ் உள்ளோரை அதிகாரம் செய்யவும் வழி கிடைத்தது. தலைவர் விதி, சரித்திரம், இயற்கை என்ற அவரிலும் பெரிய 'சக்திகளிடம்' தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். இவ்வாறு நாசிச் சித்தாந்தம் மக்கள் திரளில் ஒருபகுதியினரின் குணாம்ச அடிப்படையிலான உணர்வுகளின் நிறைவைக் கொடுத்தது. மிகுதி மக்களோ வாழ்க்கையின்மீதே நம்பிக்கை இழந்து தாங்களாகவே சுருங்கிக் கொண்டனர்.

இங்கு விபரிக்கப்பட்ட நிலைமைகளும் கருத்துக்களும் எதிர்காலத்தில் நாசிசத்தின் இருப்பிற்கான தகவல்களை எங்களுக்குத் தருகின்றனவா? என்னால் எந்தவொரு திடமான முடிவினையும் முன்வைக்க முடியாதிருக்கிறது. ஆயினும் சில கருத்துக்களை -குறிப்பாக உளவியல் அடிப்படையிலான கருத்துக்களை- உன்னிப்பாக நோக்குவது இங்கு அவசியமாகின்றது. ஒரு சாராரின் உணர்வினை நாசிசம் திருப்திப்படுத்தவில்லையா? இந்த உளவியல் காரணமே அதன் தொழிற்பாட்டையும், வளர்ச்சியையும், இருப்பையும் உறுதி செய்யவில்லையா?

ஆயினும் இதுவரை சொல்லப்பட்டவைகள் எல்லாவற்றையும் வைத்துப் பார்க்கையில் இவ் வினாவிற்கான விடை எதிர்மறையே! மனிதன் தனது 'ஆரம்பத் தழைகளில்' இருந்துவிடுபட்டுத் தனித்துவமுடையவனாக மாறினான். எனவே முந்திய நிலைமைக்கு இவனால் செல்ல முடியாது. சரித்திரத்தின் இடைக்கால நிலைமை வழக்கொழிந்து போக நானூறு வருடங்கள் எடுத்தன. எங்கள் காலத்தில் இதன் முடிவு நடந்தேறியது. தற்போதைய தொழிற்துறை அமைப்பும் உற்பத்தி அமைப்பும் முற்றும் முழுவதுமாக அழிக்கப்பட்டு தொழிற்துறையின் வளர்ச்சிக்கு முந்திய காலகட்டத்தின் நிலைமை மீண்டும் வந்தால்தான்(!) தனித்துவம் பெற்ற மனிதனாக மீண்டும் மாற வாய்ப்புண்டு.

மனிதனால் எதிர்மறையான சுதந்திரத்தைப் பொறுத்துக் கொள்ள இயலாதெனக் கண்டோம். அதனால்தான் அவன் இச் 'சுதந்திரத்திலிருந்து' தப்பித்துக் கொள்ள புதிய உறவுகளினுள் தன்னை நுழைத்துக் கொள்கின்றான். இவை இவனது 'ஆரம்பத் தழை' களுக்கான மாற்றீடே. ஆனால் இப் புதிய உறவுகள் மூலமும் கூட இவனால் நடைமுறையுடன் இனங்காணவியலாது போய்விடுகிறது. இப் புதிய உறவுகளினூடு கிடைக்கும் பாதுகாப்பிற்கும் முழுமையான சமுதாயத்தினின்றும் பிரிந்து சிறு கூடு ஒன்றினுள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புகவேண்டிய கட்டாயத்தையும் எதிர்நோக்கு கின்றான். இவனுக்கும் அதிகாரமுடையோருக்கும் இடையேயுள்ள அதிகார நிலைமை மாறுபடாமலே இருக்கும். இவ்வாறான அதிகாரத்திற்கு ஏலவே தன்னை உணர்வு பூர்வமாக அர்ப்பணித்துக் கொண்டிருப்பினும், இவனது வாழ்க்கையில் இது குறுக்கீடுகள் மூலம் இவனை முடக்கத்தான் போகின்றது. அதேபோலவே இவனது சூழலானது சமூகத்தில் இவன் 'சிறுதுகளாக' வாழும் நிலையுடன் கூடவே, தனிமனித சுதந்திரத்தைப் பேணுவதற்கான வாய்ப்பையும் கொண்டதாகவே இருக்கின்றது. நவீன பெருந்தொழிற்துறைப் பொருளாதாரம் மனிதனின் பொருளாதார சுபீட்சத்தை உறுதிப்படுத்துவது மாத்திரமல்லாது, மனிதனின் அறிவு, உணர்வு, புலனுணர்வு போன்றவற்றின் முழு வெளிப்பாட்டினைத் தூண்டுவதாகவும் அமைகிறது. தொழிற்துறை நவீனத்துவம் வேலைநேரத்தினைக் குறைக்கவும் வழிசெய்தது.

சமூகத்தில் ஆட்சியாதிக்கச் சித்தாந்தம், அதன் நடைமுறை என்பவற்றை நரம்பியல் நோயின் குணாம்சங்களுடன் ஒப்பிடலாம். தாங்கமுடியாத உளவியல் அழுத்தங்களே இதன் காரணி. அதேவேளையில் இதற்கான தீர்வையும் ஆட்சியாதிக்க நிலைமை முன்வைக்கின்றது. இந்தத் தீர்வுகள் உண்மையிலேயே அமைதியான மகிழ்வான வாழ்வினைச் சமூகத்துக்கு உறுதி செய்யும் தீர்வுகளல்ல. இவ்வாறான தீர்வுகள் பிரச்சனைக்கான காரணிகளை எந்தவிதத்திலும் களையாமலும் மாற்றாமலும் விட்டுவிடுகின்றன. மனிதனின் ஆக்கசக்தி ஓர் முக்கியமான காரணியாக, இவ் வினாக்களுக்கு விடைதேடுவதிலும் அதனை அடைய முடியுமாயின் அடைவதற்கான முயற்சியிலும் பங்கெடுத்துக் கொள்கிறது. அன்னியமாகியும் சக்தியற்றும் போகும் மனிதன், ஏறுதிசையில் செல்லும் உற்பத்திச் சக்திகளின் தேவையின்போது வெளிப்படுத்தும் ஆற்றலானது "ஆற்றல் சக்திகளாக" அவனது சுதந்திரத்திற்கான ஆவலுக்குத் துணைபோகும். மாறாக உண்மைச் சுதந்திரத்தை விடுத்து வேறு வழிகளில் தான் தப்பித்துக் கொள்ளப் பார்த்தால் அது குறுகிய காலத்திற்கு அவனுக்கு மறைவிடமாக இருக்குமே யொழிய அவனது அல்லல்களை என்றுமே தீர்க்கப்போவதில்லை. மனித வரலாற்றின் வளர்ச்சி என்பது மனிதனின் தனித்துவத்தினதும் சுதந்திரத்தினதும் வளர்ச்சி ஆகும். சுதந்திரத்திற்கான வேட்கை இயற்கையின் தத்துவங்களால் விளங்கப்படுத்த முடியாத பிரபஞ்ச இரகசியமல்ல. அது மனித நாகரீகத்தின், மனித சாராம்சத்தின் வளர்ச்சி கோரிநிற்கும் தேவையையொட்டியது. ஆட்சியாதிக்க அமைப்பால் சுதந்திரத்திற்கான தேடுதலின் மையக் காரணிகளை அழித்துவிடவும் முடியாது; அதேபோலவே இக் காரணிகளினால் எழும் சுதந்திர வேட்கையையும் அழித்துவிட முடியாது !


-முற்றும்-

**தமிழில் - தேவா**

இக் கட்டுரை Erich Fromm எழுதிய Escape from Freedom என்ற நூலிலிருந்து மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது.

Erich Formm :

- 1900 இல் Frankfurt இல் பிறந்தவர்.
- 1922 இல் Heidelberg University இல் சமூகவியலில் PhD பட்டம் பெற்றார்.
- 1925 காலப்பகுதிகளில் சமூக கலாச்சார பிரச்சினைகளை உளவியல் பகுப்பாய்வு அடிப்படையில் ஆய்வுசெய்வதில் ஈடுபடலானார்.
- 1933 இல் தற்காலிக விரிவுரையாளராக அமெரிக்கா சென்ற அவர் அங்கு குடியேறினார்.
- பின்னர் சர்வதேச உளவியல் பகுத்தாய்வு சங்கத்தில் சேர்ந்து பணியாற்றினார்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

5 ←

பாகுபாடுகளை சந்திக்க வேண்டியிருக்கும் என்பதை சொல்லாமலே புரிந்து கொள்ள முடியும். அதுவும் வெளிநாட்டவர்களின் உரிமைகளில் பலமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கான சட்ட அமுலாக்கத்திற்கான அமோக ஆதரவை சனங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட இன்றைய நிலைமையில்........

அச்சமே மிகுதியாக!

இன்னொரு செய்தி:

சுவிஸில் நீண்டகாலமாக வசித்துவரும் வெளிநாட்டவர்களுக்கு -கன்ரோன் ரீதியில் நிகழும் தேர்தல்களில்- வாக்களிக்கும் உரிமையைக் கொடுக்கும் சட்டத்தை கொண்டுவருவதற்கான ஒரு அபிப்பிராய வாக்கெடுப்பும் பேர்ண் (Bern) கன்ரோனில் நிகழ்ந்தது. வாக்குரிமையை வழங்குவதற்கெதிராக 77 வீத வாக்குகள் போடப்பட்டுள்ளன. ஒரேயொரு நிர்வாகப் பிரிவில் மட்டும் (LA NEUVEVILLE) வெளிநாட்டவருக்கு வாக்குரிமை வழங்கப்படுவது 47 வாக்குகள் வித்தியாசத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. கன்ரோன் ரீதியில் வெளி நாட்டவரின் வாக்குரிமைக்காக சூரிச் (Zürich), பாசல் (Basel) போன்ற கன்ரோன்களில் நிகழ்ந்த அபிப்பிராய வாக்கெடுப்பில் அதிக பெரும்பான்மையினர் எதிர்த்தே வாக்களித் துள்ளனர்.

இத்தகைய வாக்களிக்கும் உரிமை நெதர்லாந்து, ஸ்கண்டிநேவிய நாடுகள் மற்றும் இங்கிலாந்திலும் நீண்டகாலமாக இருந்து வருவது குறிப்பிடத்தக்கது.

வெளிநாட்டவருக்கெதிராக கூடிய அழுத்தத்தை பிரயோகிக்கக் கோரும் சட்ட அமுலாக்கத்திற்கு ஆதரவாக 73 வீத அமோக வாக்குக்களைப் பெற்றுள்ள இன்றைய நிலைமையில் வெளிநாட்டவரின் வாக்குரிமை பற்றிப் பேசியென்ன........!

## ஒரு பகிரங்கக் கடிதம் ....

நேசமுடன் அபூரணன் அவாகளுக்கு,

கிட்டத்தட்ட கடந்த இரண்டு ஆண்டு காலமாக மனிதம் வெளிவருவதற்கு கணிசமான அளவுக்கு நீங்கள் உதவி வந்துள்ளீர்கள். காலத்துக்குக் காலம், நேர்காணல்கள், "மலையக மக்கள்" போன்ற தொடர்கட்டுரைகள், "இலங்கைச் செய்திகள்" ஆகியவற்றை எழுதியும்/ அனுப்பியும் நீங்கள் செய்த உதவிகளை மனிதம் ஆசிரியர் குழு சார்பில் நாம் மறப்பதற்கில்லை. ஆயினும் கடந்த சில மாதங்களாக எங்களுடனான உங்கள் தொடர்பைத் துண்டித்துள்ளீர்கள். நீங்கள் எழுதிய கடிதத்திற்கு நாங்கள் பதில்களை அனுப்பி வைத்தோம். உங்களுடன் பேசும் நோக்கில் [redacted] தொலைபேசியில் இரண்டு தடவைகள் தொடர்பு கொண்ட போதும், நீங்கள் அவற்றை அலட்சியப்படுத்தி விட்டீர்கள் போல் தெரிகிறது. இப்போ எமக்கு ஒரு சந்தேகம். எங்கள் சார்பாக உங்களுக்கு ஏதாவது முரண்பாடு ஏற்பட்டிருப்பின் அவற்றை எம்முடன் பகிர்வதுதான் பத்திரிகையாளனுக்குரிய தர்மம் ஆகும். மாறாக நீங்கள் இதுவரை எமக்காற்றிவந்த உதவியை தொப்பென்று கைவிட்டுள்ளீர்கள். இந் நிலைமை உங்கள் சார்பாக வேறு பத்திரிகைகளுக்கு ஏற்படக் கூடாது என்பது எமது எதிர்பார்ப்பாகும்!

-ஆர்குழு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வண்ணத்துப் பூச்சிகளின் கண்காட்சி

வண்ணத்துப் பூச்சிகள்
கண்காட்சியொன்றை நடாத்தின
மனிதர்களின் பார்வைக்காக.

நுழைவுக் கட்டணம்,
இலவசம்.
பார்வையாளருக்கு
தொட்டு நக்கத் தேனும்,
பூச்செண்டும் வழங்கப்படும்.

தான் பறித்துச் சேகரித்த பூக்களை
நுழைவாயிலினோர பீடத்தில்
பரப்பி வைத்திருந்ததொரு
வண்ணத்துப்பூச்சி.
வண்ணப்பூக்களின் வாசனை
மண்டபத்தைச்சூழ
பூத்துக் கிடந்தது.

மஞ்சள், சிவப்பு, ஊதா என்று
சில நிறங்களில்
தான் சேகரித்த தேனை
கண்ணாடிக் கோப்பைகளிலிட்டு
அழகாய்
அடுக்கிவைத்திருந்ததொரு
வண்ணத்துப்பூச்சி.

வெள்ளை, மஞ்சள், ஊதா,
கறுப்பு நிறங்களில்
கத்தை கத்தையாய்
கட்டிவைத்திருந்தது ஒன்று.
"மனிதர்களின் மயிர்" என
குறிப்புச்சீட்டும் தொங்கியது.

ராட்சத வண்ணத்துப் பூச்சியொன்று
தன் முன்னால்
பரிசோதனைக் குழாய்கள் பலவற்றை
அடுக்கி வைத்திருந்தது.
எல்லா குழாய்களுள்ளும்
சிவப்புநிற திரவம்
நிறைக்கப்பட்டிருந்தது.

"மனிதர்களுக்கான போட்டி.
இந்தக் குழாய்களொவ்வொன்றிலும்
ஒவ்வொரு தேசத்து மனிதர்களின்
குருதியும் உள்ளது.
கண்டு பிடியுங்கள்
எந்தெந்தத் தேசமென்று.
சரியான பதிலுக்கு
ஒருபடி சுத்தமான தேன்"

எல்லா மனிதர்களும்
போட்டி மையத்தை
மொய்த்து நின்றனர் ஈக்களைப்போல்.
மூலைகளில் நின்று
வண்ணத்துப்பூச்சிகள்
கொடுப்புக்குள் சிரித்தன.

**புலம்பன்**

### சுட்டிக்கல்

*பாயற்றுப் புழுதியில்*
*படுத்த விடத்தில்*
*முள்ளந்தண்டில் பொறுத்த*
*சுட்டிக் கல்லை பொறுக்கி*
*உள்ளங் கையிலிட்டு*
*"இதோ!*
*இதோ!! எங்கள்*
*முதுகினை முறித்த*
*மலை இதோ" என*
*தேசமெங்கும் புலம்பி*
*திரிதலே எங்கள்*
*பாடாய்ப் போயிற்று*
*ஏன்? ஏன்? தன*
*திந்தினக்குத் தினதிம்*
*திந்தினக்குத் தினதிம்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இமைமூட...

புறாக்களும் கிளிகளும்
பிணங்களில் குந்தியிருந்து
கடித்துக் கடித்து தின்றன

ககனவெளியில்
முயற்கூட்டம் பறந்தபடி
குருதி கொட்டுண்ட நிலத்தை
நோட்டமிட்டன குடித்து மகிழ

அணில்களெல்
பிணங்களின் க
பிடுங்கித் தின்ப
வளம் பார்த்துத்

புறாக்களும் கி
எலும்புத் துண்
இழுத்துச்சென்ற
புதர்மறைவுக்கு

தலைகளை ம
வாயிற்போட்டுக்

ஆடுகளும் மா
தங்களுக்குத் தே
தங்கள்தங்கள் கு
தாராளமாகவே

மரங்களிலும், க
தொங்கும் உடல்
ஒழுகும் ஊனை
நிலத்தில் நின்றப
அண்ணார்ந்து
தொண்டைக்குழி
சேர்த்துக்கொண்ட

பூனை நாய், கூட
காகங்கள்
எல்லையில் நின்
சுட்டிக்காட்டின எ
"அதோ!
அதுவே உனது பு

எனது முன்னங்கா
தலையில் அடித்து
என்னிடம் அனும
எனது வால்
கண்ணீரைத் துடை

*தமயந்தி –* **கவிதைகள் பாடல்கள்**

## பாடல்கள்

### சித்தெறும்பு

*காலிடுக்கில் மிதிபட்ட*
*சித்தெறும்பைப் பிடித்து*
*பிட்டவித்த நீத்துப்பெட்டி*
*தன்னிலதை அடைத்து*
*சோதனைச் சாலைகளென*
*பலவுமாய்த் திரிந்து*
*சாதனைகள் செய்தோம் சவம்*
*தின்னும் கொடு விலங்கை*
*கொன்றோம்! கொன்றோம்!! என*
*சாலைகள், சோலைகள், மலைச்*
*சாரல்கள் மதில்களென*
*பொறித்துப்புலம்புமெங்கள்*
*காலங்கள் நீளுதின்னுமேன்!.*
*தன – திந்தினக்குத் தினதிம்*
*திந்தினக்குத் தினதிம்*
*திந்தினக்குத் தினதிம் தா.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்த அரசமரமும் கோயிலடிச் சந்தியும்

ஆயிரம் காகங்கள் குருவிகள்
அடித்துப்பிரண்டு
அண்டத்துக் கதைகள் பேசி
ஆட்களால் நிரம்பி வடிந்த
கோயிலடிச் சந்தியும்
அந்த அரசமரமும்
கும்மாளமடித்த
தங்கள் காலங்களையெண்ணி
ஒரு குழந்தையைப்போல்
குளறிவடித்தன தனிமையில்

காற்றில்
சருகுகள் விழுந்தன
பழுத்த இலைகள்
பாரத்தால் நடுங்கின
துவக்குகள்
கிழித்த கிளைகள்
பட்டைகள் உரிந்து
பாவமாய் எனைப்பார்த்தன

மூளைசிதறி
முகமும் வயிறும்
ஊதிப்பெருத்து
மூக்குத்துவாரத்துக்கு வெளியே
சிதில் வடிய
நேற்றோ
அதற்கு முந்திய நாளோ
துவக்குகள் தின்றுபோட்ட
ஒரு மனிதனின் பிணம்கூட
இன்னும் அனாதையாய்.....

காற்றில்
இலையான்கள்
சிணுசிணுக்க....

தலைமாட்டில்
உட்கார்ந்து
மூளையைக் கொத்தி இழுத்த
காகங்கள்
கத்திக்கத்திக் கட்டிப்பிரண்டன

வெறுமை பூசிய
வெறும் வெளியாய்
கோயிலடிச்சந்தி....

என்னமாய்
இருந்த இடங்கள்
எப்பிடிப்போச்சி இப்ப....

எவன் செய்த
சூனியமோ
இது....

மூக்கைமட்டும்
பொத்தியபடி
முன்னால் நடந்தேன்

என்னகிளி
இந்தப்பக்கம் தனியா...?
வந்தானுகளெண்டால்
உன்னையும்
உயிரோட சுட்டுத்தின்னுவானுக
ஓடுடா பொடியா ஓடு
விம்மிவிம்மியழுதபடி
உரத்துச் சொன்னது
அரசமரம்.

- P.ர ன்
..10.93)